தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

TAMIL NADU LEGISLATIVE LIBRARY
6 FEB 1981
MADRAS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1980 ஜூலை 8.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :—

''சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது''

ஒருவன் தான் எண்ணிய ஒன்றைப் பிறர் விருப்பத்துடன் ஏற்றுக்கொள்ளும் வகையில் சொல்ல வல்லவனாகவும், அவ்விதம் சொல்லும்போது எத்தகைய சொல், பொருள், குற்றங்களையும் செய்யாதவனாகவும், தான் சொல்ல விரும்பும் ஒன்றைச் சொல்லுவதற்கு வேண்டிய அஞ்சாமை உடையவனாகவும் இருந்தால், அவன் பேச்சில் குற்றம் கண்டு அவனை வெல்லுவதற்கு எவராலும் இயலாது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, நீங்கள் குறள் சொன்னீர்கள், அதற்கு அர்த்தமும் சொன்னீர்கள். ஆனால் எங்களுக்குப் புரியவில்லையே. எனவே, நிறுத்திச் சொன்னால் நன்றாக இருக்கும்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, எனக்குத்தான் புரியவில்லை என்று எண்ணிக் கொண்டிருந்தேன். எனக்குப் புரியவில்லை என்றாலும் பரவாயில்லை. ஆனால், திரு. அழகர்சாமி அவர்களும் புரியவில்லை என்று சொல்லுகிறார்கள் என்றால் ஏன்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பெரிய புலவருடைய பொழிப்புரையைச் சொல்லியிருக்கிறேன். அதற்கு மேலும் நான் புரிய வைக்க வேண்டுமென்றால் அது கஷ்டமான காரியம். நான் சொல்லும்பொழுது அதிலே கவனம் செலுத்த வேண்டும், வேறு எங்கோ பார்த்துக் கொண்டு இருக்கக் கூடாது.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, குறளுக்குப் பதவுரையைச் சொன்னால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொழிப்புரைதான் சொல்ல முடியும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

பாம்பன் பாலம்.

*கு. கா. வி. எண் 8—திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாம்பன் பாலம் எப்பொழுது கட்ட ஆரம்பிக்கப்பட்டது?

(ஆ) மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

(இ) இப்பொழுது என்ன நிலைமையில் இருக்கிறது?

(ஈ) தொடர்ந்து வேலை நடக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) பாம்பன்பாலம் 17—11—1974 அன்று கட்ட ஆரம்பிக்கப்பட்டது.

(ஆ) மதிப்பீட்டுத் தொகை ரூ. 532·87 இலட்சங்களாகும்.

(இ) பால வேலை இதுகாறும் 36 சதவிகித அளவிற்கு முடிவு பெற்றுள்ளது.

(ஈ) தற்பொழுது வேலை நடைபெறவில்லை. ஒப்பந்தக்காரர்கள் ஜூலை 1979 முதல் வேலையை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளனர்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவரவர்களே, 1979 ஆம் ஆண்டிலிருந்து இந்த வேலை நிறுத்தப்பட்டிருப்பதற்கான காரணம் என்ன? அது யாருடைய தவறு? அரசு இதனைத் தொடர்ந்து நடத்துமா? இங்கிருந்து இலங்கைக்குப் பத்து மைல் தூரம்தான். எனவே, தமிழ்நாட்டிற்கும், இலங்கைக்கும் இணைப்புப் பாலம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பால வேலை கடந்த 17—11—1974 அன்று ஆரம்பிக்கப்பட்டு, கடந்த நான்காண்டுகளுக்குள் அதாவது 16—11—1978-க்குள் முடிப்பதாக ஒப்பந்தம் முடிவாகியது.

1980 ஜூலை 8]

அதன்படி முடிவு அடையாமல் கடந்த 1979- லேயிருந்து தேக்கம் ஏற்பட்டு நிறுத்தப்பட்டிருப்பதனுடைய காரணமெல்லாம் கடந்த 24—11—1978- லே மண்டபம் பகுதியைத் தாக்கிய புயல் காரணமாகப் பால வேலை செய்வதற்கு அத்தியாவசியமாக ஒப்பந்தக்காரர்களினால் அமைக்கப்பட்ட தற்காலிக கட்டுமான வேலைகளும், மற்றும் அவர்களுக்குச் சொந்தம் ஆகிய பால வேலையின் உபயோகத்தில் இருந்த இயந்திரங்களும், தளவாடங்களும் சேதத்திற்கும் இழப்புக்கும் உள்ளாகியது. புயலின் காரணமாக ஏற்பட்ட சேதத்திற்கும் இழப்பிற்கும் நஷ்டயீட்டுத் தொகையாக ரூ. 20·66 இலட்சங்கள், மற்றும் இதர கூடுதல் செலவுகளும் அவர்கள் கேட்டு விண்ணப்பம் செய்துள்ளனர். அப்படிக் கூடுதல் செலவு என்கின்ற அடிப்படையிலே அவர்களுக்கு நாம் நஷ்டயீட்டுத் தொகை கொடுப்பது என்று சொன்னால் மிகப்பெரிய தவிர்க்க முடியாத இடையூறு ஏற்பட்டால் ஒழிய அந்த நஷ்டயீட்டுத் தொகை கொடுக்க முடியாததாக இருக்கிறது. ஆகவேதான் அரசு பரிசீலனை செய்து கடந்த 1964- லே ஏற்பட்ட புயலையும், 1978- லே ஏற்பட்ட புயலையும் ஒப்புநோக்கி பார்த்துத்தான் இவைகளையெல்லாம் முடிவுக்குக் கொண்டுவர வேண்டிய சூழ்நிலையிலே இருக்கின்றோம். ஆகவே, அட்வகேட்-ஜெனரலுக்கு—தலைமை வழக்கறிஞருக்கு இது குறித்து மறுமுறையும் அனுப்பப்பட இருக்கிறது.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவரவர்களே, ஒப்பந்தக்காரர்கள் நஷ்டயீடு எவ்வளவு கோரியிருக்கிறார்கள்? அதற்கு என்ன வழிவகையை அரசு செய்து கொண்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் சொன்னதைப்போல ரூ. 20·66 இலட்சங்களும் அதற்குமேல் கூடுதல் செலவுகளும் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். மேலும், மாண்புமிகு உறுப்பினரவர்கள் இலங்கைக்கு இணைப்புப் பாலம் போடுவது பற்றிக் கேட்டிருக்கிறார்கள். இணைப்புப் பாலம் பற்றிக் கவலையில்லை. ஆனாலும் இந்தப் பிரச்சினையில் மத்திய அரசுதான் முடிவு செய்ய வேண்டுமே தவிர மாநில அரசு முடிவு செய்ய முடியாது. இது இரு நாடுகளுக்கு இருக்கின்ற பிரச்னையாக இருப்பதால் கட்டுகின்ற இணைப்புப் பாலம் இக்கட்டான பாலமாக அமைந்து விடக்கூடாது என்பதையும் நாம் கருத்திலே கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

திரு செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பாலம் 1978-லே புயலால் பாதிக்கப்பட்டது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதற்கு நஷ்டஈடு கிட்டத்தட்ட ரூ. 22 இலட்சத்திற்குக் கொடுத்தால்தான்

நான் வேலை செய்வேன் என்று அந்த நீலகண்டன் பிரதர்ஸ் என்ற காண்ட்ராக்டர் சொல்லிக்கொண்டிருக்கிறார். அதைக் கொடுக்க வேண்டியது மாநில அரசா, மத்திய அரசா? யார் பொறுப்பில் அந்தப்பால வேலை நடந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, நஷ்டஈட்டுத் தொகை ரூ. 20·66 இலட்சம். ஆனால், அதற்கு மேலாக அவர்கள் கேட்கிறார்கள். இதரக் கூடுதல் செலவு என்கிற அடிப்படையிலே அவர்கள் கேட்கிறார்கள். ஆனால், கூடுதல் செலவு கொடுக்கவேண்டுமென்று சொன்னால், அது excepted risk தவிர்க்க முடியாத ஒரு இடையூறாக இருந்தா லொழிய அந்தக் கூடுதல் செலவைக் கொடுக்க முடியாது. மேலும் ஒப்பந்தக்காரர்கள் இன்ஷூரன்ஸ் செய்திருக்க வேண்டும். ஒப்பந்தப் புள்ளியிலே ஏற்கெனவே ரூ. 6 இலட்சம் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒப்பந்தப் புள்ளி அடிப்படையிலே அவர்கள் இன்ஷூரன்ஸ் செய்யாத காரணத்தாலே, அந்தப் பணத்தைக் கொடுக்க வேண்டுமா, வேண்டாமா என்ற பிரச்னை இன்னும் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. அதே நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதைப்போல், அந்தப் பிரச்னையை முடிவு செய்ய வேண்டியது மத்திய அரசு தானே ஒழிய மாநில அரசு அல்ல.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பாம்பன் பாலம் கட்ட ஒப்பந்தம் செய்த ஒப்பந்தக் காரர் யார் ? எவ்வளவு தொகைக்கு முன்பு ஒப்பந்தம் செய்யப் பட்டது ? திருத்தப்பட்ட பிறகு எவ்வளவு தொகைக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டது ? எவ்வளவு வேலை நடைபெற்றது ? எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, திருவாளர்கள் நீலகண்டன் பிரதர்ஸ் என்கின்ற ஒப்பந்தக்காரர் கள்தான் அந்த வேலையை எடுத்தார்கள். கடந்த 1974 நவம்பர் மாதத்திலே அந்த வேலை துவங்கப்பட்டது. கடந்த 1979 வரையிலும் 36 சத விகிதம் வேலைகள்தான் முடிவடைந் திருக்கின்றன. ஏறத்தாழ ரூ. 221 இலட்சம் ரூபாய்க்குண் டான வேலைகள் முடிவடைந்துள்ளன.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, இந்தப் பாலம் மக்களுக்கு மிக அவசியமாக தேவைப்படுகிறது. அந்த வேலை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக மாண்புமிகு அமைச்ச ரவர்கள் சொன்னார்கள். அதனால் நாளுக்கு நாள் அதனுடைய மதிப்பு உயர்ந்துகொண்டே போகும். ஆகவே, அரசாங்கம்

விரைவாக முடிவெடுத்து, அந்த வேலையை விரைவிலே முடிக்க அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இந்த வேலையைச் சீக்கிரமாக முடிக்க வேண்டுமென்பதற்காகத் தான் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஏற்கெனவே நான் சொன்னதைப் போல், ஒப்பந்தக்காரர்கள் கூடுதல் செலவு என்கிற அடிப்படையிலே கேட்கிற காரணத்தால், கூடுதல் செலவு இதரச் செலவுகள் என்கிற அடிப்படையிலே ஏறத்தாழ கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொடுக்க வேண்டி வரும். கோடிக்கணக்கான ரூபாய்களை, excepted risk தவிர்க்க முடியாத இடையூறாக இருந்தாலொழிய கொடுக்க முடியாத சூழ்நிலையிருக்கிறது. ஆகவே, 1964-லே ஏற்பட்ட புயலையும் 1978-லே ஏற்பட்ட புயலையும் கணக்கிலே கொண்டுதான் இந்தத் தொகையை நிர்ணயிக்க வேண்டியிருக்கிறது.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, இராமேஸ்வரம் இந்தியாவிலே முக்கியமான ஷேத்திரம் என்கிற வகையிலே நாட்டுமக்கள் அங்கே வசதியாக, கார் மூலம் செல்ல வசதியாக இந்தப் பாலம் அமைக்கப்பட்டது. ஆனால், இப்பொழுது பாதிக் கிணறு தாண்டியதைப் போல, பாதிக் கடல் தாண்டியிருக்கிறது. அதை முழுமையாக பூர்த்தி செய்யாவிட்டால் பல கோடி ரூபாய் விரயமாகும் என்ற நிலை இருக்கிறது. ஆகவே, மத்திய சர்க்காருக்கு எடுத்துச் சொல்லி, சட்டரீதியாக என்ன சிக்கல் இருந்தாலும் அதைத் தீர்த்து வேலையைத் துவக்கி முடித்து வைக்க இந்த அரசு வற்புறுத்துமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, பாதிக் கடல் கூட அல்ல. மூன்றில் ஒரு பங்குதான் முடிவடைந்திருக்கிறது. ஆகவே, அதற்கான உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டோம். ஆனால் அவர்கள் திரும்பவும் தலைமை வழக்கறிஞர் நியமிக்கப்பட்டவுடன், அவரைக் கலந்து, இவ்வரசின் கருத்தை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

திரு. இ. முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, தனிப்பட்ட ஒருவருக்கு கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தத்தை ரத்து செய்து விட்டு, பொதுப் பணித் துறையே அந்தப் பணியினை ஏற்று நடத்தும் திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, ஏற்கனவே இருக்கக்கூடிய ஒப்பந்தக்காரருடைய ஒப்பந்தம் என்ன ஆவது என்கிற பிரச்னைதான் இப்பொழுது அரசின் பரிசீலனை யில் இருந்து வருகிறது.

[முற்பகல் 9-10]

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்திலே லேபர் கான்ட்ராக்ட் கோவாபரேடிவ் சொசைட்டி என்று 3 சொசைட்டிகள் இருக்கின்றன. அவைகள் நல்ல முறையிலே நடைபெறுகின்றன என்று அரசாங்கம் சொல்லி யிருக்கிறது. இந்த வேலையை அப்படிப்பட்டவர்களிடம் கொடுத்துச்செய்யும்படி சொன்னால் மிகவும் நன்றாக இருக்கும். அல்லது அரசாங்கமே இந்த வேலையை எடுத்து நடத்தினால் கோடிக்கணக்கான ரூபாய்கள் தனிப்பட்டவர்களுக்குப் போய் சேராமல் தடுக்க வாய்ப்பிருக்கிறது. இதை அரசு பரிசீலிக்க முன்வருமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இது ஏற்கனவே ஏற்பட்ட ஒப்பந்தமாகும். 1974-லே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிப் பொறுப்பிலே இருந்த நேரத்திலே ஏற்பட்ட ஒப்பந்தம். ஆகவே புதிதாக இப்படிப்பட்ட ஒப் பந்தம் இருக்குமாயின், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனை பரிசீலிக்கப்படும்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த ஒப் பந்தம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த நேரத்தில் ஏற்பட்டது என்று சொன்னார்கள். அப் போது பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தவர், இன்றைய தினம் ஆளும் கட்சியினுடைய பொதுச் செயலாளராக ஆகி யிருக்கிறார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் பாம்பன் பாலத்தின் ஒப்பந்தத்தை அங்கீகரிக்கும் உரிமை மாநில அரசுக்கு இருந்ததா அல்லது மத்திய அரசுக்கு இருந்ததா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இது முழுமையாக மத்திய அரசின் திட்டத்தின் கீழ் வருகிறது இது 49-நெடுஞ்சாலை என்று மண்டபத்தின் அருகாமையில் இருக்கக்கூடிய பாலம். ஆகவே இது முழுக்க முழுக்க மத்திய அரசின் பட்டியலிலே இருக்கிறது.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, இராமேஸ் வரத்துக்கும், மண்டபத்திற்கும் இடையே கட்டப்படுகின்ற இந்தப் பாலம் தவிர்க்கப்பட்டாலும், புண்ணியஸ்தலமான

[1980 ஜூலை 8]

தனுஷ்கோடிக்கு சாலைகள் அமைத்து, அந்த இடத்தை மேலும் அபிவிருத்தி செய்யும் திட்டம் ஏதேனும் அரசுக்கு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒப்பந்தம் போடப்பட்டு, கட்டப்படவேண்டிய பாலமே மூன்றில் ஒரு பங்கு வேலையோடு நிறுத்தப்பட்டுள்ளது. என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் *உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, விதி 54-ன் கீழ் மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வருவார்.

உ. தகவல் கோரல்.

(அ) கேரள நதிநீர் பங்கீடு.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, மேற்குப் பக்கமாக போகின்ற நதிகளின் நீரை தமிழகத்திற்குக் கொடுப்பதைப் பற்றி நேற்று கேரளாவில்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தினசரி ஏதாவது பேசுகிறீர்கள். நிகழ்ச்சி நிரலில் உள்ள பிரச்சினையை முடித்து விட்டு, அடுத்த பிரச்சினைக்கு வரலாம்.

பேரவை விதி 54-இன் கீழ் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் திருவாளர்கள் மு. அம்பிகாபதி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், டி. மணி, என். வரதராஜன், கே. ஆர். சுந்தரம், கே. எம். தங்கமணி, இ. முத்துராமலிங்கம், என். எஸ். வி. சித்தன், சோ. அழகர்சாமி, எம். ஆறுமுகம், இரா. கருப்பையா ஆகியோர் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். திரு. மு. அம்பிகாபதி.

(ஆ) பேரவையில் ஒலிபெருக்கி வசதி.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வருவதற்கு முன்னால் என்னுடைய முதல் வேண்டுகோளாக உங்களிடம் கொண்டு

வருவது, இங்கே 4 பேர்களுக்கு ஒரு மைக் தான் இருக்கிறது. நாங்கள் தாவித் தாவிப் பேச வேண்டி இருக்கிறது. அதனால் பேச முடியவில்லை. எனவே முன் வரிசையிலே உள்ளதைப் போல மைக் ஒரு வாரத்திற்குள் அரேன்ஜ் செய்ய வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் முதலிலே கவன ஈர்ப்புத் தீர்மானத்தைப் படிக்க வேண்டும். அதற்கு அவை முன்னவர் பதில் சொல்வார்கள்.

3. கவன ஈர்ப்பு.

அ. திண்டிவனத்திற்கு அருகில் ஏற்பட்ட லாரி விபத்து.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, ''திண்டிவனத்திற்கு அருகே 2—7—1980 அன்று ஏற்பட்ட லாரி விபத்தில் 14 பேர் இறந்தது'' பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1—7—1980 அன்று இரவு டி.எம்.டி. 2354 என்ற லாரி ஒன்று 880 கிலோ எடையுள்ள குளோரின் வாயு நிறைந்த 6 கலங்களை (Cylinders) மதராஸ் கோதாரி தொழிற் கூடத்திலிருந்து மேட்டூர் மைகா தொழிலகத்திற்கு ஏற்றிக் கொண்டு சென்றது. லாரி ஓட்டுநர், தாம்பரத்தில் சேலம் மாவட்டத்திற்குச் செல்லும் பதினைந்து பிராணிகளையும் அந்த லாரியில் ஏற்றிக் கொண்டார். நள்ளிரவு சுமார் 12 மணிக்கு திண்டிவனத்திலிருந்து 11 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கோனே குப்பம் என்ற கிராமத்தின் அருகில் அந்த லாரி சென்றபோது அதன் வலது முன் சக்கரத்தின் டயர் வெடித்ததால் தீப்பற்றிக் கொண்டது. குளோரின் வாயு நிறைந்த 6 கலங்களும் லாரியிலிருந்து தரையில் உருண்டன. அவற்றுள் ஒரு கலத்திலிருந்து குளோரின் வாயு வெளி வந்து கொண்டிருந்தது. இவ்விபத்தின் விளைவாகவும், குளோரின் வாயுவின் தாக்குதலாலும் லாரி ஓட்டுநர் உட்பட 14 பேர் இறந்து விட்டனர். மூவர் காயமடைந்தனர். காயமடைந்த மூவரில் க்ளீனரும் ஆவார். காயம் அடைந்தவர்கள் திண்டிவனத்தில் உள்ள அரசாங்க மருத்துவமனையில் உட்பிரிவு பிணியாளராகச் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெறுகின்றனர். இவ்

1980 ஜூலை 8] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

விபத்தில் இறந்த 14 பேர்களில் 8 பேர்களின் சடலங்கள் அடையாளங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. மற்ற ஆறு பேர்கள் சடலங்கள் அடையாளம் இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை. அவற்றைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அடையாளம் தெரியாத ஆறு பேர்களின் சடலங்களும் புகைப்படங்கள் எடுக்கப்பட்டு விளம்பரங்கள் கொடுக்கப்பட்ட பிறகு உரிய அவகாசம் அளித்த பின் 4—7—1980 அன்று திண்டிவனத்திலேயே அடக்கம் செய்யப்பட்டன. அடையாளம் கண்டு பிடிக்கப்பட்டுள்ள எட்டு குடும்பங்களின் வாரிசுகளுக்கு முதல் அமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 1,000 வழங்குவதற்காக அவர்களிடமிருந்து உரிய விண்ணப்பங்கள் பெறப்பட்டு தென்னாற்காடு மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. இறந்தவர்களின் சடலங்களைப் பரிசோதித்த மருத்துவ அதிகாரிகள் இறந்தவர்கள் குளோரின் வாயுவை சுவாசித்ததாலும், மற்றும் விபத்தினால் ஏற்பட்ட காயங்களுமே அவர்களின் இறப்புக்குக் காரணம் என்று கருத்து தெரிவித்து உள்ளார். விபத்துக்குள்ளான வாகனத்தை ஆய்வு செய்த இயக்கூர்தி ஆய்வாளர்; அவ்வாகனத்தில் முன்பக்க வலது டயர் வெடித்ததே இவ்விபத்திற்குக் காரணம் எனச் சான்றிதழ் வழங்கி உள்ளார். விபத்துக்குள்ளான வாகன ஓட்டுனர், மோட்டார் வாகன விதி 261, 262-ஐ மீறி 15 பேர்களை அவ்வாகனத்தில் ஏற்றிச் சென்றாலும், அவர் விபத்தில் இறந்து விட்டதால் அவர் மீது இ.பி.கோ. 304-ஏ பிரிவின் கீழ் வழக்குத் தொடர இயலவில்லை. விபத்துக்குள்ளான லாரியின் உரிமையாளர்மீது மோட்டார் வாகன விதி 112-ன் கீழ் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். விபத்துக்குள்ளான இடத்தைப் பார்வையிட்ட வெடி விபத்து துணை ஆய்வாளர் (Deputy Controller of Explosives) வாகனத்தில் இருந்த ஆறு கலங்களும் (Cylinders) நன்றாகவே மூடப்பட்டிருந்தன என்றும், திரவ குளோரின் அடைக்கப்படுவதற்கான விதிகளை அக்கம்பெனி மீறவில்லை என்றும் கூறியுள்ளார். இதன் தொடர்பாக ஓலக்கூர் காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு புலன் விசாரிக்கப்பட்டு வருகிறது.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் அருகே நடைபெற்ற இந்த விபத்தில் 14 பேர் இறந்து இருக்கிறார்கள். 8 பேருடைய அடையாளம் கண்டு பிடிக்கப்பட்டு இருக்கிறது. 6 பேர்களுடைய அடையாளங்கள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டவர்களின் குடும்பத்திற்கு ரூ. 1,000 முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவித் தொகை கொடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். லாரி உரிமையாளர்

இந்த விபத்திற்குக் காரணமாக இருப்பதால் உயிரிழந்த குடும்பம் ஒவ்வொன்றிற்கும் ரூ. 10,000 நஷ்ட ஈடு கிடைக்கும்படி செய்ய நம்முடைய அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா? ஏன் என்றால் ஒரு கோர விபத்து அங்கே நடந்து இருக்கிறது என்பதை அரசாங்கம் கவனத்தில் கொண்டு, அவர்களுக்குத் தகுந்த நஷ்ட ஈடு பெற்றுத்தர அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அந்த லாரி உரிமையாளர் மீது வழக்குத் தொடரப் பட்டு இருக்கிறது. ஆகவே, அந்த வழக்கின் அடிப்படையில் வருகின்ற தீர்ப்பை ஒட்டி, எவ்வளவு நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்பது அப்போது தான் கணிக்கப்படும். அப்படி கணிக்கப் படும்போது நாமும் வற்புறுத்த வாய்ப்பு இருக்கிறது. சட்டம் மீறுகின்ற தன்மையின் அடிப்படையில் அந்த விபத்து ஏற்பட்டு இருக்கிறது என்பதால் அந்த முழுப் பொறுப்பும் லாரி உரிமை யாளர் ஏற்க வேண்டும். நியாயமான முறையில், நியாயமாகப் பேசி அவர்களுக்கு நஷ்ட ஈட்டுத் தொகை பெற்றுத் தருவது பற்றி அப்போது பரிசீலிக்கலாம்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஏற்கனவே விதி 261, 262-ஐ மீறப்பட்டு இருப்பதாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அந்த விதி என்ன கூறுகிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புவ தோடு, அவர்கள் இன்சூரன்ஸ் ஏதாவது செய்து இருந்தால், அதன் அடிப்படையிலும் நஷ்ட ஈடு பெற்றுத் தர அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மோட்டார் வாகன் விதி 261, 262-ஐ பிரிவுப்படி 15 பேர்களை லாரியில் ஏற்றிச்செல்லக் கூடாது. அப்படி ஏற்றிச் சென்றது தவறு என்பது தெரிகிறது. லாரி ஓட்டுநர் அந்த விபத்தில் இறந்து விட்டதால், அவர்மீது வழக்கு தொடர முடியவில்லை. லாரியின் உரிமையாளர் மீது எந்த அளவிற்கு வழக்குத் தொடுத்து, அவரிடமிருந்து நிவாரணம் அல்லது நஷ்ட ஈடு பெற முடியும் என்பதை ஆலோசித்து, அதைச் செய்வதற்கு அரசு முயற்சிக்கும்.

திரு. டி. மணி: தலைவரவர்களே, இந்த லாரி விபத்தில் இறந்துபோன குடும்பங்களுக்கு அதிகமான நஷ்ட ஈடு கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

1980 ஜூலை 8]

[முற்பகல் 9–20]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் முதலிலே குறிப்பிட்டதுபோல மாண்புமிகு முதலமைச்சர் நிதியிலிருந்து இப்போது அடையாளம் கண்டு பிடிக்கப்பட்ட 8 பேர்களுடைய குடும்பங்களுக்கு நிவாரண நிதி வழங்கப்பட்டிருக்கிறது. மீதி 6 பேர்களுடைய சடலங்கள் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு அவர்களுடைய குடும்பங்களுக்கும் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். மேற்கொண்டு வழங்க லாரி உரிமையாளரிடம் இருந்து பெறமுடியுமா என்பதுபற்றி ஆராயப்படும்.

திரு. கே.ஆர். சுந்தரம் : தலைவரவர்களே, அடையாளம் கண்டுபிடிக்கப்படாதவர்களை அடையாளம் காட்டுவதற்காக அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகச் சொல்லப்படுகிறது. அதற்கான முயற்சிகளை எடுத்து, அவர்களுடைய குடும்பங்களுக்கும் இந்த உதவியைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதைப்பற்றி முதலிலேயே குறிப்பிட்டேன். அவர்களுடைய புகைப்படங்கள் எடுக்கப்பட்டு, காவல் துறை அலுவலகத்திலும் மற்ற இடங்களிலும் வைக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் புகைப்படங்களைப் பார்க்கின்றவர்கள் அடையாளம் கண்டுபிடித்து இன்னார் என்று சொல்லிவிட்டால் அவர்களுடைய குடும்பங்களுக்கும் இந்த உதவி அளிக்கப்படும்.

*திரு. கே. எம். தங்கமணி கவுண்டர் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட வாயு சிலிண்டர்களை சாதாரண லாரிகளில் எடுத்துச் செல்வதைத் தடுத்து, பிரத்தியேகமாக மூடிய வண்டிகளில் எடுத்துச் செல்வதைப்பற்றி அரசு பரிசீலனை செய்யுமா? அதோடு லாரிகளிலே ஆட்களை ஏற்றிச் செல்வதை தடை செய்திருந்தாலும் தொடர்ந்து இந்தமாதிரி நடைபெறுவதால் அரசு ஆழ்ந்து சிந்தித்து தடைச் சட்டத்தை தீவிரமாகச் செயல்படுத்த முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, லாரிகளில் டிரைவர், கிளினர்—இவர்களைத் தவிர மற்றவர்களை ஏற்றிச் செல்லக் கூடாது என்ற விதி இப்போது இருக்கிறது. அதிலும் குறிப்பாக இப்படிப்பட்ட விஷ வாயு சிலிண்டர்களை எடுத்துச் செல்லும்போது வேறு யாரையும் ஏற்றிச்செல்லக் கூடாது. அப்படி இருந்தும் இந்த விபத்து ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட சிலிண்டர்களை எப்படி எடுத்துச் செல்ல வேண்டுமென்று விதிகள் இருக்கின்றன. அதை மீறி இருந்தால் அதுபற்றியும் நடவடிக்கை எடுக்கலாம் அல்லது

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1980 ஜூலை 8

இந்த விபத்து ஏற்பட்ட அடிப்படையில் இதில் வேறு ஏதாவது மாறுதல் செய்ய வேண்டுமானால் அதுபற்றியும் அரசு பரிசீலனை செய்யும்.

*திரு. இ. முத்துராமலிங்கம் : தலைவரவர்களே, சென்னையிலிருந்து திண்டிவனம் செல்லும் வழியில் இந்த வாகனமானது எத்தனை இடங்களில் காவல் துறையினரால் 'செக்கிங்' செய்யப்பட்டது என்பதைக் கூறமுடியுமா? மேற்கொண்டு லாரிகளில் ஆட்கள் ஏறுவதைத் தடைசெய்ய இந்த வழித்தடங்களில் கூடுதல் பேருந்துகளை விட ஏதாவது திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, சென்னையிலிருந்து புறப்பட்ட இந்த லாரியை எத்தனை இடங்களில் பரிசோதனை செய்தார்கள் என்ற குறிப்பு இல்லை. அதைக் கண்டுபிடிக்கவும் முடியாது. தகவலுக்காக வேண்டுமானால் கேட்கலாம். காவல் துறையினருக்குச் சந்தேகம் ஏற்படுமானால் நிறுத்தி சோதனையிட வழி இருக்கிறது.

*திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, பொதுவாகவே லாரிகளில் ஆட்களை ஏற்றிச் செல்லக் கூடாது என்பது சட்டம். ஆனால் ஆளும் கட்சியினர் பதவிப்பிரமாண நிகழ்ச்சியின்போது அவர்களுடைய தொண்டர்களை அதிகமாக லாரிகளில் ஏற்றி வந்ததன் காரணமாக போலீசாரால் அந்தச் சட்டத்தை சரியாக அமுல்படுத்த முடியாமல் திணறுகின்ற காரணத்தால் இந்த விபத்துக்குள்ளான லாரியில் 14 பேர்களை ஏற்றிச்சென்றதை அவர்களால் தடைசெய்ய முடியவில்லை. இப்போது விவசாய சங்கத்தைச் சேர்ந்தவர்கள் சென்னைக்கு வரும்போது லாரிகளில் வந்தார்கள். அதைத் தடை செய்ய முடியவில்லை. ஆகவே அரசாங்கம் தடைச் சட்டத்தைக் கடுமையாகச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்குமா அல்லது தடைச் சட்டத்தை ரத்துசெய்துவிட்டு, எப்போதும் போலவே ஆட்களை ஏற்றிச்செல்ல வசதி செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்போது விவாதத்திற்கு வந்திருக்கிற கவன ஈர்ப்பு திண்டிவனத்திற்கு சென்ற லாரி விபத்து பற்றியது. அதைப் பற்றிய விவரம்தான் தரப்பட்டிருக்கிறது. லாரியில் 10, 15 பேர்களை ஏற்றிச்செல்வது என்பது இப்போதுள்ள அரசியல் கட்சிகள் அல்லது விவசாய சங்கத்தினர் லாரிகளில் ஆட்களை ஏற்றிச் செல்வதால் ஏற்படுகின்ற ஒன்று என்பது தவறு. லாரியை ஓட்டுகின்றவர்கள் உரிய கட்டணத்தை வாங்கிக்கொண்டு ஆட்களை ஏற்றிச்சென்று, ஆங்காங்கே இறக்கிவிடுவது நீண்ட நெடுங்காலமாக இருந்துவருகிறது. ஆகவேதான் இந்தத் தடைச் சட்டம் இருக்கிறது. அதைக் கடுமையாக்கி, கட்டுப்படுத்தலாம்;

1980 ஜூலை 8] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அல்லது இருக்கிற சூழ்நிலைக்கு ஏற்ப தளர்த்தவும் செய்ய லாம் ; எல்லோருக்கும் பொதுவாகவும் ஆக்கலாம். எந்த முடிவை வேண்டுமானாலும் சட்டத்தின் அடிப்படையில் மேற் கொள்ளலாம். ஆனால் இப்போது இருப்பது சட்டப்படி ஏறக் கூடாது என்பது. அந்த அடிப்படையில் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

* திரு. என்.எஸ்.வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்களே, அவையின் முன்னாலே வைக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையிலே அந்த லாரியின் டயர் வெடித்ததன் காரணத்தாலேதான் இவ் விபத்து ஏற்பட்டிருக்கின்றது என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் அது போதுமான காரணம் இல்லை என்ற அபிப்பிராயங் கள் இருந்துகொண்டிருக்கின்றன. மேலும் இதுபோன்ற வாயுக் கள் நிரம்பிய சிலிண்டர்களை எடுத்துச் செல்வதில் லாரியில் ஏற்றிக்கொள்கின்றவர்களுக்கும் பொறுப்புண்டு. அவர்கள் பாது காப்பான முறையில் ஏற்றிச் செல்வதற்கு ஏன் கவனம் செலுத்தப் படவில்லை என்பதோடு இந்தமாதிரியான வாயுக்களைக் கொண்ட சிலிண்டர்களை எடுத்துச் செல்கின்றபோது இன் ஷூரன்ஸ் செய்கின்றவகையிலே இன்ஷூரன்ஸ் முறைகளிலே இதற் கென்று ஏதாவது பிரிவுகள் இருக்கின்றனவா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவரவர்களே, விபத்துக்கான காரணங்களை ஆய்ந்த ஆய் வாளர்கள் அந்த லாரியின் முன் டயர் வெடித்ததன் காரணத் தாலேதான் இந்தவிபத்து ஏற்பட்டிருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அதாவது டயர் வெடித்ததும் பெரும் சத்தம் கேட்டு அதிலே வந்தவர்கள் கூட அப்போதுதான் விழித்துக் கொண்டு விட்டதாக அந்த லாரியில் வந்தவர்களில் ஒருவர் குறிப்பிட்டிருக்கின்றார். ஆக டயர் வெடித்ததன் காரண மாகத்தான் திசை மாறிச் சென்று மரத்திலே மோதி அதன் காரணமாக விபத்து ஏற்பட்டது என்பதை ஆய்வாளர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதிலே இன்ஷூரன்ஸ் பற்றிய விவரங்கள் இல்லை. ஆகவே, தனிக் கேள்வி போட்டால் அதுபற்றிக் கூற லாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்த மாதிரி லாரிகளிலே விஷவாயு கொண்ட சிலிண்டர்களை ஏற்றிச் செல்கின்றபோது பல இடங்களிலே விபத்துக்கள் ஏற்பட்டிருக் கின்றன. முன்புகூட எட்டயபுரத்தில் இதுபோன்ற ஒரு விபத்து ஏற்பட்டு சில வீடுகள் சேதம் அடைந்தன. அதிலே இறந்து விட்டவருக்குக்கூட இன்னும் உதவித்தொகை கிடைக்கவில்லை. மேலும் சிலிண்டர்களை ஏற்றிச்செல்கின்றபோது கண்டிப்பாக மூடி போட்ட லாரிகளில்தான் ஏற்றிச் செல்லவேண்டும் என்று இருக்கின்றது. ஆனால் அந்த விதியினையும் மீறி ஏற்றிக்கொண்டு

செல்கிறார்கள். ஆகவே அதைத் தடுக்கவேண்டும். மேலும் விபத்தில் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு லாரியினுடைய சொந்தக்காரராலோ அல்லது சம்பந்தப்பட்டவர்களாலோ நஷ்ட ஈடு தருவதிலே ஏற்படுகின்ற காலதாமதத்தைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மேலும் ஆயிரம் ரூபாய் என்று முதலமைச்சர் நிதியிலிருந்து கொடுக்கப்படுகிறது. முன்பு நடந்த விபத்திலே இறந்தவரின் குடும்பத்தினருக்கு இன்னும் அந்த உதவிகள் கிடைக்கவில்லை. ஆகவே கொடுக்கின்ற உதவியினைச் சீக்கிரமாகக் கொடுப்பதற்குத் துரிதமாக விதிகளை மாற்றி உதவி கிடைக்க நடவடிக்கை எடுக்க முயற்சி செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இறந்துவிட்டவர்களுடைய குடும்பங்களுக்கு நிவாரண உதவி எவ்வளவு விரைவிலே கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமோ அவ்வளவு விரைவிலே நடவடிக்கைகள் எடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது ஏற்பட்டிருக்கின்ற அனுபவங்களின் அடிப்படையில் இப்போது இருக்கின்ற போக்குவரத்து விதிகளிலே ஏதாவது மாற்றங்கள் செய்து அதைச் செம்மையாக ஆக்குவதன் மூலமாக இந்தத் துறையைச் சரியாக ஆக்க முடியும் என்றால் அதுபற்றி அரசு ஆராயும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஆறுமுகம் : தலைவரவர்களே, மோட்டார் வாகன விதி 261, 262 ஆகியவற்றை மீறி 15 பேர்கள் ஏறிச் சென்றிருக்கின்ற காரணத்தாலேதான் விபத்து ஏற்பட்டு இறந்து விட்டார்கள். சம்பந்தப்பட்டவர்கள் மீது வழக்கு தொடரப்படவில்லை என்று தெரிகின்றது. ஆகவே உரிமையாளர் மீது என்ன விதியின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டுவிட்டேன். இப்போதும் குறிப்பிடுகிறேன், உரிமையாளர் மீது மோட்டார் வாகன 112-வது விதியின் கீழ் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா : தலைவரவர்களே, பெருவாரியான லாரி விபத்துக்கள் இரவு 12 மணியிலிருந்து காலை 4 மணிக்குள் நடக்கின்றன. ஆகவே அந்த நேரங்களில் லாரிகள்

1980 ஜூலை 8] [திரு. இரா. கருப்பையா]

நடமாடுவதைத் தடை செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் படுமா? அதோடு லாரி விபத்திலே மரணம் அடையக்கூடியவர் களுக்கு நஷ்டஈடு அளிக்கக் கூடிய முறையிலே லாரிகளின் உரிமை யாளர்கள் மூலம் Hazardous insurance என்கின்ற திட்டத்தின் அடிப்படையிலே இன்ஷூர் செய்து அதன் மூலமாக நஷ்ட ஈட்டுத் தொகையைப் இறந்தவர்களின் குடும்பத்தினர் பெறு வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

(முற்பகல் 9-30]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லாரி ஓட்டத்தை சீர்படுத்துவது பற்றி முன்பே தமிழக அரசு பல திட்டங்களையும், பல்வேறு முயற்சிகளையும் செய்திருக்கிறது. நடுவில் சில காலத்தில் நள்ளிரவு 12 மணி முதல் விடியற்காலை 4 மணி வரையில் லாரிகள் ஓடக்கூடாது என்று தடுத்து நிறுத்தப்பட்டு நிறைவேற்றப் பெற்றன. ஆனால் அதிலேயும் சில சங்கடங்கள் இருக்கின்றன. சென்னையிலிருந்து தூத்துக்குடிக்கோ, திருநெல்வேலிக்கோ அவசரமாகப் போக வேண்டிய லாரிகள் இரவில் போக்குவரத்து அதிகமில்லாத நேரங்களில் விரைவாகப் போவதற்கு வழி இருக் கிறது. ஆனால் சில சமயங்களில் அதிலும் ஆபத்து இருப்பதாக தெரிகிறது. ஆகவே அது ஓட்டுநர்களின் தன்மையைப் பொருத்தது. சில நேரங்களில் அவர்களாகவே 12 மணி முதல் 4 மணி வரையில் நிறுத்திவிட்டு ஓய்வு எடுத்துக் கொண்டு செல்லலாம். நிதானமாகச் செல்பவர்களும் உண்டு, எச்சரிக்கை யாகச் செல்பவர்களும் உண்டு. அதையெல்லாம் ஓட்டுநர்க ளாகவே கடைபிடிக்கவேண்டுமே தவிர, நள்ளிரவு 12 மணி முதல் விடியற்காலை 4 மணி வரை லாரிகள் ஓடக்கூடாது என்று தடை விதிப்பது சாத்தியமல்ல. லாரிகள் பகல் நேரங்களில் விரைவாகப் போனால், போக்குவரத்து அதிகமாக இருக்கும் நேரமாதலால், பல சங்கடங்கள் உண்டாகும். ஆகவே ஓட்டுநர்கள்தான் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அடுத்து, லாரிகள் போக்கு வரத்துக்கு எப்படி இன்ஷூரன்ஸ் விதிகள் இருக்கின்றன என்று இங்கே என்னிடம் புள்ளி விவரங்கள் இல்லை. ஆனால் பல் வேறு விதமான இன்ஷூரன்ஸ்கள் இருக்கின்றன. ஆனால் தற்போதுள்ள அனுபவங்களின் அடிப்படையில் ஏதாவது ஒரு வகையில் இன்ஷூரன்ஸ்கள் இல்லாமல் இருக்குமேயானால், அதை மாற்றுவதற்கான வழி வகைகள் செய்ய ஆராயப்படும்.

3. (ஆ) திருச்சி அரசு மருத்துவமனையில் செவிலியர் போராட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 54-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வினைக்

குறித்து, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு, திருவாளர்கள் பொ. விஜயராகவன், அன்பில் தர்மலிங்கம், வெ. அரங்கராசன், டி. ஆர். இராசாராம் நாயுடு, ஆர். உமாநாத், இரா. தாமரைக்கனி, பி. முசிறிப் புத்தன் ஆகியோர் கொண்டு வருகிறார்கள். திரு. பொ. விஜய ராகவன்

திரு. பொ விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' திருச்சி அரசு மருத்துவ மனையில் செவிலியர் நடத்தி வரும் வேலை நிறுத்தப் போராட்டம் குறித்த''

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆணை எண். 600, சுகாதாரம் மற்றும் குடும்பநலம், நாள் 2—4—1979 வெளியிடப்பட்ட பின்னர், அதை செயல்படுத்துவதில் மருந்தாளுநர்களிடையும், செவிலியர்களிடையும் கருத்து வேறுபாடு மிகுதியாக ஏற்பட்டது. இந்த ஆணையை தொடர்ந்து வெளியிடப்பட்ட குறிப்பாணை களால் நிலைமை சீர்கேடு அடைந்தது. இவைகளால் சில பணிகளை மருத்துவமனைகளில் செய்ய செவிலியர்கள் மறுத்தனர். பொதுமக்கள் இதனால் பெருத்த இடையூறு அடைந்தனர். செவிலியர்களும், மருந்தாளுநர்களும், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இப்பிரச்சனை குறித்து கலந்து பேசி முடிவெடுக்க 7—7—80 அன்று கூட்டப்பட்ட கூட்டத்தில் மருந்தாளுநர் மற்றும் செவிலியர் சங்கப் பிரதிநிதிகள், மருத்துவக் கல்வி இயக்குநர், மருத்துவ பணி மற்றும் குடும்ப நலத்துறை இயக்குநர் ஆகியோர் கலந்து கொண்டனர். அனைத்து தரப்பினரது கருத்துக்களும் தெரிவிக்கப்பட்ட பின்னர், சுமுகமான முறையில் கீழ்க்கண்ட முடிவுகள் ஒருமனதாக எடுக்கப்பட்டது.

(1) எந்தெந்த மருத்துவ மனைகளில் மருந்து கோரிக்கை பட்டியல் தினமும் தயாரிக்கப்படுகின்றதோ, அங்கெல்லாம் அதே முறையைப் பின்பற்ற வேண்டும்.

(2) எந்தெந்த மருத்துவ மனைகளில் தேவை குறிப்புகள் தயாரிக்கும் முறை வார அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றதோ அங்கெல்லாம் இனி மூன்று நாளுக்கு ஒரு முறை தயாரிக்க வேண்டும்.

1980 ஜூலை 8] [டாக்டர் எச். வி. ஹண்டே]

(3) திருச்சிராப்பள்ளி தலைமை மருத்துவ மனையில், மருந்துகள் நாளுக்கு ஒரு முறை (Daily) பெறும் திட்டத்தை பின்பற்ற வேண்டும்.

(4) இத்திட்டங்களினால் மாவட்ட தலைமை மருத்துவ மனைகளில் வேலை பளு அதிகரிக்குமாகையால் அரசு தொழுநோய் கட்டுப்பாடு பிரிவுகளில் மிகுதியாக உள்ள மருந்தாளுநர்கள் தலைமை மருத்துவ மனைகளுக்கு மாற்றப்படுவார்கள்.

இந்த முடிவுகளை உடனடியாக நிறைவேற்ற மருத்துவப் பணி மற்றும் குடும்ப நலத்துறை இயக்குனர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். கருத்து வேறுபாடுகளை தவிர்த்து எந்தவித தகருறுகளுக்கும் இடமில்லாமல் இனி பணிபுரிவதாக இருதரப்பினரும் உறுதி அளித்துள்ளனர். நிலைமைகளை உணர்ந்து அரசுடன் ஒத்துழைத்தற்கு செவிலியர் மற்றும் மருந்தாளுநர் சங்கங்களுக்கு நன்றியினைதெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பொ. விஜயராகவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செவிலியர்களுக்கும், மருந்தாளுநர்களிடையேயும் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக இந்தப் போராட்டம் ஏற்பட்டதாக இந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. அதைத் தீர்ப்பதற்காக 7—7—1980 அன்று பேச்சு வார்த்தைகள் நடைபெற்று ஒருசில முடிவுகள் எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அதிலே ''இத்திட்டங்களினால் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் வேலைப் பளு அதிகரிக்குமாகையால் அரசு தொழுநோய் கட்டுப்பாடு பிரிவுகளில் மிகுதியாக உள்ள மருந்தாளுநர்களை தலைமை மருத்துவ மனைகளுக்கு மாற்றப்படுவார்கள்'' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படியென்றால் தொழு நோய் கட்டுப்பாடு பிரிவுகளில் மிகுதியாக உள்ள மருந்தாளுநர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள். அவர்களை இந்த அரசாங்கம் எக்ஸ்ஸாக இருக்கக்கூடிய பணியாளர்களாக வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்? அப்படி எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள்? எவ்வளவு பேர்கள் இந்தப் பணிக்காக தலைமை மருத்துவ மனைக்கு அனுப்பப்படுவார்கள் என்று அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழு நோய் கட்டுப்பாடு பிரிவு அலுவலர்கள் அதாவது மருந்தாளுநர்கள், நம்முடைய கணக்கின் படிசராசரியாக இரண்டு பேர்கள்தான் இருக்கிறார்கள். அங்கே வேலை இல்லாமல் இல்லை. அவர்களுக்கு அங்கே வேலை இருக்கிறது. ஆனால் இந்த டிஸ்டிரிக்ட் ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரியிலே வேலைப் பளு ஜாஸ்தியாக இருக்கிற காரணத்தினால் அவர்களை அங்கேயிருந்து தலைமை மருத்துவ மனைக்கு கொண்டு வருவதற்கு சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்று அறிந்துதான் இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

* திரு அன்பில் தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, திருச்சியில் நடைபெற்று வந்த செவிலியர் போராட்டம் காரணமாக அங்கே வேலைகள் தடைப்படுத்தப்பட்டது என்பது மட்டுமல்ல, அண்மையில் 4 ஆம் தேதி திண்டுக்கல்லிலிருந்து வந்த ஒரு லாரி ஒரு மரத்தில் மோதியது, 51 பேர்கள் அதில் வந்ததில், அந்த இடத்திலேயே மூன்று பேர்கள் இறந்துவிட்டார்கள். மருத்துவ மனைக்குச் சென்று அங்கே ஆறு பேர்கள் இறந்திருக்கிறார்கள். இன்னும் மூன்று நான்கு பேர்களின் உயிர் ஊசலாடிக்கொண்டு இருக்கிறது. நேற்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் நான் தெரிவித்தபோது அதுகுறித்து சமரசம் செய்து வைக்க முயற்சி எடுத்து, சமரசம் செய்து வைத்து இங்கே அறிக்கையும் வைத்திருக்கிறார்கள். நான் குறிப்பிட விரும்புவது, குறித்த காலத்தில் இது செய்யப்பட்டிருந்தால் அவர்களது உயிர்களைக் காப்பாற்றியிருக்க முடியும் என்பது என் கருத்து. ஆனால் விதி என்று பலர் வேதாந்தம் சொல்லலாம். தக்க நேரத்தில் அது செய்யப்பட்டிருந்தால் அவர்கள் காப்பாற்றப்பட்டிருப்பார்கள். ஆகவே இனிமேலாவது உடனடியாக அப்படிப்பட்ட போராட்டங்கள் நடைபெறுகிறபோது நடவடிக்கைகள் எடுத்து தீர்த்து வைக்க வேண்டும் என்பதை எனது வேண்டுகோளாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, வேண்டுகோள் என்ற வகையில் அதை முடிப்பதற்கு முன்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில குற்றச்சாட்டுகளை சுமத்தியிருப்பதால் அதைப் பயன்படுத்தி அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு இடமில்லை என்பதைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன்.

நேற்றைய தினம் கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னைச் சந்தித்த நேரத்தில் சொன்னார்கள். இறந்துபோனதற்குக் காரணம், அங்கே செவிலியர்கள் உடனடியாக உதவி செய்யவோ அல்லது கவனிக்கவோ இல்லை என்பதால் அல்ல. சிகிச்சை கொடுக்கப்பட்டது. இரண்டு நாட்களுக்கு முன்பாக உடனடியாக அங்குள்ள டி. எம். ஓ. வுடன் தொலைபேசி மூலம் நான் தொடர்பு கொண்டு, எல்லாவிதமான வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. பெரிய விவசாயிகள் சங்கத்தில் சேர்ந்தவர்கள் உடனடியாக கவனிக்க வேண்டும் என்று டி. எம். ஓ. வுடன் தொலை பேசி மூலம் தொடர்பு கொண்டு எல்லா வகையான வசதிகளும் செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே, கவனமின்மை காரணமாக நமக்கு இழப்பு ஏற்படவில்லை, என்பதை முதலில்

தெரிவித்துக் கொள்கிறேன். இன்னொரு குற்றச்சாட்டையும் சுமத்தியிருக்கிறார்கள். உடனடியாகத் தீர்த்து வைத்திருக்க வேண்டாமா என்று கேட்டார்கள். உடனடியாகக் கவனிப்ப தற்காக பல்வேறு கட்டங்களில் நான் பொறுப்பேற்றுக் கொண்ட உடன் அத்துறைச் செயலாளர் அவர்களிடம் சொல்லி இரண்டு பேர்களையும் கூப்பிட்டு பேச ஏற்பாடு செய்தேன். சுமுகமான நிலை ஏற்படவில்லை. நேற்று உறுப்பினர் அவர்கள் என்னைப் பார்த்த நேரத்தில் கூடச் சொன்னேன் ஏற்கெனவே நீங்கள் சொல்வதற்கு முன்பாகவே நான் இந்தக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருகிறேன். 11—30 மணிக்கு பார்க்க இருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். ஆகவே அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் உடனடியாக எல்லா வகையான ஏற்பாடுகளும் செய்து கொண்டிருக்கிறோம். சுமுகமான வகையில் இந்த சச்சரவு தீருவதற்காக எல்லா வகையான நடவடிக்கைகளும் எடுத்துக் கொண்டிருக்கிறோம். என்பதைத் திட்டவட்டமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட் டிருக்கிறேன்.

திரு வெ. அரங்கராசன் : தலைவர் அவர்களே, இந்த ஒப்பந் தத்தின்படி திருச்சி தலைமை மருத்துவ மனையில் மட்டும் தினசரி மருந்துகள் பெறும் திட்டத்தையும், மற்ற மாவட்ட மருத்துவ மனைகளில் மூன்று தினங்களுக்கு ஒரு முறை என்றும் திட்டம் தீட்டி இருக்கிறார்கள். அவ்விதத்தில் தான் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. எனவே மற்ற மருத்துவ மனைகளிலும் அதாவது மற்ற மாவட்ட மருத்துவ மனைகளிலும் மூன்று நாட் கள் என்பதற்குப் பதிலாக மருந்துகள் நாளுக்கு ஒரு முறை பெறும் திட்டத்தை அமுல்படுத்த ஏதாவது திட்டமிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தினசரி அந்த மருத்துவ மனைகளை வாங்குவதற்காக திட்டம் தீட்டுவது நன்றாகத்தான் இருக்கும். ஆனால் பார்மசிஸ்ட்டுகளின் பற்றாக் குறை காரணமாக இதை உடனடியாக நாம் அமுல் படுத்த முடியவில்லை. ஆகவே எங்கெங்கே மிகவும் அவசரமாகக் கவனம் செலுத்த வேண்டுமோ எங்கெங்கே ஸீரியஸ் பிராப்ளம்ஸ் இருக் கிறதோ அந்த இடத்தில் குறிப்பாக திருச்சியில் உள்ள தலைமை மருத்துவமனை போன்ற மருத்துவமனைகளில் 'டெய்லி இன் டென்ட்' போட ஏற்பாடு செய்திருக்கிறோம். மற்ற மருத்துவ மனைகளில் வாரத்திற்கு ஒரு முறை என்றிருந்ததை மூன்று நாட் களுக்கு ஒரு முறை என்று மாற்றியிருக்கிறோம். இரண்டுசாராரும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். தினசரி என்றால் பார்மசிஸ்ட் பற்றாக்குறை இருக்கிறது. அந்த பற்றாக்குறையைச் சரிக்கட்டி னால் அந்தத் திட்டத்தைப் பற்றியும் விவாதித்துக் கொண்டிருக் கிறோம். அதற்குரிய ஏற்பாட்டை நிதி நிலை சரியாக வரும்

போது செய்ய முடிந்தால், பார்மசிஸ்ட்டுகளின் எண்ணிக்கையை உயர்த்தி ஏராளமான பார்மசிஸ்டுகள் வரக்கூடிய வாய்ப்பு ஏற்படுமானால் நிச்சயமாக டெய்லி இன்டென்ட் போட்டு மருந்துகள் கொடுக்க சௌகரியமாக இருக்கும் அந்த வகையில் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறோம்.

(முற்பகல் 9–40)

திரு ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, நேற்று நீண்ட நேரம் சம்பந்தப்பட்ட எல்லோருடனும் பேசி, இந்தப் பிரச்சினை யை வெற்றிகரமாக தீர்த்து வைத்தமைக்கு அமைச்சர் அவர் ளுக்கு உங்கள் மூலமாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்- பாராட்டுகிறேன். இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரைக்கும் இந்த அண்ணா தி. மு. க. ஆட்சி அமைவதற்கு முன்னே, ஆளுநர் அவர்கள் ஆட்சி இருந்த போது முரண்பட்ட உத்தரவுகள், இன்றைக்கு ஒன்று நாளைக்கு மற்றொன்று அதற்கு அடுத்தநாள் ஒன்றுமாக இப்படி முரண்பட்ட உத்தரவுகள் போட்டதால்தான்

It was the inefficiency of the Advisers regime that has led to all these inconveniences to all the patients inside the hospital. I am glad it has been solved now.

இதைத் தீர்த்து வைத்திருக்கிறீர்கள். என்னுடைய கேள்வி என்ன வென்றால் இந்த டிஸ்பியூட் திருச்சியிலே நடைபெற்ற போது அங்கே இருக்கின்ற டி. எம். ஓ. அங்கிருக்கக்கூடிய நர்சுகளி டத்திலே அக்கிரசிவ்வாக நடந்து கொண்டு பிராப் பராக ஹாண்டில் பண்ணவில்லை. என்ற இம்பிரஷன் வந்திருக்கிறது பலரை இம்மீடியட்டாக டிரான்ஸ்பர் பண்ணியதாக வும் எப்பெக்ட்டிவ் ஆக்ஷன் எடுத்திருப்பதாகவும் தெரிகிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் இந்த டிஸ்பியூட் சம்பந்தமாக இந்த பீரியட்டில் எடுக்கப்பட்ட டிராஸ்பர் ஆர்டர்கள் அல்லது சார்ஜ் ஷீட்டுகள், ஆக்ஷன்கள் பூராவையும் டிராப் செய்யும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? எடுத்திருந்தால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறை மிகமிக சுறுசுறுப்பாகப் பணியாற்றிய தப் பாராட்டியதற்காக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் நன்றி செலுத்துகிறேன். இந்த டிஸ்பியூட்டை பொறுத்தவரைக்கும் டி. எம். ஓ. கொஞ்சம் கடுமையாக இருந்திருக்கிறார். இது ஒவ்வொருவருடைய முறை. டிசிப்பிளினாக இருக்க வேண்டுமென்று சில அதிகாரிகள் இருப்பார்கள் சிலர் சூழ்நிலைக்கு ஏற்ப கொஞ்சம் விட்டுக் கொடுத்து பிராபர் முறையிலே செய்வார் கள். இதிலே இப்படி செய்ய வேண்டு மென்று சொல்வதற்கு கொஞ்சம் கஷ்டமாக இருக்கும். ஆனால் அவர் ஏற்கனவே போட்டிருந்த உத்தரவுகள் பூராவையும் , மாற்றங்கள் பூராவை

யும் சார்ஜ் ஷீட்டுகள் பூராவையும் மாற்றியிருக்கிறோம். அவை களையெல்லாம் வாபஸ் பெற்றால் தான் சுமூகமான சூழ்நிலை ஏற்படும். வாபஸ் பெறவேண்டுமென்று அதற்காக நாங்கள் ஆணையிட்டிருக்கிறோம்.

திரு இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியிலே நடைபெற்ற செவிலியர்கள் போராட்டம், தமிழ்நாடு எங்கும் பரவாத வகையில் திருச்சியோடு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கூப்பிட்டு, இப்படி நடவடிக்கை எடுத்தமைக்கு எனது நன்றி கலந்த வணக்கத்தை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். தற்காலிகமாக இல்லாமல், நிரந்தரமாக ஏற்படுத்தியதற்கு நன்றி ஆனால், இந்தப் பேராட்டம் நடக் கின்றபோது வெளியே ரவுடிகள் செவிலியர்களை கற்பழிக்கப் போவதாக மிரட்டியதாகத் தெரிகிறது. அப்பேர்ப்பட்டவர்கள் மீது நடவடிக்கைகள் எடுப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும். அப்படி என்ன செய்தது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் போராட்டத்தைப் பொறுத்தவரைக்கும் நான் உண்மையாகவே சொல்கின்றேன். இது ஒரு துரதிருஷ்ட வசமான போராட்டம்தான். ஏனென்றால், செவிலியர்களை நாம்சகோதரிகள் போல் கவனிக்க வேண்டும். அவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டு, நேற்றையதினம் பேசுகின்ற நேரத் திலேகூட, பார்மசிஸ்டுகளைப் பார்த்து சொல்லியிருக்கிறேன். ஆகவேஇந்தப் பிரச்னையைப் பொறுத்தவரைக்கும் இதற்கு முற்றுப்புள்ளி வைக்கப் பட்டிருக்கின்றது. என்று நான் கருது கிறேன். செவிலியர்களுக்கு நல்ல வகையிலே பாதுகாப்பு கொடுக் கப்படும். என்ற உறுதியினை இந்த மன்றத்தின் மூலமாக நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மீண்டும் பரவா மல் வழி செய்யப்பட்டிருக்கிறது. இதிலே உள்ள பெரிய பிரச்சினை என்னவென்றால், அவர்களுக்கு ஓர்க் லோட் அதிகம் ஏற்பட் டிருக்கிறது. இந்த இன் டேக்கைப் பற்றி ஆழமாக ஸ்டடி செய்து இந்தப் பிரச்சினையிலே கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. பார்மசிஸ்டுகளுக்கும் ஓர்க் லோட் அதிகமாகியிருக்கிறது. அவர்கள் எண்ணிக்கையையும் உயர்த்த வேண்டும். செவிலியர்களின் எண்ணிக்கையையும் உயர்த்த வேண்டும். அப்போதுதான் அவர் கள் சரியாக செயல் பட முடியும். அதற்காகத் தான் நான் நர்சிங் டியூட்டீஸ் என்று கணக்கு எழுதுவது போன்ற வற்றிற்கும் கொடுத்திருக்கிறோம். ஜாஸ்தியாக இவர்கள் எண்ணிக்கையை பெருக்க வேண்டுமென்றால், இவர்களின் இன்-டேக்கை எப்படி பெருக்குவது என்பதில் நிதி நிலைமையையும் ஆராய்ந்து , அதற் குரிய வகையிலே இவர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு தீவிரமாக உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யும்.

திரு பி. முசிறிப்புத்தன் : பேரவைத் தலைவரவர்களே, நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இந்த திருச்சி அரசு மருத்துவ மனையிலே செவிலியர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தைக் குறித்து நேற்று பிற்பகலிலே அனைவரையும் அழைத்துப் பேசி ஒரு நல்ல முடிவு கொண்டு வந்திருக்கிறார்கள். அதுவே போதுமானது என்று கருதுகிறேன். ஆளுநர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டது போல், இதுபோன்ற பிரச்சினைகளில் காலதாமதம் ஏற்படாமல், உடனுக்குடன் கவனிக்கப்பட்டது என்பது மட்டுமல்ல. பொதுவாகவே, மருத்துவ மனைகளில் இதுபோன்ற வேலை நிறுத்தங்கள் நடப்பதற்கு அறிகுறி தென்படுவதற்கு முன்பாக, இவைகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அருமைச் சகோதரர் தாமரைக்கனி அவர்கள் செவிலியர்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டுமென்று சொன்னார்கள். நான் அச்சப்படுவதெல்லாம் மருந்தாளுநர்களும் செவிலியர்களும் நடத்துகின்ற வேலை நிறுத்தத்தில் வியாதியஸ்தர்களுக்கு பாதுகாப்புத் தர முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். பிரச்சினை தீர இந்த நல்ல முயற்சியை மேற்கொண்ட நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் இதே பொருள் குறித்து ஒரு கவன ஈர்ப்பு தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். பேரவை விதி 54 (6)-ன் கீழ் அவர் பெயர் சேர்க்கப்படவில்லை.

2. தகவல் கோரல்—(தொடர்ச்சி).

(இ) உரிமைப் பிரச்சினை அறிவிப்பு.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : Sir I want to make submission under Rule 246 of the Assembly Rules.

நான் மாண்புமிகு திரு. ராஜா முகமது அவர்கள் மீது உரிமைப் பிரச்சினை கொடுத்திருக்கிறேன். வருகிற வழியில் கொஞ்சம் இடைஞ்சல் ஏற்பட்டு விட்ட காரணத்தால் காலதாமதமாகக் கொடுத்தேன் தாங்கள் இன்றையதினம் அனுமதிக்கவில்லை என்றாலும் நாளையதினம் அல்லது நாளை மறுதினம் அனுமதிப்பீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் உரிமை மீறல் பிரச்சினை ஒன்றை அவை கூடிய பிறகு அலுவலகத்தில் கொடுத்துவிட்டு அந்தப் பிரச்சினையை

1980 ஜூலை 8] [டாக்டர் எச். வி. ஹண்டே]

இங்கே எழுப்பியிருக்கிறார்கள். அதிலே உரிமை மீறல் உள்ளதா இல்லையா என்பதைப் பரிசீலித்த பிறகுதான் அதை அனுமதிப்பதா இல்லையா என்பதை முடிவு செய்ய வேண்டும்.

(ஈ) நடவடிக்கை சுருக்க வெளியீடு.

திரு. ரா. உமாநாத் : நேற்று சம்மரி ஆப் ப்ரொசீடிங்சைப் பார்த்ததில் நேற்று நடந்த நிகழ்ச்சியைப் பற்றி மாறான பொருள் படக்கூடிய ஒரு வாசகம் அதிலே இருக்கிறது. பிரிவிலேஜ் மோஷனை மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் கொடுத்தது தெரியும். பத்திரிகையிலிருந்து எக்ஸ்பிளனேஷன் கிடைத்த பிறகு அது எடுத்துக் கொள்ளப்படும் என்று தாங்கள் சொன்னீர்கள். ஆனால் சம்மரி ஆப் ப்ரொசீடிங்சில் எடுத்துக் கொள்ளப்படும் என்பதற்குப் பதிலாக தீர்ப்பு கூறப்படும் என்று இருக்கிறது அதைத் திருத்த வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : எடுத்துக் கொள்ளப்படும் என்று சொல்லுவதே இன்ப்ரக்சுவஸ் ஆகும். பதில் எப்போது பத்திரிகையிடமிருந்து வரும் என்று சொல்ல முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எடுத்துக் கொள்ளப்படும் என்றால் விவாதிக்கப்படும் என்றுதான் பொருள். அது பற்றிப் பேராசிரியர் பெரிய விளக்கமெல்லாம் கொடுத்திருக்கிறார்கள்.

(உ) உரிமைப் பிரச்சினை எடுத்துக் கொள்வது பற்றிய நடைமுறை.

டாக்டர் மு. கருணாநிதி: திரு உமாநாத் எழுப்பிய பிரச்சினை தொடர்பாக நானும் தங்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். உரிமைப் பிரச்சினை அளிக்கப்படுகிற நேரத்தில் தாங்கள் அனுமதிப்பீர்களானால் என்ன உரிமைப் பிரச்சினை என்பதைப் படிக்கச் சொல்லி, பேசச் சொல்லி அதற்குப் பிறகுதான் சம்பந்தப்பட்டவர்களிடத்தில் தாங்கள் விளக்கம் கேட்டு தீர்ப்பு வழங்க வேண்டும். அதுதான் இந்த அவையின் மரபாக ஏற்கனவே இருந்து வந்திருக்கிறது. தீர்ப்பு பிறகு வழங்கப்படும் என்று சபாநாயகர் சொல்லிவிட்டு இரண்டு நாட்கள், நான்கு நாட்கள் கழித்து சம்பந்தப்பட்டவர்களிடம் விசாரித்து, கடிதம் எழுதி அவர்களிடம் சமாதானம் பெற்ற பிறகு, இதோடு விட்டு விடலாம் அல்லது உரிமைக் குழுவுக்கு அனுப்பலாம் என்று சபாநாயகர் தீர்ப்புக் கூற வேண்டும். சபாநாயகர் அவர்கள் அதற்கு முற்றிலும் மாறாக உரிமைப் பிரச்சினை எழுப்பியவுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி

TRUTH ALONE TRIUMPHS

அவர்களிடத்தில் விளக்கத்தைக் கேட்டு இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து விவாதிப்பது என்பது முறையாகப் படவில்லை. அதைக் கொஞ்சம் தாங்கள் கவனிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யார் மீது உரிமைப் பிரச்சினை கொடுத்திருக்கிறார்களோ அவர்களிடம் விளக்கம் கேட்கப்பட்டிருக்கிறது. விளக்கம் வந்தபிறகு இப்பிரச்சினை பற்றி இங்கே விவாதித்து முடிவு எடுக்கப்படும். அதுபற்றி விளக்கம் கேட்காமல் எப்படி விவாதிப்பது?

(முற்பகல் 9·50).

டாக்டர் மு. கருணாநிதி : மன்னிக்கவேண்டும். நான் அங்கே தான் வேறுபடுகிறேன். நான் தங்களிடத்திலே கூறிக்கொள்வதெல்லாம், விளக்கம் கேட்டபிறகு தான் உரிமைப் பிரச்சினையை அவையிலே எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது சரியல்ல. அது தான் என்னுடைய வாதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை எப்படிச் செய்ய வேண்டுமென்று நினைக்கிறீர்கள்?

டாக்டர் மு. கருணாநிதி : நான் நினைக்கவில்லை. இருப்பதைச் சொல்கிறேன். உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்தவுடன், அதை சபையிலே எழுப்புவதற்குத் தாங்கள் அனுமதி அளித்தால், அந்த உரிமைப் பிரச்சினையைப் படித்துவிட்டு, உறுப்பினர்கள் அதன்மீது விளக்கங்களைச் செல்வதற்கு உரிமையுண்டு. அதற்குப் பிறகு சம்பந்தப்பட்டவர்களிடம் விசாரித்து விட்டு பிறகு தீர்ப்பு வழங்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; இங்கே விவாதித்த பிறகு அவர்களிடம் கேட்பானேன்?

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : பிரைமா பேஸி இருக்கிறதா இல்லையா என்று விளக்கம் சொல்லவேண்டாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது எப்படி?

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இந்த அவையிலே பராளுமன்றம் மாதிரி இல்லாமல் என்டையர்லி டிபரன்ட் புரசீஜர் இத்தனை வருடங்களாகக் கையாளப்பட்டு வருகிறது. விளக்கம் கேட்ட பிறகு இங்கே விவாதம் நடத்தி அதற்குப் பிறகு தீர்ப்புக் கூறுவது ஒன்று. இன்னின்னார் இன்ன சப்ஜெக்ட் சம்பந்தமாக பிரிவிலேஜ் மேட்டர் கொண்டுவந்திருக்கிறார்கள் என்று அவையிலே சொல்லி, பிறகு அதிலே பிரைமா பேஸி

1980 ஜூலை 8] [திரு. ரா. உமாநாத்]

கேஸ் இருக்கிறதா இல்லையா என்பதுபற்றி உறுப்பினர் சுருக்கமாக விளக்கம் தரவேண்டுமென்று தாங்கள் கூறுவீர்கள். அப்படிச் செய்தால்தான் அந்த விஷயம் ஹவுஸிலே வரும். அதனால் பிரிவிலேஜ் மேட்டருக்கு மற்ற எல்லா அயிட்டங்களுக்கும் மேலாக முதலிடம் கொடுக்கப்படுகிறது. பிரைமாபேஸி கேஸ் அதிலே இருக்கிறதா இல்லையா என்று உறுப்பினரை நீங்கள் கேட்டு பிறகு சம்பந்தப்பட்டவர்களிடம் விளக்கம் கேட்டு என்னுடைய தீர்ப்பை அளிக்கிறேன் என்று நீங்கள் சொல்லுவீர்கள். இந்த முறைதான் வருடக்கணக்காக இந்த அவையிலே நடந்து வருகிறது. அதைத்தான் எதிர்க்கட்சித் தலைவர் சொல்கிறார். உரிமைப் பிரச்சினை வந்தவுடன் அவர்களிடம் விளக்கம் கேட்ட பிறகு இங்கே விவாதம் நடக்கும் என்று நீங்கள் சொல்லுவதால் உங்களுக்குத்தான் பர்தர் காம்பிளிகேஷன்ஸ் வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த காம்பிளிகேஷன்ஸை தாங்கலாம், அதிலே ஒன்றும் இல்லை. இங்கே உள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எல்லா வகைகளிலும் பேசுவதற்கு உரிமை இருக்கிறது. ஆனால் வெளியிலே இருக்கிறவர்களைப் பற்றிய பிரச்சினை வருகிறபோது அவர்களைக் கேட்கவேண்டும் என்பதுதான் நியாயம். இரண்டு பக்கமும் கேட்டபிறகு முடிவு எடுக்கலாம். உறுப்பினர்களுக்கு இருக்கிற உரிமை அவர்களுக்குக் கிடையாது. அதுதான் புரசீஜராக இருக்கவேண்டும். நான் அதிகாரிகளைக் கலந்தேன். ஆனால் பழைய முறையே இருக்க வேண்டுமென்று நீங்கள் சொல்கிறீர்கள். பழைய முறையே இருப்பதில் எனக்கு ஆட்சேபனையில்லை.

திரு. அ. ரகுமான்கான்: நான் இதை வாசித்துவிடட்டுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திடீர் திடீரென்று எதையும் வாசித்துவிடக் கூடாது. வாசிக்கவேண்டிய நேரம் வருகிறபோதுதான் வாசிக்கவேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, பத்திரிகைகள்மீது உரிமைப் பிரச்சினை வருகிறபோது முதலிலே தங்கள் அறையிலே வந்து சந்தித்து......

திரு. துரை முருகன்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், ஸ்பீக்கர் ரூலிங் கொடுத்தபிறகு அந்தப் பிரச்சினையைப்பற்றி கிளப்பலாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், அடுத்து திரு. இரா. இராசமாணிக்கம்.

(ஊ.) கவன ஈர்ப்பு அறிவிப்புகள்—காலவரம்பு.

திரு. இரா. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, நேற்றைய தினம் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் வருவதற்குக் காலதாமதம் ஆவதுபற்றி தங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வந்தேன். அப்போது கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்வதற்கு 42 நாட்கள் எடுத்துக்கொள்ளலாம் என்று தாங்கள் தெரிவித்தீர்கள். எனக்கு மீண்டும் தாங்கள் பதில் சொல்கிறபோது "42 நாட்கள் எடுத்துக்கொள்ளலாம் என்ற நிலை முன்பு இருந்தது. முந்தாநாள் தான் அதை 15 நாட்களாக மாற்றினோம்" என்று தெரிவித்து இருக்கிறீர்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அந்த விதியைப் பார்த்துவிட்டேன். அதற்கு 7 நாட்கள்தான் 'டைம்'. அதை நான் ஒத்துக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, அவசியமும் பொது முக்கியத்துவமும் வாய்ந்த ஒரு நிகழ்ச்சியைக் குறித்து ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது Matter of public importence and urgency. அதை உடனே எடுத்துக் கொள்ள வேண்டும். காவேரியிலும், பவானியிலும் வெள்ளம் ஏற்பட்டு பல குடிசைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன, பலர் இறந்து போயிருக்கிறார்கள். அது இந்தச் சர்க்கார் கவனிக்க வேண்டிய அவசரம் வாய்ந்த பிரச்னை. எனவே..................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினரவர்கள் கொடுப்பதற்கு முன்பே நிறைய உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள். உறுப்பினரவர்கள்தான் லேட்டாகக் கொடுத்திருக்கிறார்கள். அது முழுவதையும் எடுத்துக்கொள்கிறேன். இதைப் பற்றி உறுப்பினரவர்களிடத்திலேயும் சொல்லியிருக்கிறேன். வெள்ளம் வந்து இரண்டு நாட்கள் ஆகிவிட்டன. இப்பொழுது வடிந்து கொண்டிருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, காவேரியிலே வெள்ளம் வடிவது உங்களுக்கும் தெரியும், ஊருக்கும் தெரியும். அந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருப்பவர்களின் பிரச்னை மிக முக்கியமானது. இதில் லேட்டாகக் கொடுத்தேனா, முன்னால் கொடுத்தேனா என்பது அல்ல பிரச்னை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஒத்துக்கொள்கிறேன். பல உறுப்பினர்கள் இதில் கவனம் செலுத்திக் கொடுத்திருக்கிறார்கள். 54-வது விதியின் கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானம் வருகிறது. அதில் உறுப்பினரவர்களின் பெயரும் வருகிறது. அப்பொழுது அவர்கள் கேட்கலாம்.

1980 ஜூலை 8]

திரு. அ. ரகுமான்கான் : இன்னும் வரவில்லையே? எப்பொழுது வரும்? அட்ஜர்ன்மென்ட் மோஷனாக வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அட்ஜர்ன்மென்ட் மோஷனாக வரவில்லை; 54-வது விதியின்கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானமாக வருகிறது.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, தயவு செய்து தாங்கள் உட்காரும்படி கேட்டுக்கொள்கிறேன், ஏனென்றால் நீங்கள் நிற்கும்பொழுது நான் பேசக்கூடாது. நான் சொல்லி விடுகிறேன். நான் கொடுத்திருப்பது ஒத்தி வைப்புத் தீர்மானம். ஒத்தி வைப்புத் தீர்மானம் என்பது வேறு, கவன ஈர்ப்புத் தீர் மானம் என்பது வேறு என்பது உங்களுக்குத் தெரியும். கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுக்கிறோம் என்றால், அமைச்சரவர்கள் அறிக்கை வைத்து விடுவார்கள், அவ்வளவுதான். ஆனால் ஒத்திவைப்புத் தீர்மானம் என்றால் பிரச்னைகளின் எல்லாத் தன்மைகளையும் விவாதிப்பதற்கான வாய்ப்பு ஏற்படுகிறது. ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொடுப்பதை உங்களுடைய சௌகரியத்திற்காக கவன ஈர்ப்புத் தீர்மானமாக மாற்றாமல், இது பொது முக்கியத்துவம் வாய்ந்த காண்ட்ரவர்சி இல்லாத சப்ஜெக்ட் என்பதால் மக்களின் நன்மையைக் கருதி இதை எடுக்க வேண்டும். குடிசைகளை இழந்திருக்கிறார்கள். பலர் இறந்திருக்கிறார்கள், ஆகவே, அட்லீஸ்ட் நாளைக்காவது எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்தி வைப்புத் தீர் மானமாக நாளைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் விரும்புகிறார்கள். அதில் பிரச்னை இல்லை.

(4) 1980-81 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் விவாதம்—தொடர்ச்சி.

திரு. என். முத்துவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் எனக்குப் பேசுவதற்கு அனுமதி தந்த டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், பேராசிரியர் அவர் களுக்கும், என் வானூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய விவாதத்தைத் தொடங்குகின்றேன்.

1980-81 ஆம் ஆண்டுக்கான இந்த நிதிநிலை ஆறிக்கையைப் படித்துப் பார்க்கும்பொழுது அது உண்மைக்குப் புறம்பான, விளம்பரப்படுத்தப்பட்ட பட்ஜெட்டாக விளங்குகிறது. இந்த 1980-81-க்கான பட்ஜெட்டை நன்றாகப் பார்க்கும்பொழுது

நாட்டு மக்கள் அனைவரையும் ஏமாற்றக்கூடிய பட்ஜெட்டாக விளங்குகிறது. குறிப்பாக, தொழிலாளர் வர்க்கத்தையும், விவசாயப் பெருங்குடி மக்களையும், அரிசன சமுதாயத்தினரையும் இது மிகவும் பின்தங்கிய நிலையில் வைக்கும்படியான அளவிற்குத் தயாரிக்கப்பட்ட நிலையில் உள்ளது. இவர்கள் கொடுத்த வாக்குறுதிகள் ஒன்றும் இந்த பட்ஜெட்டில் இல்லை என்பதை நான் மட்டும் அல்ல, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் கொடுத்த வாக்குறுதியான, விவசாயிகளின் அனைத்துக் கடன்களும் ரத்து என்று அவர்கள் கொடுத்த வாக்குறுதிகள் அத்தனையும் பொய் என்று நான் சொல்லவில்லை, ஐந்தாம் தேதி நடந்த விவசாயிகளின் பேரணியில், அன்று மாலை நடந்த கூட்டத்தில் விவசாயிகள் சங்கத் தலைவர் அவர்கள் தெள்ளத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இவர்கள் கொடுத்த வாக்குறுதிகளை எல்லாம் மீறி விவசாயப் பெருங்குடி மக்களை ஏமாற்றி விட்டார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பரிகாரமாக வருகின்ற ஊராட்சி மன்ற, நகராட்சித் தேர்தல்களில் சந்திக்கத் தயார் என்று விவசாயப் பெருங்குடி மக்கள் சவால் விட்டிருக்கிறார்கள். இந்தத் தேர்தல் களத்திலே மீண்டும் ஆட்சிக்கு வருவதற்காக அவர்கள் கொடுத்த வாக்குறுதிகள் பொய்யானவை என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இவர்கள் இந்த பட்ஜெட்டிலே சொல்லியிருக்கின்றார்கள், 5 ஏக்கர் நிலத்திற்குக் குறைவான நிலம் உள்ளவர்களுக்குத்தான் குறுகிய காலக் கடன்கள் ரத்து என்று சொல்லியிருக்கின்றார்கள். இந்த 5 ஏக்கர் என்பது எது என்பதை நாட்டு மக்களுக்கு இவர்கள் தெளிவாக அறிவிக்கவில்லை. அது ஸ்டாண்டர்ட் ஏக்கராவா, நஞ்சையா, புஞ்சையா என்று சொல்லவில்லை. அதே நேரத்தில் குறுகிய காலக் கடன் என்று சொல்கிறார்கள்; 60 கோடி ரூபாய் தள்ளுபடி என்று சொல்கிறார்கள். நான் பார்க்கும் பொழுது இந்த பட்ஜெட்டிலே வரவுக்கும் செலவுக்கும் சம்பந்தமில்லாமல், இந்த 60 கோடி ரூபாய் தள்ளுபடி என்று வந்திருக்கிறது. 1979 ஆம் ஆண்டில் நடைபெற்ற தஞ்சை இடைத் தேர்தலின் பொழுது 40 கோடி ரூபாய் ரத்து என்று அறிவித்தார்களே, அந்த 40 கோடியும் இந்த 60 கோடியிலே சேர்க்கப்பட்டிருக்கிறதா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன். ஏனென்றால் விவசாயப் பெருங்குடி மக்கள் இன்றைக்குத் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 10-00)

முன்னுக்குப் பின் முரணான இந்த நிலையிலே விவசாயிகளை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனென்றால், விவசாயிகள் கடன் ரத்து என்று சொன்ன பிறகுதான் விவசாயிகள் பேரணி நடத்தி உங்களைப் பயமுறுத்தியிருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

1980 ஜூலை 8] [திரு. என். முத்துவேல்]

அடுத்து, அரிசன மக்களுக்காக இந்த பட்ஜெட்டில் திட்டம் எதுவும் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப் படுகிறேன். ஏனென்றால், அரிசனங்களுக்காக ஒதுக்கப்பட்ட பணம் தவிர, புதிதாக எந்த ஒரு சலுகையும் திட்டமும் அவர் களுக்காக இல்லை என்பதை நான் விரிவாகச் சொல்ல ஆசைப் படுகிறேன். இதை விளம்பர பட்ஜெட் என்று ஏன் குறிப் பிட்டேன் என்றால், 1975-76-லே அரிசனங்களுக்காக இந்த மன்றத்திலே அன்றைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ரூ. 12 கோடியை ஒதுக்கி, 36,000 வீடுகளை இனாமாகக் கட்டிக் கொடுத்தார்கள். ஆனால், அரிசனங்களுக்கு நன்மை செய்வதாகச் சொல்கிற இந்தச் சர்க்கார் அவர்களை முன்னுக்குப் பின் முரணாக ஏமாற்றுகிற நிலையில், அவர்களுக்கு வீடு கட்டு கின்ற வாரியத்தையே ஏமாற்றி, ரூபாய் 1 கோடிதான் ஒதுக்கி யிருக்கிறார்கள். அந்த வாரியம் எதற்காக அமைக்கப்பட்டது? அதற்கு இன்று என்ன வேலை என்று நான் கேட்க ஆசைப் படுகிறேன். சென்னையிலேயிருந்த அந்த வாரியத்தின் தலை நகரம் இப்பொழுது விழுப்புரத்திற்கு மாற்றப்பட்டு வருகிறது. அந்தத் தலைமையகத்திற்குச் சென்னையிலேயிருந்துதான் அலுவலர்கள் சென்று கொண்டிருக்கிறார்கள். இதை எதற் காகக் குறிப்பிடுகிறேன் என்றால், அவர்கள் முன்னுக்குப் பின் முரணாகச் செயல்படுகிறார்கள், என்பதைச் சுட்டிக்காட்டத்தான்.

இந்த ஆண்டு வீடு கட்ட ரூ. 1 கோடிதான் ஒதுக்கி யிருக்கிறார்கள். அந்தத் தொகை, இயக்குநருக்கும், அலுவலர் களுக்கும்தான் பயன்படுமே தவிர, வீடு கட்ட அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அன்று கலைஞர் அவர்கள் இனாமாகத் தந்த வீடுகளுக்குப் பதிலாக, இன்று பாமர மக்களுக்கு என்ற பெயரில் எல்லோ ருக்கும் கடனாகக் கட்டித் தரப்படும் என்று சொல்லிக்கொண் டிருக்கிறார்கள். எல்லோருக்கும் கட்டித் தரப்படுகிற வீட்டிற்கு ரூ. 1,000 இனாமாகவும், ரூ. 2,000 கடனாகவும் தரப் படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அந்தக் கடனை, எப்பொழுது, யாரிடம் பெறுவது என்று தெரியாத நிலையில் மக்கள் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். கடனில் வீடு கட்டுவது என்றால், அவர்கள் எப்பொழுதோ வீடு கட்டி, கூரையைக் கூட மாற்றியிருப்பார்கள். ஆகவேதான் இனாமாகக் கட்டிக் கொடுத்தார் டாக்டர் கலைஞர் அவர்கள். ஆனால், இன்று அவ்வாறு இல்லை. அதைப் பார்க்கும்போது அரிசன மக்களை நன்றாக ஏமாற்றுகிறார்கள் என்பதைநான் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக, அரிசனங்களுக்கான ஹாஸ்டல் இந்த அரிசன வீடு கட்டும் வாரியத்தின் மூலமாகத்தான் கட்டப்படுகிறது. ஆனால், ஹாஸ்டல்கள் கட்ட மத்திய அரசுதான் பணம் கொடுச்

கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன். அந்தப் பணத்தை வைத்து, பொதுப் டணி துறையின் மூலமாக அந்த ஹாஸ்டலைக் கட்டலாம். அதற்கென ஒரு வாரியம் தேவையில்லை. நீங்கள் அரிசன நல வீடு கட்டும் வாரியத்தை மூடிவிடுவது நல்லது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இங்கு பேசிய ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களும், அவர்களை ஆதரிப்பவர்களும் மற்றவர்களும் சொன்னர்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எப்படி சினிமாவில் நல்லவராக நடித் தாரோ அதைப் போல் ஆட்சியிலும் நல்லவராக நடிப்பார் என்று உண்மையைத் தான் அவர்கள் சொன்னார்கள். ''நம் நாடு'' என்ற சினிமாவில், சேரிகளை ஒழிப்போம் என்று சொன்னார்கள் ஆனால், இப்பொழுது சேரியை ஒழிக்கவில்லை. நடைமுறையில் உண்மைக்குப் புறம்பாக நடந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், உண்மையில் சேரியை ஒழித்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அவர்கள் எதைச் செய்தார்கள்? ரூ. 60 கோடிக்கு தள்ளுபடி என்று விளம்பரப்படுத்துகிறார்கள். ஒரு சினிமா கொட்டகை யில் 20 நாட்களோ, 30 நாட்களோ ஒரு சினிமா ஓடிக்கொண்டிருந் தால், அதற்கு வசூல் குறைவாக இருந்தால், மீண்டும் விளம்பரம் செய்வார்கள். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், சினிமா படத்திலே புகழ்பெற்றவர்கள்; நடித்துப் புகழ்பெற்ற வர்கள் அவர்கள். $2\frac{1}{2}$ ஆண்டு கால ஆட்சி வீழ்ச்சி அடைந்தவுடன், சினிமா படம்போல் மறுபடியும் விளம்பரப் படுத்துகிறார்கள். கிட்டத்தட்ட ரூ. 6 கோடியை $2\frac{1}{2}$ ஆண்டுக்காலத்திலே விளம்பரத்திற்காக் செலவழித்தார்கள். அந்த ரூ. 6 கோடி விளம்பரத்தினால்தான் ஆட்சியை நடத்துகிறார் கள் என்பதைச் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். ஏனென் றால், ரூ. 6 கோடி விளம்பரத்தைக் கொண்டுதான் ''பேப்பர்'' களை, இன்றையதினம் அவர்கள் பக்கம் வைத்திருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையில் வேறு ஒன்றும் இல்லை என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனென்றால், அண்ணா காலத்திலும் சரி, கலைஞர் காலத்திலும் சரி, 1976-லே நடந்த தேர்தலைப் பார்க்கும்போது, 71 சதவீதம், 73 சதவீதம் மக்கள் வாக்களித்தார்கள். ஆனால், இப்பொழுது 63 சதவீதம் மக்கள் தான் வாக்களித்திருக்கிறார்கள்.

ஆனால் உங்கள் சர்க்கார் நடக்கின்ற இந்த தேர்தலில் மக்கள் வாக்குச் சாவடிகளுக்கு வரவே பயப்படுகிறார்கள். பொது மக்களும், படித்தவர்களும் வாக்குச் சாவடிக்கு வர பயப் படுகின்றார்கள். அதனால்தான் நீங்கள் வாக்களிக்கும் வயதை 18 ஆக குறைத்திருக்கிறீர்கள். உங்களுக்கு சதவிகிதத்திலே

1980 ஜூலை 8] [திரு. என். முத்துவேல்]

குறைந்திருக்கிறது. நாங்கள் 37 பேர்கள் வந்திருந்தாலும் நீங்கள் 130 பேர்கள் வந்திருந்தாலும் வாக்குகளின் சதவிகிதத்தைப் பார்த்தீர்களானால் அதிக வித்தியாசம் இல்லை. நாங்கள் 3 பேர்களாக இருந்தாலும் தமிழக மக்களுக்குக் கொடுத்த வாக் குறுதிகளை நிறைவேற்றுகின்றவர்களாக இருப்போம். ஆனால் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வினராகிய நீங்கள் தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றினீர்களா. அனைத்து விவசாயிகளின் கடன்களை ரத்து செய்வோம் என்று சொன்னீர்கள். பேசினீர்கள். பத்திரிகையிலே எழுதினீர்கள் ஆனால் நீங்கள் கொடுத்துள்ள வாக்குறுதியை நிறைவேற்ற வில்லை என்று விவசாயச் சங்கத் தலைவர் சொல்லியிருக்கிறார். நீங்கள் தேர்தல் காலங்களிலே பகிரங்கமாக சொன்னீர்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் உடனடியாக ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், நகராட்சி, மாநகராட்சித் தேர்தல்களை நடத்து வோம் என்று சொன்னீர்கள். ஆனால் அதற்கான முயற்சியே எடுக்கவில்லை. அங்கெல்லாம் தனி அதிகாரிகளை வைத்து அவர்கள் மூலமாக நீங்கள் லாபத்தைத் தேடுகிறீர்கள். பல நகராட்சிகளிலே இவர்கள் கொள்ளை லாபம் அடிக்கிறார்கள் அதிகாரிகள் மட்டுமல்ல, ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களும் கொள்ளை அடிக்கிறார்கள்.

எங்கு பார்த்தாலும் சுகாதாரமின்மை இருக்கிறது. இதற் காக ஒரு பாடி இருக்குமானால், இந்த நிலைமை இருக்காது என்று சொல்லிக் கொள்ளுகிறேன். எனவே வருகிற 6 மாதத் திற்குள் எல்லா நகராட்சி மற்றும் ஊராட்சி தேர்தல்களையும் நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து நீங்கள் எந்தெந்த வாக்குறுதிகள் நாட்டு மக்களுக்குக் கொடுத் திருந்தாலும் அவைகளை நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக தொழிலாளர் வர்க்கத்தைப் பொறுத்தவரையில் இந்த நிதிநிலை அறிக்கையில் ஒன்றும் குறிப்பிடவில்லை. எந் தத் தொழிலாளியும் நிரந்தரமாக்கப்படும் என்றும் இல்லை. பெரிய தொழில் திட்டங்கள் கிடைக்கும் என்றும் இதில் இல்லை. இதைப் பற்றி கம்யூனிஸ்ட் நண்பர்கள் கூட ஒன்றும் குறிப்பிட வில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியில் ஆரோபுட் தொழிற்சாலை இருக்கிறது. அந்த மில்லிலே போனமாதம் 5—6—1980-லே ஸ்டிரைக் நடந்தது. லாக் அவுட் பண்ணியிருக்கிறார்கள். நான் அந்த மில்லைப் பற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தும் இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் இந்த அரசாங்கம் எடுக்கவில்லை. என் தொகுதி

யில் பஸ் போக்குவரத்து சரியாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு மற்றவைகளை அடுத்த டிமான்டில் பேசிக் கொள்கிறேன் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே பேசுவதற்கு வாய்ப்பினை அளித்த புரட்சித் தலைவர் அவர்களுக்கும், என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பி இருக்கிற வேதாரண்யம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்து என்னுடைய பேச்சைத் துவக்குகிறேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், வரவேற்கக்கூடிய, ஏழை எளிய மக்களுக்குப் பயன் தரக்கூடிய ஒரு நல்ல நிதி நிலை அறிக்கையை இங்கே அளித்திருக்கிறார்கள். அவர்களுடைய அறிக்கையிலே ஏழை எளிய மக்களுக்கு, வாழ்க்கையின் அடித்தளத்திலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் காலத்தில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நினைவில் நிறுத்தி நாவலர் அவர்கள் அளித்திருக்கிறார்கள். அவர்களுக்கு என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தஞ்சை மாவட்டம் விவசாய மாவட்டமாக இருந்தாலும் இங்கே மற்ற மாவட்டங்களைப் போல், விவசாயத்திலே பாடுபடுகிறவர்கள் அதிகமாக லாபம் பெற இயலாத நிலையில் இருக்கிறார்கள். அந்த நிலைமையை மாற்றுவதற்கு அரசு முயற்சிக்கவேண்டும். அவர்களுக்கு 6 மாதம்தான் வேலை கிடைக்கிறது. அப்படிப்பட்ட நிலைமையை மாற்றுவதற்கு விவசாயத் தொழிலாளர்களுக்கு பகுதி நேர தொழில் துவங்கி, அவர்களுடைய வருவாயைப் பெருக்க வேண்டும் என்று இந்த அரசு உத்தரவிடவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-10]

தஞ்சை மாவட்டம் ஒரு விவசாய மாவட்டமாக இருக்கிறது. அந்த மாவட்டத்தில் அரசாங்கம் ஒரு விவசாயக் கல்லூரியைத் துவக்கவேண்டும். திராவிட முன்னேற்றக்கழக ஆட்சி இருந்த நேரத்திலேயே இங்கே விவசாயக் கல்லூரி துவக்கப்படும் என்று சொன்னார்கள். விவசாய மாவட்டம் என்று சொல்லும் மாவட்டத்தில் இன்னும் விவசாயக் கல்லூரி ஆரம்பிக்கப்படாத நிலை இருப்பது வருந்தத்தக்கது. ஆகவே, அந்த மாவட்டத்தில் உடனடியாக ஒரு விவசாயக் கல்லூரி ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1980 ஜூலை 8] [திரு. எம். எஸ். மாணிக்கம்]

விவசாயிகளுக்காக, விவசாய நலன் அறிந்து விவசாயக் கடன்களை இந்த அரசு தள்ளுபடி செய்து இருக்கிறது. இதை எதிர்க்கட்சிக்காரர்கள் சகித்துக்கொள்ளமுடியாமல், தங்களால் செய்ய முடியாததை புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி காலத்தில் செய்து விட்டார்களே என்கிற ஆதங்கத்தில், எதையோ சொல்லி மக்களிடத்திலே ஒரு குழப்பத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக கடன் தள்ளுபடியை ஒரு தூசுபோல் எண்ணிக் கொண்டு பேசிக் கொண்டு இருக்கிறார்கள். விவசாயிகளுக்கு கடன் தளளுபடி செய்ததற்காக இந்த அரசை நான் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் சொன்னார். வருகின்ற உள்ளாட்சி மன்றத் தேர்தலை நாங்கள் சந்தித்துக்கொள்கிறோம் என்று சொன்னார்கள். அந்த உள்ளாட்சி மன்றத் தேர்தல் வரத்தான் போகிறது. தேர்தல் முடிவுக்குப் பின்னாலே மக்கள் உங்களுக்குச் சரியான பதில் தரத்தான் போகிறார்கள் என்பதை நான் கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மீனவர் நலனாக இருந்தாலும், நெசவாளர் நலனாக இருந்தாலும், தொழிலாளர் நலனாகக் இருநதாலும் விவசாயத் தொழிலாளர் நலனாக இருந்தாலும் அதில் அதிக அளவிற்கு அக்கரை செலுத்தி நல்ல திட்டங்களை இந்த அரசு நிறைவேற்றி இருக்கிறது, நிறைவேற்றி வருகிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதே போல், இந்த அரசின் நிதிநிலை அறிக்கையில் மின்சார உற்பத்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, மின்சார உற்பத்தித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறது. எனக்கு ஒரு எண்ணம் தோன்றுகிறது. நம்முடைய தமிழ் நாட்டிற்கு பக்கத்திலே இருக்கிற இலங்கையில் நீர்நிலைகள் மூலமாக அதிகமான அளவிற்கு மின்சாரம் உற்பத்தி செய்கிறார்கள். நம்முடைய தமிழக அரசாங்கம் மத்திய அரசாங்கத்தின் அனுமதியோடு இலங்கை அரசை அணுகி, தமிழ் நாட்டிற்கு மின்சாரம் பெறுவதன் மூலம் தமிழ் நாட்டில் உள்ள மின்சாரப் பற்றாக்குறை குறையும், குறிப்பாக தஞ்சை மாவட்டத்திற்கு அது மிகவும் பயன்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டம் தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய மாவட்டம். ஆகவே, தொழில் துறையில் பின் தங்கிய மாவட்டமாக தஞ்சை மாவட்டத்தை அறிவித்து, அந்த மாவட்டத்தில் தொழில்கள் பெருக வழிவகை செய்யவேண்டும் என்று இந்த அரசை நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

கல்வி வளர்ச்சியில், 1242 பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டதன் விளைவாக, கிராமப் பகுதிகளில், மேல் நிலைக் கல்விக்கான வசதிகள் பரவலாக்கப்பட்டு இருக்கிறது. கிராமப்புறங்களில் இருக்கும் மக்கள் இதனால் மேல்நிலைக் கல்வி கற்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அதற்காக இந்த அரசை நான் பாராட்டுகிறேன். இந்த ஆண்டும் 150 உயர்நிலைப் பள்ளிகளில் மேல்நிலைப் பிரிவுகள் தொடங்க இருப்பதை வரவேற்று, இவ்வாறு பல பள்ளிகள் திறக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சியிலும், கோவையிலும் அமைய இருக்கும் பல்கலைக் கழகங்கள் இந்த ஆட்சியின் சாதனை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். திருச்சியில் அமைய இருக்கும் பல்கலைக் கழகத்திற்கு தந்தை பெரியார் பெயரைச் சூட்ட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். மருத்துவ வசதிக்காகவும் மற்றவற்றிற்காகவும் இந்த அரசு நிதி ஒதுக்கியுள்ளதை நான் வரவேற்கிறேன்.

வேலைக்கு உணவு திட்டத்தின் கீழ் மத்திய அரசாங்கம் கோதுமை தான் கொடுத்து வந்தது. புரட்சித் தலைவர் அவர்கள் மத்திய அரசோடு வாதாடி அரிசி வாங்கிக்கொடுத்ததற்காக நான் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரிசனங்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட நிதி, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு என்று சொல்லி செலவழித்துவிட்டு, அரிசன மக்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் இருந்தது கலைஞர் ஆட்சியில் என்று அந்தக் கட்சி ஆட்சிக்காலத்தில் அமைச்சராக இருந்த திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் குற்றச்சாட்டு சொல்லிவிட்டு கட்சியை விட்டு சென்றார்கள். அப்படிப்பட்ட நிலையில் உள்ளவர்கள் இப்போது கலைஞர் ஆட்சி காலத்தில் தான் அரிசன மக்களுக்கு நன்மை செய்தது என்று இங்கே பாராட்டிக் கொண்டு இருக்கிறார்கள். அதைப் பற்றி ஒரு விசாரணை கமிஷன் அமைக்கவேண்டும் என்று மத்திய அமைச்சரவையில் ஒரு குறிப்பு இருக்கிறது. அப்படிப்பட்ட நிலையை மறந்து விடக்கூடாது என்பதை எதிர்க்கட்சியில் இருக்கும் திராவிட முன்னேற்றக்கழக நண்பர்களுக்கு நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

என்னுடைய வேதாராண்யம் தொகுதி—தஞ்சை மாவட்டத்தில் இருந்தாலும், வானம் பார்த்த பூமியாகத்தான் அது இருக்கிறது. அங்கே காவிரி நீர் ஓட வில்லை. இராமநாதபுரம் மாவட்டத்தைவிட மோசமாக இருக்கிறது. இங்கேயிருக்கும் சில உறுப்பினர்கள் கூட அதைப் பார்த்து இருப்பார்கள் என்னுடைய தொகுதியில் சாலை வசதி சரியாக இல்லை.

1980 ஜூலை 8] [திரு. எம். எஸ். மாணிக்கம்]

எங்கே செல்லவேண்டும் என்றாலும் நடந்து தான் செல்ல வேண்டும் அல்லது எல்லா ஊர்களுக்கும் ஜீப்பில் தான் செல்ல வேண்டும். சில ஊர்களுக்கு படகுகளில் கூட செல்ல வேண்டியிருக்கிறது.

நல்ல சாலை வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க, மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் என்று சொல்லி தனியாக ஒரு திட்டத்தைத் தொடங்கி இருப்பதைப்போல மண் மூடிக்கிடக்கும் கடலோரப் பகுதிகளில் சாலைகள் அமைத்து போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க தனித் திட்டம் ஒன்றை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேதாரண்யம் ஒரு தனி வட்டமாக இருந்தாலும் அங்கே இருக்கிற மக்கள் நல்ல மருத்துவ வசதி இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே அங்கே ஒரு தாலுகா தலைமை மருத்துவ மனையை உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல், வேதாரண்யம் நகரில் தங்கியிருக்கிறவர்கள் எல்லாம் சொந்த இடம் இல்லாமல் இருக்கிறார்கள். அது மட்டுமல்ல ; அவர்கள் வழக்கு மன்றத்திற்குச் செல்லும்போது, வழக்குமன்றத்தில் இருப்பவர்களை ஜாமீனில் எடுப்பது என்றால் அந்த ஊரிலே இருக்கிறவர்களால் கூட முடியாது ; வெளியூரிலே இருக்கிற உறவினர்களை சந்தித்து, அவர்களை அழைத்து வந்துதான் ஜாமீன் கொடுக்க வேண்டும். ஏனென்றால் அந்த ஊரிலே இருப்பவர்களுக்கு சொந்த நிலம் கிடையாது. ஆகவே, அங்கே குடியிருப்பவர்களுக்கு அந்த இடத்தைச் சொந்தமாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் மீனவர்களுக்கு இந்த அரசு பல வசதிகளை, நன்மைகளைச் செய்து தரவேண்டும். என்னுடைய தொகுதியில் மீனவர் காலனிகள் பல இருந்தாலும் அங்கே குடிநீர் வசதி இல்லாமல், சாலை வசதி இல்லாமல், மருத்துவ வசதி இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். குறிப்பாக வேதாரண்யம், தலைஞாயிறு பகுதிகளில் குடிநீருக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. என்னை எதிர்த்து போட்டியிட்ட வேட்பாளர் குடிநீர் தருகிறேன். குடிநீர் தருகிறேன் என்று சொல்லி வாக்குகளைப் பெற்றுவந்தார். இந்த தடவை அப்படிச் சொல்லிப் போகும்போது குடிநீர் இல்லாமல் இங்கே வரவேண்டாம் என்று மக்கள் சொல்லி விட்டார்கள். இரண்டு, மூன்று ஊர்களில் உள்ளே போகவிடாமல் தடுத்துவிட்டார்கள். இன்னும் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்கத் தவறினால் நம்மையும் அங்கே போகவிடாமல் தடுத்து விடுவார்கள். ஆகவே, அந்த பகுதிகளுக்கு உடனடியாக குடிநீர் வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எம். எஸ். மாணிக்கம்] [1980 ஜூலை 8

எனக்கு பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்து, இத்துடன் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை).

டாக்டர் கே. சௌரிராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் நிதி அமைச்சரும் அவை முன்னவருமான மாண்புமிகு நாவலர் அவர்கள் 1980-81 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை அவை முன்னாலே வைத்ததன் காரணமாக அந்த விவாதத்தில் கலந்து கொள்வதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கி கிறேன்.

எங்களுடைய தோழமைக் கட்சி இன்று ஆட்சிப் பொறுப்பில் இருக்கிற காரணத்தால் அவர்கள் கொண்டு வந்திருக்கிற பல நல்ல அம்சங்களை பாராட்டுகிற அதே நேரத்தில் நாங்கள் எதிர்க்கட்சிகள் வரிசையில் இருக்கிற காரணத்தால் அவர்கள் கொண்டுவருகிற திட்டங்களில் இருக்கிற குறைகளையும் சுட்டிக்காட்டுகின்ற சூழ்நிலையிலே நாங்கள் இருந்து கொண்டிருக்கிறோம்.

ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் சார்பாக அதனுடைய 'மேஜர் பார்ட்னர்'—பெரும்பான்மை பங்குதாரராக இருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சட்டசபையில் அறுதிப் பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைத்திருக்கிறது. அதே நேரத்தில் அவர்கள் வெற்றிபெற்ற பிரமாதத்தில் மகிழ்ச்சிக் கடலிலே திளைத்து, தங்கள் மேல் சுமத்தப்பட்டிருக்கிற பொறுப்புகளை உணராமல் போனால் வெற்றியைத் தேடித் தந்த மக்கள் வீழ்ச்சியைத் தருவதற்கும் தயங்கமாட்டார்கள். 1977-ஆம் ஆண்டு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிபெற்று ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது மக்களிடையே இருந்த மகிழ்ச்சியை இன்று ஜனநாயக முற்போக்குக் கூட்டணி சார்பாக வெற்றிபெற்று ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறபோது காண முடியவில்லை. காரணம் அதற்கு மேலாக மக்கள் எதிர்பார்த்திருக்கிறார்கள்.

There is more amount of expectation amongst the people than jubilation as happened in 1977—

என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1980 ஜூலை 8] [டாக்டர் கே. சௌரிராஜன்]

ஜனநாயக முற்போக்குக் கூட்டணி தேர்தல் களத்திலே குதித்தபோது அனைத்துக் கட்சியினரும் ஒன்றாகச் சேர்ந்து ஒட்டுமொத்தமாக தேர்தல் அறிக்கை சமர்ப்பிக்கவில்லை. ஒவ்வொரு கட்சியினரும் தனித்தனியாக அவர்களுடைய தேர்தல் அறிக்கைகளை சமர்ப்பித்தார்களே தவிர எல்லோரும் சேர்ந்து 'காமன் மினிமம் ப்ரோகிராம்'—குறைந்தபட்ச திட்டத்தை மக்கள் முன் வைக்கவில்லை. ஆகவே, இன்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, அவர்களுடைய தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் போனால் அதனுடைய அவப்பெயர் அவர்களுக்குத்தான் ஏற்படும் ; மற்ற தோழமைக் கட்சியினருக்கு ஏற்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவர்கள் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் அவர்களைக் கட்டாயப்படுத்தி வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு தோழமைக் கட்சியான காந்தி காமராஜ் தேசிய கட்சி இருக்கிறது என்பதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[முற்பகல் 10–20]

அடுத்தபடியாக அவர்கள் தேர்தல் நேரங்களிலே வாக்குறுதிகளை அளித்திருக்கிறார்கள். அந்த வாக்குறுதிகளை அவர்கள் நிறைவேற்றாவிட்டால் மக்கள் அவர்களை வெளியேற்றுகின்ற சூழ்நிலை, அதனால் ஏற்பட்டால் அவர்களுக்காக வக்காலத்து வாங்கினோம் என்ற காரணத்திற்காக எங்களையும் குப்பைக் கூடையில் போட்டுவிடுவார்களோ என்ற பயமும் எங்களுக்கு இருப்பதை உணர்கிறோம். ஆனால் அதே நேரத்தில் ஆட்சியாளர்கள் நல்ல காரியங்களைச் செய்தால் அதைப் பாராட்டுகின்ற நேரத்தில், அந்தப் பாராட்டுதலிலே பங்கு இல்லாமல் அப்பாவிகளாக இருக்கின்ற நிலைமையும் ஏற்படும். ஆகவே இதை உணர்ந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எங்களைப் பொறுத்தவரையில் அப்படித்தான் நாங்கள் உணருகிறோம். மாக்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினரும், மற்ற கட்சியினரும் எப்படி உணர்கிறார்கள் என்பதை நாங்கள் சொல்லத் தயாராக இல்லை. 1977ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17 ஆம் தேதி அன்று இங்கே ஆட்சி கலைக்கப்பட்டது என்று அறிவிக்கப்பட்டது. அப்போது பிப்ரவரி 24-ம் தேதி என்று நினைக்கிறேன். அன்றைய தினம் முதலமைச்சரவர்களும், இன்றைய முதலமைச்சர் அவர்களுமான புரட்சித் தலைவர் அவர்கள் பிரெசிடென்ட் ஹோட்டலிலே அனைத்துக் கட்சியினரையும் அழைத்து எங்களுக்கெல்லாம் உணவு அளித்து உபசரித்து அவர்கள் ஆற்றிய உரையை இப்போது மீண்டும் நினைவு படுத்த விரும்புகிறேன்.

[டாக்டர் கே. சௌரிராஜன்] [1980 ஜூலை 8

சின்னக்கட்சி, பெரிய கட்சி என்று நான் பாகுபாடு படுத்தியது கிடையாது, யாரையும் அலட்சியப்படுத்தியது கிடையாது அப்படி உதாசீனப்படுத்தி புண்படுத்தவேண்டும் என்ற நோக்கத்துடன் செய்யவில்லை, அவர்கள் புண்பட்டிருந்தால் அவர்கள் என்னை மன்னிக்கவேண்டும், ஜனநாயகத்தைக் காப்பதற்கு எல்லோரும் தோள் கொடுக்கவேண்டும் என்று கூறினார்கள். ஆகவே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அநீதி இழைக்கப்பட்டு விட்ட காரணத்தால் காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் இயக்கம் புரட்சித் தலைவர் அவர்களின் அணியிலே சேர்ந்தோம். நியாயம் கேட்டோம். அதே நேரத்தில் நியாத்திற்காகப் போராடி வெற்றிபெற்றிருக்கிறோம். ஆனால் இந்த மாமன்றத்திற்கு வந்திருப்பது மக்களுக்காக நியாயம் கேட்பதற்காகத்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து வரவுசெலவுத்திட்டம் என்று சொன்னாலே உடனடியாக மக்கள் மத்தியிலே ஏற்படுகின்ற எண்ணம் விலைவாசிகள் பற்றித்தான் இருக்கும். பட்ஜெட் வருகிறது. எனவே, பொருள்களின் விலைகள் எல்லாம் ஏறிவிடும் என்றுதான் நினைப்பார்கள். ஆகவே விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்கான எந்தவிதமான நடவடிக்கைகள் பற்றி எதுவும் இதிலே சொல்லப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். திருவொற்றியூரிலே பால்ம் ஆயில் $2\frac{1}{4}$ கோடி ரூபாய் அளவுக்கு ஒரு தனியாரிடத்திலே பதுக்கி வைக்கப்பட்டிருந்தது. அதைக் கடலை எண்ணையுடனும், தேங்காய் எண்ணையுடனும் கலந்து அவர் விற்கலாம். ஆனால் ஒரு தனிப்பட்ட நபரிடத்திலே இவ்வளவு மதிப்புள்ள எண்ணை பதுக்கி வைக்கப்பட்டு அதிக விலைக்கு விற்கப்படுகிறது என்று சொன்னால், அதை விற்கின்றபோது 10 கோடி 15 கோடி ரூபாய் அவருக்குக் கிடைத்துவிடக்கூடும். இந்த எண்ணையின் அளவு என்ன தெரியுமா? $4\frac{1}{2}$ கோடி மக்களுடைய ஒரு மாதத் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய அளவு ஆகும். இந்த அளவு எண்ணை ஒரு தனிப்பட்ட நபர் முடக்கி வைத்துக்கொண்டிருக்கின்றார். அப்படிப்பட்ட சுரண்டல்காரர்களைத் தடுக்க என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன். சுரண்டலையும், பதுக்கலையும் ஒழிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது மத்திய அரசின் கடமை அல்ல. தமிழக அரசே அதனை நிறைவேற்ற மத்திய அரசு நமக்கு போதிய அதிகாரத்தைக் கொடுத்திருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனால் விலைவாசிகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. அதற்கு வரவு செலவுத் திட்டத்திலே எந்தவிதமான நடவடிக்கைகள் பற்றியும் சுட்டிக்காட்டப் படவில்லை என்பதை தெரிவிக்க விரும்புகிறேன்.

1980 ஜூலை 8] [டாக்டர் கே. சௌரிராஜன்]

அடுத்தப்படியாக அக்ரிக்கல்சர் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்தில் விவசாயத்தை நம்பி 37 சதவீதம் பேர்கள் வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். நேற்று பத்திரிகையிலே ஒரு செய்தி தரப்பட்டிருக்கின்றது. அதாவது விவசாய சங்கத்திலே உள்ளவர்கள் சொல்கிறார்கள். விவசாய நிலங்கள் அனைத்தையும் தேசிய உடைமை ஆக்கிவிடலாம் என்று சொன்னார்கள். ஆகவே விவசாயத்தில் ஈடுபட்டிருப்பதால் எந்த விதமான லாபமும் இல்லை என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது இலாப கரமான தொழிலாக இல்லாத காரணத்தால்தான் விவசாய நிலங்களை நாட்டுடைமையாக்க வேண்டும் என்று சொல்கின்ற நிலைக்கு விவசாயிகள் வந்துகொண்டிருக்கின்றார்கள். ஆகவே அதன் காரணத்தைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதைவிட்டு 60, 40, 75, 25 என்ற பிரச்சினைகளிலே ஈடுபட்டிருக்கின்றோமேயொழிய விவசாயிகளினுடைய உண்மையான பிரச்சினைகளுக்கு ஒட்டுமொத்தமான தீர்வு காண இதுவரையில் எந்த அரசும் முயற்சிகளை மேற்கொண்டு ஈடுபடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கம்யூனிஸ்ட் நாடுகளிலே பேராசிரியர், டாக்டர் நடராஜன் அவர்கள் சுற்றுப் பயணம் செய்த போது, போலந்து நாட்டிற்கும் சென்றிருந்தார். அங்கே ஒரு விருந்துக்குச் சென்றிருந்தார். விருந்திலே ஒரு விவசாயி அவருக்கு ஒரு ரொட்டி துண்டைக் கொடுத்த போது, அதை சாப்பிட்டு விட்டு இதற்கான மாவு உங்கள் நிலத்திலே விளைந்த கோதுமையிலிருந்து எடுக்கப் பட்டதா என்று கேட்டார்? அதற்கு அந்த விவசாயி என்னுடைய நிலத்திலே விளைந்தது அல்ல, அரசாங்கம் என்னிடம் இருந்து கோதுமையை அதிக விலைக்கு வாங்கிக் கொண்டு, எனக்கு குறைந்த விலைக்கு இந்த ரொட்டியைத் தயாரித்துக் கொடுக்கும்போது, நான் ஏன் என்னுடைய மாவை வீணாக்க வேண்டும் என்று கேட்டானாம். அதே போல நம்முடைய விவசாயிகளிடமும் கவனம் செலுத்தி அவர்களின் விளை பொருள்களுக்கு நல்ல விலை கிடைப்பதற்கு, நியாயமான, கட்டுப்படியாகக் கூடிய விலை கிடைப்பதற்கு உறு துணையாக இந்த அரசாங்கம் நிற்குமே யானால், நிச்சயமாக இந்தப் பிரச்னைக்கு தீர்வு காண முடியும். இல்லை என்று சொன்னால், இந்தப் பிரச்னை தீரவே தீராத ஒன்று என்று சொல்லிக் கொள்ள ஆசைப் படுகிறேன். (மணியடிக்கப்பட்டது).

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> தயவு செய்து பேச்சை முடித்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் 5 நிமிடங்கள்தான். இன்னும் நிறைய உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள்.

டாக்டர் கே. சௌரிராஜன்: If you are not interested and if you are not prepared to give me time, I am prepared to sit down எனக்கு முன்னாலே பேசியவர்கள் 4 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் ஒன்றும் சொல்லவில்லை. என்னை மட்டும் சீக்கிரம் முடிக்கச் சொல்கிறீர்களே. கட்சியின் துணைத் தலைவர் என்ற முறையிலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் பேச வேண்டியதை விரிவாக மானியம் பற்றி விவாதம் வரும்போது அதிலே பேசலாம். இப்போது சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

டாக்டர் கே. சௌரிராஜன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. நான் ஒரு மருத்துவன். டாக்டர் பட்டம் படித்து விட்டு இங்கே வந்திருக்கிறேன். என்னை மக்கள் தேர்ந்து எடுத்து அனுப்பியிருக்கிறார்கள். என்னுடைய சிந்தனைகளை எடுத்துச் சொல்வதற்கு என்னை அனுமதிக்கவில்லை என்றால், அவைகளை கேட்க நீங்கள் தயாராக இல்லை என்று சொன்னால், நான் இங்கே வந்ததற்குப் பயன் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நேற்றைக்கு நிறையப் பேருக்கு பேசுவதற்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டது. உங்களை மாதிரி தானே மற்றவர்களும். எல்லோரும் பேச வேண்டும். மற்றவர்களுக்கும் வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்று தான் உங்களை சீக்கிரம் பேசி முடித்துக் கொள்ளச் சொல்கிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன்: சிறிய கட்சி என்பதினால் எங்களை ஒதுக்கி வைக்கிறீர்கள் என்றுதான் கருதுகிறேன். இன்னொரு நாள் விவாதத்தை நீட்டினால் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய விவாதங்கள் எவ்வளவு நாட்கள் நடைபெற வேண்டும், எப்படி நடக்க வேண்டும் என்பதைப்பற்றி எல்லாக் கட்சித் தலைவர்களும் சேர்ந்து, நேரத்தை ஒதுக்கி அளித்திருக்கிறார்கள். எவ்வளவு பேர் பேச வேண்டும் என்றும், ஒவ்வொரு கட்சியைச் சேர்ந்தவர்களும் எவ்வளவு பேர்கள் கலந்துக் கொள்ளலாம் என்றும் விவாதிக்கப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

1980 ஜூலை 8] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அதற்கு ஒப்புக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவருக்கு முன் உரிமை அளித்து சலுகையாக நேரம் அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று சொன்னால், அதே போல் மற்ற உறுப்பினர்களும் கேட்பார்கள். அதனால் இந்த அவையை திட்டமிட்டப்படி நடத்திச் செல்ல இயலாது போய்விடும். எல்லா உறுப்பினர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிற அதே நேரம் தான் உங்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குள் உங்கள் பேச்சை நீங்கள் முடித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன் : நான் துணைத் தலைவர் அவர்களை இன்னும் சில நிமிடங்கள் மட்டுமே நீட்டித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்குள் முடித்து விடுகிறேன்.

அடுத்து மக்கள் நல்வாழ்வுத் துறையை எடுத்துக் கொண்டால், இதற்கென்று 12.28 கோடி, அதாவது 3 சதவீதம் தான் இந்தத் துறைக்கு வருவாயிலிருந்து ஒதுக்கியிருக்கிறோம். இது மக்கள் நல்வாழ்வுக்கு அல்ல, மருத்துவர்கள் நல்வாழ்வுக்குத்தான். நான் ஒரு மருத்துவன். தினமும் 100 பேர்களுக்கு மருத்துவம் பார்க்கிறேன். அவர்களுக்கு மருந்துக்கென்று சுமார் மாதம் ஒன்றுக்கு 2 ஆயிரம் ரூபாய் செலவு ஆகிறது. 483 சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. அவைகளில் உள்ள டாக்டர்கள் நர்சுகள் மற்றும் சிப்பந்திகளுக்குத் தான் இந்தப் பணம் சம்பளமாகக் கொடுக்க முடியுமே தவிர, அங்கே மருந்து வாங்குவதற்குப் பயன்படாது. இங்கே பெரிய மருத்துவ மனைகளில், ஜெனரல் ஆஸ்பத்திரி போன்ற இடங்களில் விலையுயர்ந்த மருந்துகள் இருக்கின்றன. ஆனால் கிராம சுகாதார நிலையங்களில் ஒரு ஏ.டி.சி. இன்ஜெக்ஷன் கூட கிடையாது. சாதாரண மாத்திரைகள் கூட கிடையாது. அதனால் தான் சொல்கிறேன். இந்த நிதி ஒதுக்கம் மக்கள் நல்வாழ்வுத் துறைக்காக அல்ல. மருத்துவர்கள் நல்வாழ்வுத் துறைக்குத்தான் என்று. அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கும் வகையில் தான் இது உதவும்.

மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்கள் இந்தத் துறைக்கு மேலும் 6,000 ரூபாய் ஒதுக்க வேண்டும் என்று பரிந்துரை செய்திருக்கிறார். அதை நான் உளமாற பாராட்டுகிறேன் என்று சொல்லிக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-30].

அடுத்தபடியாக, கல்விக்காக நாம் செலவழிப்பது 5 சதவீதம் தான். கல்வியின் தரம் தமிழ்நாட்டில் உயராமல் இருக்கிறது என்று சொல்கிறோம். பட்டதாரிகளுக்கு வேலை

இல்லை என்ற நிலை இருக்கிறது. படித்துப் பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்கு, வேலையில்லாமல் இருப்பவர்களுக்குப் பணம் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் அந்தப் பட்ட தாரிகளுக்கு ஏன் வேலை கிடைக்கவில்லை என்பதை யாரும் சிந்தித்துப் பார்க்கவில்லை. அவர்கள் படித்துப் பட்டம் பெற்று இருக்கிறார்களே தவிர அந்தப் பட்டம் அவர்களுக்குச் சோறு போடுவதில்லை. ஆகவே, வெறும் பட்டதாரிகளை உருவாக்கு வதைவிட தொழில் கல்வி படித்தவர்களை அதிகமாக உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு ராஜாஜி போன்றவர்கள் சொன்னதைப் புறக்கணித்ததன் பயனைத் தான் தமிழகம் இன்று அனுபவிக்கி றது என்று சொல்ல வேண்டியிருக்கிறது.

அடுத்தபடியாக, சென்னை நகரத்தை எடுத்துக் கொண்டால், என் தொகுதி பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறி அமர்ந்துவிடலாம் என்று நினைக்கிறேன். சென்னை நகரத்தை சிங்காரச் சென்னை ஆக்குவோம், சென்னையை அழகுமிகு சென்னை நகரமாக்கு வோம். கூவம் மணக்கும் என்றெல்லாம் சொல்லி 1957-ல் சென்னை மாநகராட்சியைப் பிடித்தார்கள், ஆனால், இன்றும் அந்தக் கூவம் அப்படியே இருந்துக் கொண்டிருக்கிறது. சென்னை நகரம், சிங்காரச் சென்னையாக அல்ல சாக்கடைச் சென்னை யாக ஆகி விட்டது. சட்டமன்றத் தேர்தலுக்காக நின்றபோது பல்வேறு வட்டங்களிலிருந்து எனக்கு வந்த பெட்டிஷன்ஸ் 300-க்கு மேல் இருக்கின்றன. தெரு விளக்குகள் எரியவில்லை, சாக்கடை வசதி சரியாகவில்லை, கக்கூஸ் வசதி சரியாகவில்லை என்று சொல்லி என்னை கௌன்சிலராக கருதினார்களே தவிர சட்டமன்ற உறுப்பினர் தேர்தலுக்கு நிற்பதாகக் கருதவில்லை. இந்த நிலை நீடிக்கும் ஆனால் நிச்சயமாக இந்த மன்றத்தில் உள்ள சென்னை நகர உறுப்பினர்கள் வெளியே யாரும் நடமாட முடியாது. மற்ற உறுப்பினர்களைப் பற்றி நான் கவலைப்பட வில்லை. சென்னை நகரிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் வெளியே போக முடியாது. திரு. இளைய பெருமாள் அவர்கள் அழகாக எடுத்துச் சொன்னார்கள். சென்னை மாநகராட்சியை உடனடியாகச் சீர்திருத்தியாக வேண்டும். அந்த அமைப்புக்கு, மாநகராட்சித் தேர்தலை நடத்தாவிட்டாலும் பரவாயில்லை, குறைந்த பட்சம் யாராவது பத்து அல்லது இருபது பேர்களை அட்வைஸர்களாகப் போட்டு, தகுந்த அதிகாரங்களை வழங்கி, சென்னை நகரைச் சீர்படுத்த உடனடியாக தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என தாழ்மையுடன் வேண்டிக் கொண்டு இந்த அளவிற்காவது எனக்கு வாய்ப்பு கொடுத்ததற்காக நன்றி கூறி விடைபெறுகி றேன். வணக்கம்.

1980 ஜூலை 8]

திரு. ந. சிவஞானம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1980-81 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் இந்த அவையில் வைக்கப்பட்டுள்ளது. இந்த நிதிநிலை அறிக்கை வெளியில் விளம்பரப்படுத்திக்கொள்கின்ற அளவிற்கு உள்ளுக்குள் இல்லை என்பது தெரிகிறது. இந்த நிதிநிலை அறிக்கை ஏழை எளிய மக்களுக்கு ஏற்றதாக அமைக்கப்படவில்லை, சமதர்மக் கொள்கையுடையதாக அமையவில்லை.

விவசாயத்தைப் பொறுத்தவரையில், சிறு விவசாயி, பெரிய விவசாயி என்று அரசு பிரிப்பது நல்லதல்ல. சுதந்திரம் வந்த பிறகு காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் மிட்டா மிராசுதாரர்கள், ஜமீந்தார்கள் ஒழிக்கப்பட்டு நிலச்சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள். அதற்குப்பின் வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் அவர்களும் நிலச்சீர்திருத்தத்தை மிகத் தீவிரமாகக் கொண்டுவந்தார்கள். அதற்குப் பின் வந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசும் நிலச்சீர்திருத்தச் சட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால், இப்படியிருந்தும் மிகக் குறைவான அளவிற்கு நிலம் இருப்பதன் காரணமாக சிறிய விவசாயிகள், பெரிய விவசாயிகள் என்று பாகுபடுத்துவது ஏன் ? என்று கேட்க விரும்புகிறேன். விவசாயிகள் கடன்களையெல்லாம் ரத்து செய்வோம் என்று தேர்தல் அறிக்கையில் சொன்னார்கள். மத்திய அரசை எதிர்பாராமல் இந்த அரசே தன் நிதியைக் கொண்டு விவசாயிகள் கடன்களை ரத்து செய்வோம் என்று தேர்தல் காலத்தில் தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் இந்த 1980–81 நிதிநிலை அறிக்கையில் அதற்காக எந்தவிதமான நிலையையும் ஏற்படுத்தாமல் இருப்பது வருந்தத்தக்கது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தஞ்சையில் விவசாயிகள் கடன்கள், ஏறக்குறைய 200 கோடி ரூபாய்க்கு மேல் தள்ளுபடி செய்யப்படும் என்று அறிக்கை விட்டிருந்தார்கள். அந்த முறையில் விவசாயிகளுக்கு நல்ல நம்பிக்கை இருந்தது. ஆனால், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அதை மறுத்ததைக் கண்டு விவசாயிகள் பல்வேறு சந்தேகங்களை அப்போதே எதிர்நோக்க வேண்டியிருந்தது. இந்த நாட்டின் முதுகெலும்பாக இருக்கிறார்கள் விவசாயிகள். அறுபது கோடி ரூபாய் அளவிற்குத்தான் கடன்கள் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, இதை மீண்டும் புனர்பரிசீலனை செய்து விவசாயிகளுக்குள்ள ஏறத்தாழ 450 கோடி ரூபாய் கடன் சுமையை ரத்து செய்ய வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன். நெல்லுக்கும் கரும்புக்கும் கட்டுபடியாகக்கூடிய விலையை நிர்ணயம் செய்ய வேண்டும். இதற்கு முன்பு இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு மத்திய அரசின் விலை, அவர்கள் நிர்ணயித்த விலை குறைவாக இருந்தாலும் போனஸாகவும், வண்டிச்சத்தமாகவும் ஏறத்தாழ ரூபாய் 15 மானியமாகக் கொடுத்தார்கள். அந்த

முறையில் இந்த அரசும் உற்பத்தியாளர்களுக்கு உற்பத்தி செய்ய படுகிற நெல்லுக்கு மத்திய அரசு நிர்ணயித்திருக்கும் விலையோடு இந்த அரசு அதிகமாக மானியம் கொடுத்து உதவ வேண்டும், நெல்லுக்குக் கொடுக்கக்கூடிய விலையை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஜூன் மாதம் 12 ஆம் தேதி மேட்டூர் அணை திறக்கப்பட்டு, தஞ்சை மாவட்டத்தில் எல்லா பாசன வாய்க்கால்களுக்கும் தண்ணீர் வந்தாலும், விவசாயம் செய்ய வசதியில்லாத காரணத்தால், விவசாயிகளுக்கு போதிய பண வசதி இல்லாத காரணத்தினால் விவசாயம் தடைப்படுகிறது. காரணம், அங்கே விவசாய வேலை துரிதமாக நடைபெறுவதற்கு உடனடியாக கடன் கொடுக்கப்பட வேண்டும். தஞ்சை மாவட்டம் பூராவும், குறுகிய கால, உயர் விலைச்சல் தரக்கூடிய, ஏ.டீ.டி. 31 வகை விதை நெல் எந்த விவசாய டிப்போக்களிலும் கிடையாது. அதனால், அங்கே இந்த குறுவை சாகுபடி செய்கின்ற நிலைமை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

தண்ணீர் நீர்த்தேக்கத்தில் அதிகம் உள்ளதால், உயர் மட்ட கால்வாயை உடனடியாக திறந்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தஞ்சை மாவட்டம் இந்திய துணைக் கண்டத்திற்கே அரிசி கொடுத்தாலும், தமிழ்நாட்டிற்கே அரிசி கொடுத்தாலும், இன்றைய தினம் தஞ்சை மாவட்டம் மிகவும் பிற்போக்கான நிலைமையிலேயே இருக்கின்றது. காரணம், அங்கு மக்களுக்கு ஏற்ற வகையில், அரசாங்கத்திலே நெல்லுக்கு உயர்ரக நிலையங்கள் இருந்தாலும், அதற்காக பல பண்ணைகள் அங்கே இருந்தாலும், தஞ்சையிலே ஒரு விவசாயக் கல்லூரி இல்லாதது மிகவும் வருந்தத் தக்கது. எனவே, அந்த ஊரில் ஒரு விவசாயக் கல்லூரியை திறக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்த வரையில் அதிகப்படியான பணம் நிதிநிலையிலே ஒதுக்கப்பட்டிருந்தாலும், இந்த மாநிலத்தின் மின்சார தேவையை, சுயதேவையை பூர்த்தி செய்ய வேண்டியது நம்முடைய தலையாய கடமையாகும். நீர் மின்சாரத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய மாநிலம் தன்னிறைவு பெற்றுவிட்டாலும், தெர்மல் ஸ்டேஷன்களைப் பொறுத்த வரையில் தன்னிறைவு பெறச் செய்ய வேண்டும் என்று கேட்டு கொள்ளுகின்ற அதே நேரத்தில், கடந்த காலத்தில் மேட்டூர் அணையின் வெள்ளம் காரணமாக ஏறத்தாழ 12 கோடிக்கு மேல் மின்சார நிலையத்திற்கு சேதம் ஏற்பட்டிருப்பதாக செய்தித்தாள்களில் வந்துள்ளது. இந்த நிலை வருகின்ற காலத்தில் ஏற்படாத வண்ணம் அரசு தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1980 ஜூலை 8] [திரு. ந. சிவஞானம்]

அடுத்து, கல்வித் துறையில் கர்மவீரர் காமராஜ் அவர்கள் காலத்தில்தான் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து ஏழை எளிய மக்கள், கிராமங்களிலே இருக்கின்ற மக்கள் கல்வி பயில வேண்டும் என்பதற்காக கொண்டு வந்த புரட்சித் திட்டத்தை அன்றைய தினம் முதல்வராக இருந்த நம்முடைய பெரியவர் காமராஜர் அவர்கள் கொண்டு வந்தார்கள். அதன் காரணமாக, பட்டினி கிடக்கும் ஏழை எளிய மக்கள் பயன் பெற, ஏழை மாணவ மாணவிகளுக்கு மதிய உணவுத் திட்டத்தையும் கொண்டு வந்தார்கள். அதன் காரணமாக, படிப் படியாக படிப்பவர்களின் எண்ணிக்கை விகிதம் வருடா வருடம் உயர்ந்தது. அதைத் தொடர்ந்து பல ஆண்டுகளாக கல்வித் துறை விரிவடைந்துக் கொண்டு வருகிறது. எனவே, அதைத் தொடர்ந்து அரசும் ஊராட்சி ஒன்றியங்களில் கட்டப்படும் ஆரம்பப் பள்ளிக் கட்டிடங்களில் மதிய உணவு தயாரிக்கும் கூடத்தையும் கட்ட வேண்டும். இதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆனால், இன்றைக்கு பல மாவட்டங்களில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு போதிய கட்டிட வசதிகள் கிடையாது. இந்த கட்டிட வசதியை சரி செய்ய அரசு பேஸ்ட் புரோகிராம் ஒன்றைத் தயாரித்து, அந்த முறையில் கட்டிடங்கள் கட்ட முயலவேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

தொழிற் பயிற்சிக் கல்லூரிகளை ஒவ்வொரு தாலுகாவிலும் அமைத்து, அவைகள் நல்ல முறையிலே செயல்படுவதற்கு, இந்த வசதிகளை செய்து கொடுப்பதற்கு அரசு ஆவண செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய பகுதிகளில் தமிழுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்று இன்றைய தினம் சொல்லப்படுகிறது. ஆனால், அரசியல்வாதிகள் தமிழ் மொழிக்கு இந்த முக்கியத்துவத்தை கொடுக்கவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அண்மையில் உள்ள சிங்கப்பூரில் 4 மொழிகள் இருந்தாலும், அந்த 4 மொழிகளும் ஆட்சி மொழிகளாக அங்கே இருக்கின்றன. அதே போல், இந்த அரசு இரு மொழிக் கொள்கை உடையது என்று அறிவித்தாலும், அதன்படி அரசு உத்தரவுகள் பிறப்பிப்பதில்லை. குறிப்பாக சொல்ல வேண்டுமானால், தலைமைச் செயலகத்திலிருந்து வருகின்ற எல்லா உத்தரவுகளும் ஆங்கிலத்தில்தான் வருகின்றதே தவிர, தமிழிலே வருவதில்லை. எனவே, தமிழில் வருவதற்கு இந்த அரசு தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள் கொள்கிறேன். குறிப்பாக, இன்றைய தினம் தமிழகத்திலே இருக்கின்ற அரசியல்வாதிகளின் குழந்தைகளை தமிழ் மீடியத்திலே சேர்க்க வேண்டும். ஆனால், இன்றைய தினம் பெரிய

அரசியல்வாதிகளின் குழந்தைகள் கான்வென்டிலே சேர்க்கப்படு கின்றனர். ஆகவே, இதற்கான வழிவகைகளை இந்த அரசாங்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தேர்தல் அறிக்கையிலே வீட்டுக்கு ஒருவருக்கு வேலை கொடுப் பதாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால், நிதிநிலை அறிக்கையில், அந்தத் திட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. வேலையில்லா பட்டதாரிகளுக்கு உதவித் தொகை போதிய அளவு நிதி ஒதுக்கப்படவில்லை என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கு முன் பிருந்த அரசு, பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, உயர்நிலைப் பள்ளி, அரசு அலு வலகம், உள்ளாட்சி ஒன்றியங்கள் ஆகியவைகளில் குறைந்த சம் பளத்தில் நியமிக்கப்பட்டு படிப்படியாக ஊக்குவித்தார்கள். அதுபோல், இந்த அரசு திட்டத்தைக் கொண்டுவந்து அமுல் நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசு ஊழியர்களுக்கு கிராக்கிப்படி, அலவன்சு போன்றவை கள் அறிவிக்கப்படும் என்று இந்த நிதி நிலை அறிக்கையிலே எதிர்பார்த்தார்கள். ஆனால், இந்த நிதி நிலை அறிக்கையிலே அப்படி ஒன்றும் அறிவிக்கப்படவில்லை. இதனால் அவர்கள் ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள் என்பதை நான் இந்தத் தரு ணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 10-40]

என்னுடைய தொகுதியான தஞ்சை மாவட்டம் திருவோணம் பகுதி பின்தங்கிய பகுதி. நீர்ப்பாசன வசதி இல்லாத பகுதி, வானத்தை நம்பியிருக்கும் பகுதி, இந்தப் பகுதியில் மதலை முட்டிவாரி திட்டத்தை அமல் நடத்த வேண்டும். இந்த பகுதி யில் அரசும் ஊராட்சி ஒன்றியமும் ஆழ் குழாய்க் கிணறுகளை நிறுவி அந்தப் பகுதி மக்களுடைய பல்வேறு பிரச்சினைகளைத் தீர்க்க முயலவேண்டும்.

வல்லம் பகுதியில் குடிநீர்ப் பிரச்சினை சிக்கலாக இருக்கிறது. இங்குள்ள கிராமங்களிலுள்ள கிணறுகளிலுள்ள தண்ணீரைக் குடித் தால் நரம்புச் சிலந்தி வியாதி வருகிறது. குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் நிச்சயமாக நல்ல முறையில் நடவடிக்கை எடுத்து பின்தங்கிய பகுதி மக்கள்—முத்துராஜா மக்களும், அரி சன மக்களும் இருக்கிற காரணத்தால் குடிநீர் வசதியைச் செய்து கொடுப்பதோடு மட்டுமல்லாமல் போக்குவரத்து வசதியையும் பள்ளிக் கட்டிடம் போன்ற வசதியையும் மின்சார வசதியையும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது).

1980 ஜூலை 8]

*திரு. பி. முசிறிப்புத்தன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் எங்களைப் போன்ற சாமானியர்களை இடம் பெறச் செய்ய இந்திய வரலாற்றில் ஒரு பெரு முயற்சியை எடுத்துக் கொண்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் வழி நின்று அவருடைய கொள்கையை,அவருடைய இலட்சியத்தை நிச்சயமாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவர் அவர்களுக்கு இந்த நேரத்தில் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மன்றத்தின் உறுப்பினராக திருச்சி நகர மக்கள் என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள். அந்தத் திருச்சி நகர மக்களுக்கு நான் இந்த மாமன்றத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையின் பேரில் விவாதங்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த விவாதத்தில் பல்வேறு பிரச்சினைகளை எடுத்து எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களும், தோழமைக் கட்சியைச் சேர்ந்தவர்களும் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களும் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

பிப்ரவரி மாதம் 19-ம் தேதி என்னுடைய மனக் கண் முன்னால் வருகிறது. விமான தளத்தில், மீனம்பாக்கம் விமான தளத்தில் ஒரு தலைவர் வேக வேகமாக வருகிறார். நூறு கார்கள் புடை சூழ டில்லியிலிருந்து வருகிறார். அவருக்கு மாலைகள் மலை போல் போடுகிறார்கள் என்ற செய்தி. அவரைத் தொடர்ந்து அந்த கார்கள் வருகின்றன. பத்திரிகையாளர்களைச் சந்திக்கிறார். சந்திக்கிறபோது சொல்லுகிறார்—16-ம் தேதி இரண்டரை மணி நேரம் சூரியனைச் சந்திரன் மறைத்தது அதுபோல் தமிழ்நாட்டில் இரண்டரை ஆண்டு காலம் சந்திரன் சூரியனை மறைத்தது ; இனிமேல் சந்திரன் சூரியனை மறைக்க முடியாது, சூரிய ஒளி பிறக்கப் போகிறது என்று சொன்னார்கள் தமிழ்நாட்டு மக்கள்—இந்தச் சூரியன் அண்ணா தந்த சூரியன் அல்ல ; இது சுயநலச் சூரியன் ; இந்தச் சூரியன் வேண்டாம், சந்திரனே இருக்கட்டும் என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை மீண்டும் ஆட்சிக்கு அனுப்பித் தந்தார்கள்.

நன்றாக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். நாம் ஒரு கணம் சட்ட மன்றத்தைப் பார்க்கிறபோது—' காகித ஓடம் கடல் அலை மேலே போவது போல மூவரும் போவோம் ' என்று ஒரு பாட்டு—அதிலே நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்தான் வந்திருக்கிறார்கள். நல்ல கருத்துக்களை எடுத்துப் பேசிக் கொண்டிருந்த திரு. மாரிமுத்து அவர்கள் இங்கே இல்லை, நல்ல வழக்காடும் திறமை படைத்த முஸ்லிம் லீக் கட்சித் தலைவர் அருமைச் சகோதரர் லத்தீப் அவர்கள் இங்கு இல்லை. '' காகித ஓடம் கடல் அலை மேலே

போவது போல மூவரும் போவோம்'' என்று சொல்லி எதிர்க் கட்சித் தலைவர் மட்டும் வந்திருக்கிறார். அவர் நீடூழி காலம் வாழ வேண்டுமென்று நான் வாழ்த்துவதற்கு வயது இல்லை யென்றாலும் அவர் ஒரு திருமணத்தில் சொன்னார்—என்ன சொன்னார் என்று சொன்னால்—' 16-ம் பெற்று வாழ்க' (16 இடம் பெற்று விட்டார்கள் பாராளுமன்றத்தில்) ' எம்.ஜி.ஆர். கட்சியைப் போல் நீங்கள் இரண்டுக்கு மேல் அதிகமாகப் பெறக் கூடாது' என்றெல்லாம் வாழ்த்தினார்கள். ஆனால் தமிழக மக்கள் மிகத் தெளிவாகத் தீர்ப்பளித்தார்கள். புரட்சித் தலைவர் இந்த நாட்டை மீண்டும் ஆள வேண்டுமென்பது தமிழக மக்களின் கருத்தாக இருந்தது.

எதிர்க்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் பேசினார்கள்- புரட்சித் தலைவருக்குப் பொருளாதாரம் தெரியுமா என்றெல் லாம் கேட்டார்கள்.

1972-ல் உங்களிலே சில பேர்கள் சேர்த்த பொருளுக்கு என்ன ஆதாரம் என்று கேட்ட காரணத்தினாலே தான் அவர்கள் புரட்சித் தலைவர் ஆனார்கள், அதைத் தொடர்ந்து தமிழ் நாட்டு மக்கள் புரட்சித் தலைவரை தமிழ்நாட்டு மக்கள் தமிழ் நாட்டினுடைய முதல்வராக ஆக்கித் தந்திருக்கிறார்கள். நான் எதிர்க்கட்சியைச் சேர்ந்த தோழர்களுக்குச் சொல்லிக் கொள்வ தெல்லாம் நீங்கள் ஒரு கணம் யோசித்துப் பார்க்க வேண்டும். ஆளுங்கட்சியாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை அனுப்பிய தமிழ்நாட்டு மக்கள் எதிர்க்கட்சியாக நீங்களே போய் இருங்கள், நீங்கள் அண்ணா பெயரை ஒப்புக்குச் சொல்கிறீர்களோ அல்லது ஒப்புக் கொண்டு சொல்கிறீர்களோ நீங்கள் எதிர்க்கட்சியாக இருங்கள் என்று அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் அவர்களின் நடவடிக்கைகள் எப்படியிருக்கின்றன என்றால், எதிர்க்கட்சியாக இருப்பதற்குப் பதிலாக எதிரிக் கட்சியாக இருக்கின்ற நிலையில் இருக்கின்றன. அவர்களுடைய பேச்சுக்கள், பிரச்சினைகள் எல்லாம் அப்படித்தான் இருந்து கொண்டிருக்கின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள்.

நான் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலே நீங்கள் பிடித்த அபிநயங்கள், நீங்கள் ஆடிய ஆட்டங்கள், பிப்ரவரி 17-ம் தேதிக்குப் பிறகு நீங்கள் பேசிய பேச்சுக்கள் அவற்றின் மொத்த வடிவம் எப்படி இருக்கிறது என்றால் எனக்கு நினைவுக்கு வருவது ; ' பொய் நெல்லைக் குத்தியே பொங்க நினைத்தவன் கை நெல்லை விட்டான் அம்மா ' என்ற நிலைமை தான். கலைஞர் அவர்களு டைய படத்திலே வருகிறது என்று நினைக்கிறேன். ' பொய் நெல்லைக் குத்தியே பொங்க நினைத்தவன் கை நெல்லை விட்

1980 ஜூலை 8] [திரு. பி. முசிறிப்புத்தன்]

டானம்மா கொடும் பள்ளத்தில் வீழ்ந்து எழுந்த பின் பல்லக்கைத் தேடி நடந்தானம்மா' என்ற நிலைமை தான் ஏற்பட்டிருக்கிறது.

கடந்த இரண்டாண்டு சட்டமன்றத் தொடர்களில் நீங்கள் நடந்து கொண்ட விதம், பேசிய பேச்சுக்கள் காரணமாக 48 ஆக இருந்தவர்கள் இன்றைக்கு 38 ஆக வந்திருக்கிறீர்கள். நீங்கள் கருத்துக்களை எடுத்துக் கூறுங்கள், வேண்டாமென்று சொல்லவில்லை. நம்முடைய பேராசிரியர் இருக்கிறார், சட்டமன்றத்திலே அவர் பேசுகிறார் என்று சொன்னால் நாங்கள் எல்லாம் ஓடோடி வந்து உட்கார்ந்து கேட்போம். அவர்கள் எங்களை மாணவர்களைப் போல பாவித்து, இன்ன இன்ன திட்டங்களுக்கு இவ்வளவு இவ்வளவு நிதி ஒதுக்கியிருக்கிறீர்கள் என்ற விளக்கங்களைச் சொல்லி, நாங்கள் எப்படி எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று பேராசிரியர் தன்னுடைய மாணவர்களுக்கு சொல்வதைப் போல பல நேரங்களிலே பேசிய பேச்சுக்கள் எங்களுடைய நெஞ்சங்களை விட்டு அகலவில்லை.

குறிப்பாக எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு நான் சொல்வதெல்லாம் அதைப் போலவே அவர்கள் பிரச்சினைகளை அணுகுவார்களேயானால் அது அவர்களுக்கும் நல்லது, எங்களுக்கும் நல்லது, நாட்டுக்கும் நல்லது அது அல்லாமல் ஊருக்குப் புதுசு என்று சொல்வார்களானால், ஊருக்குப் புதுசுதான், ஆனால் உங்களைப் போன்ற பழசைப் பார்த்து அவர்கள் சட்டமன்றத்திலே இப்படித்தான் நடந்து கொள்ள வேண்டுமென்ற முறையிலே நினைத்து விடக்கூடாது என்ற என்னுடைய கவலையைத் தான் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : துணைத் தலைவர் அவர்களே, நான் ஒரு தன்னிலை விளக்கம் சொல்ல விரும்புகிறேன். நான் பழைய மெம்பர் தான். திரு. முசிறிப் புத்தன் அவர்கள் ஒரு மூதறிஞரை போல நினைத்துக் கொண்டு எங்களுக்கு அறிவுரை சொல்கிறார். மூதறிஞர் ராஜாஜி என்ற அவருக்கு நினைப்பா ? எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று சொல்கிறார்.

திரு. ஆ. கலையரசன் : அப்படியானால் ஊருக்குப் புதுசு என்று சொன்ன உறுப்பினர் எதை நினைத்துக் கொண்டு சொன்னார் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. துரை முருகன் : இப்படித்தான் நடந்து கொள்ள வேண்டுமா? ஆகவே எங்களைப் பார்த்து தப்பான எண்ணத்தை

உண்டாக்குகிற வகையிலே சொல்கிறார். அதை இந்த மன்றம் ஏற்றுக் கொள்ள வேண்டுமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. பி. முசிறிப்புத்தன்: தப்பான எண்ணத்தை உண்டாக்குகிற வகையிலே நான் சொல்லவில்லை. உணர்ச்சி வசப்பட்டு அவர்கள் ஒழுங்கு நடவடிக்கைக்கு ஆளானார்கள் என்பதைத்தான் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன்: ஒழுங்கு நடவடிக்கை எடுத்தது கட்சிக் கண்ணோட்டமே தவிர நியாயத்தின் கண்ணோட்டம் அல்ல.

திரு. பி. முசிறிப்புத்தன்: இந்த நிதி நிலை அறிக்கையிலே மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். எதிர்க் கட்சித் தோழர்களிலே சில பேர்கள் சொல்கிறார்கள், ஏதோ அவர்கள் வாக்களித்து நாங்கள் வந்தது போலவும் இது எங்கே, அது எங்கே என்று அவர்கள் கேட்கிறார்கள்.

[முற்பகல் 10-50]

நிதிநிலை அறிக்கையில் உடனடித் தேவை, குறுகிய காலத் தேவை, நீண்ட காலத் தேவை என்று படிப்படியாக நிதி நிலை அறிக்கையில் சொல்லி இருக்கிறார்கள்.

திரு. என்.வி.என். சோமு: பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், பேரவைத் தலைவரவர்களே, இங்கே நிதியமைச்சரவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற பட்ஜெட் நாட்டு மக்கள் எல்லோருக்கும் சமர்ப்பித்திருக்கின்ற பட்ஜெட்தானே தவிர, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஓட்டுப் போட்டவர்களுக்கு மட்டும் சமர்ப்பித்திருந்த பட்ஜெட்டாக இருந்திருந்தால் நாங்கள் கவலைப் பட்டிருக்க மாட்டோம். எல்லோருக்கும் சேர்த்து தான் போட்டிருக்கிறார்கள், இதனைப் பேசுகின்ற கனம் உறுப்பினரவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான்: I am raising a breach of privilege. .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எதிலே எழுப்பப் போகிறீர்கள் ?

திரு. துரை முருகன்: தலைவரவர்களே, எங்களுக்குப் பேச்சுரிமை உண்டா இல்லையா? ஓட்டுப் போட்டவர்களுக்காகத் தான் என்றால் எங்களுக்குப் பேசுவதற்கு உரிமை இல்லையா

இந்த அவைக்கு மக்களால் நாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறோம். நாங்கள் பேசுவதற்கு உரிமை உண்டா இல்லையா இது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரனுக்கு மட்டும் போடப்பட்ட பட்ஜெட்டா ? தாங்கள் இதற்குப் பதில் சொல்ல வேண்டும். இதற்கு ரூலிங் தேவை. இது நியாயமா / ஓட்டுப் போட்டவர்கள் மாதிரிக் கேட்கிறார்கள் என்று பேசினால் என்ன அர்த்தம்.

இதற்கான பதிலை துணைச் சபாநாயகரிடத்தில் இருந்து எதிர்பார்க்கிறேன். இது முறைதானா ? முன்னவரவர்களும் உட்கார்ந்திருக்கிறார்கள், அவர்கள் இது முறை என்று ஒத்துக் கொள்வார்களா ?

Thiru A. RAHMAN KHAN: Sir, I am raising a breach of privil.ge......

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றி ஆதரிக்கவோ அல்லது எதிர்க்கவோ, இது பற்றிய கருத்துக்களைக் கூற ஓட்டுப்போட்டவர்கள், ஓட்டுப் போடாதவர்கள், எதிர்ப்பவர்கள் அத்தனை பேர்களுக்கும் உரிமை உண்டு. ஆனால், அந்தக் கருத்துக்களைப் பற்றி வாக்களித்தவர்கள், நம்பி வாக்களித்தவர்கள் நம்புகிறார்கள் என்று நாங்கள் சொல்லுகிறோம். வாக்களித்த பொழுது நம்பாதவர்கள் இப்பொழுதும் நம்பாமல் இருக்கிறார்கள். அதைச் சொல்ல அவர்களுக்கும் உரிமை உண்டு ஆகையால் பேச்சுரிமை இல்லை என்று சொல்லவில்லை. வாக்களிக்காதவர்களுக்குப் பேச உரிமை இல்லை என்று சொன்னால், தவறு. மாண்புமிகு உறுப்பினரவர்கள் அப்படிச் சொன்னதாக எனக்குத் தெரியவில்லை. ஆகவே, வாக்களித்தவர்களுக்கும் வாக்களிக்காதவர்களுக்கும் நிதி நிலை அறிக்கையைப்பற்றித் தங்கள் கருத்துக்களைச் சொல்ல இந்த அவையிலே உள்ள அத்தனைப் பேர்களுக்கும் உரிமை உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. த. இராமசாமி : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் பேசும்போழுது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரன் என்று அவன் இவன் என்ற முறையில் பேசுகிறார்கள். அதை அவர்கள் வாபஸ் பெற்றாக வேண்டும்.

திரு. துரை முருகன் : அந்த வார்த்தைக்கே நான் வரவில்லையே.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர்கள் சொல்லவில்லை என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, அவையிலே ஒழுங்கை ஏற்படுத்து கின்ற முழுப் பொறுப்பும் தங்களைச் சார்ந்ததாகும். மற்ற வர்கள் அந்த முறையில் ஒழுங்குபடுத்துகின்ற முயற்சியிலே ஈடுபட வேண்டாம். இரு தரப்பினரும், தாங்கள் என்ன தீர்ப்பு அளிக் கின்றீர்களோ அதன்படி நடக்க வேண்டும். அது ஆளுங்கட்சி யாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சி வரிசையாக இருந்தாலும் சரி, தங்கள் தீர்ப்புப்படிதான் நடக்க வேண்டும்.

*திரு. பி. முசிறிப்புத்தன் : பேரவைத் துணைத் தலைவர் வர்களே, நிதிநிலை அறிக்கையில் கோவை, திருச்சி நகரங்களில் பல்கலைக் கழகம் அமைப்பது சம்பந்தமாகச் சொல்லியிருக் கிறார்கள். திருச்சி நகரம் தந்தை பெரியார் அவர்களுடைய இதயத்தில் எப்பொழுதும் இடம் பெற்ற நகரம் என்பது மட்டு மல்லாமல், இந்தத் திராவிடர் இயக்க வரலாற்றில் திருச்சி நகரம் மையக் கேந்திரமாக அமைந்திருக்கிறது. இந்தத் திருச்சி நகரத்திலே பெரியார் அவர்கள் பெயராலே அமைக்கப்பட இருக் கின்ற பெரியார் நினைவு அரங்கத்தைத் திருச்சியிலே நிறுவ வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்லா மல் இன்றைய தினம் திருச்சி நகரம் தமிழ்நாட்டினுடைய மையப் பகுதியாக, தமிழ்நாட்டினுடைய இருதயம் போன்ற இடத்திலே இருக்கிறது. அங்கே, பெரியார் அவர்களுடைய பெயரிலே பல் கலைக் கழகம் அமைப்பதோடு மட்டுமல்ல, அவர் பெயரிலே ஒரு கலை அரங்கையும் நிறுவ வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திருச்சி நகரில், 4, 5 ஆண்டு காலமாக, குடிநீர் பிரச்னை மிகக் கொடுமையான அளவிலே இருந்து கொண்டிருக்கிறது. பொன்னி நதி, பக்கத்திலே நிறைய அளவுக்கு ஓடிக்கொண்டிருந் தாலும், பக்கத்திலே இருக்கிற திருச்சி நகர மக்களுடைய தேவைக்குப் போதுமானதாக, நதியிலிருந்து குடிநீர் கிடைக்காத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லியாக வேண்டும். அந்தக் குடிநீர்ப்பிரச்சி னையை மிக விரைவிலே நம்முடைய அரசு தீர்த்து வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் விவாதங் களிலே நல்லமுறையிலே ஈடுபட்டு பேசுகின்றபொழுது, குறிப்பாக, நம்முடைய திருசித்தன் அவர்கள், விவசாயிகளுடையக் கடனையெல்லாம் முழுவதும் ஏன் தீர்க்கவில்லை, ரூ. 6

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கோடிக்குத் தீர்த்தார்களே என்றெல்லாம் சொன்னார்கள். நான் அவர் பேசுகின்றபொழுது கூடக் கேட்டேன். மத்தியிலே ஆளுகின்ற கட்சி உங்களுடைய கட்சி. நீங்கள் எடுத்துச் சொல்லி அதுபோன்ற நிதிப் பற்றாக்குறை ஏற்படுகிறபொழுது, நிறைய உதவி செய்ய வேண்டுமென்றெல்லாம் கேட்டேன்.

அவரைத் தொடர்ந்து பேசிய பெரியவர் திருஇளையபெருமாள் அவர்கள் கூட, நாங்களெல்லாம் எதிர்பாராத அளவிற்கு மிகத் தெளிவாகப் பிரச்சினைகளை எடுத்துச் சொன்னார்கள். அவர், நாய் பேரிலே, பூனை பேரிலே, பினாமி நிலங்கள் நாடெங்கும் இருக்கின்றன. அதற்கான குறிப்புகளை எல்லாம் நான் கொடுத்திருக்கிறேன். நடவடிக்கை எடுக்கவில்லை., நிச்சயம் நடவடிக்கை எடுத்தாக வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். பெரியவர் திரு இளையபெருமாள் அவர்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம், எங்களுக்கு உதவிகரமாக இருக்கிற அளவுக்கு, அது தென்னாற்காடு மாவட்டத்திலோ, தஞ்சை மாவட்டத்திலோ, அல்லது தமிழகம் முழுவதுமா, எங்கெங்கே, யார், யார் பெயரிலே இருக்கிறது என்கிற பட்டியலை, எங்களுடைய அமைச்சரவைக்கு நீங்கள் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்பளித்த உங்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தென்னாற்காடு மாவட்டமா, தஞ்சை மாவட்டமா என்ற விளக்கம் கேட்டார்கள். என்னுடைய நிலைமையை நான் விளக்க வேண்டியிருக்கிறது. பெறும் நிலச்சுவான்தார்கள். மிகுந்த பேரறிஞர்கள் கூட, தங்கள் வீடுகளிலுள்ள நாய்களுக்கு லில்லி என்றும், ராதா என்றும், கிருஷ்ணன் என்றும் பெயர் வைத்துக்கொள்கிறார்கள். ஆகவே, நாய், பூனை என்பதற்கு நாய், பூனை என்று அர்த்தம் இல்லை. தங்கள் வீடுகளிலுள்ள நாய்களுக்கு ராதா என்றும் கிருஷ்ணன் என்றும், லில்லி என்றும் பெயர்கள் வைத்துக் கொள்வதனால் அதை எழுதுவதற்குச் சுலபமாக இருக்கிறது.

மற்றொன்று பட்டியல் கொடுப்பதிலே எனக்கு ஆச்சரியமில்லை. நிச்சயமாக, தமிழகத்திலே தஞ்சாவூரிலே மட்டுமல்ல, தென்னாற்காடு மாவட்டதிலே மட்டுமல்ல; சென்னையிலே இருந்துகொண்டு, கோயம்புத்தூரிலும், நீலகிரியிலும், திருச்சியிலும் நிலம் வைத்துக்கொண்டு, அந்த நிலத்திலிருந்து வரும் வருமானத்தை வாங்குகிறவர்கள் இப்பொழுதும் இருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன். எனக்குத் தெரிந்த பெயரைக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். ஆனால், அரசு இருக்கிறது. முன்பு வருவாய்த்துறை அமைச்சரவர்கள் சொன்னபொழுது கூட, சென்ற அரசு நடந்த பொழுது, இரண்டரை ஆண்டுக்

காலம் நடந்தபொழுது, இந்த நில உச்சவரம்புச் சட்டத்தை ஏமாற்றியவர்கள் இருக்கிறார்கள். , சிலர் அரசுக்குத் தெரியும், அவர்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுப்போம் என்று சொன்னார்கள். (மணியடிக்கப்பெற்றது).

You please allow me. It is my own explanation. But unfortunately. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 'ஜெனரல் எக்ஸ்பிளனேஷன்' சொல்லும்பொழுது, டீடெய்ல்ஸுக்குப் போக டைம் இல்லை.

திரு. எல். இளையபெருமாள் : ஆகவே, அந்த நிலையிலே அமைச்சர்கள் இருப்பதனால், அரசு இருப்பதனால், வசதி வாய்ப்பு இருப்பதனால், என்னுடைய பேச்சிலே சொல்லியிருக்கிறேன். தாசில்தார் போன்றவர்களுக்கும், ரெவின்யூ இன்ஸ்பெக்டர் போன்றவர்களுக்கும் தெரியும் என்று சொல்லியிருக்கிறேன். அவைகளையும் அவர்கள் கவனிக்க வேண்டும், நானும் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். அரசால் முடியவில்லையென்றால், நிச்சயமாக நான் தமிழகம் முழுவதற்கும் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன் என்று மாண்புமிகு உறுப்பினருக்குத் தெளிவுபட தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-00]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், மதிப்பிற்குரிய திருஇளையபெருமாள் அவர்கள் இதே மன்றத்திலே விரிவாக விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். தன்னிடத்தில் பட்டியல் இருக்கிறது என்றும், யார் யார் பினாமி நிலம் வைத்திருக்கிறார்கள், அதை எப்போது வேண்டுமானாலும் காண்பிக்கத் தயாராக இருக்கிறேன் என்று சொல்லிவிட்டு, இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கண்டுபிடிக்கட்டும் என்று திசை திருப்பப் பார்க்கிறார்களோ என்ற ஐயப்பாட்டை உருவாக்கி இருக்கிறார்கள். நான் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், அவர்கள் உடனடியாக அந்தப் பட்டியலைக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்பதுதான்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் நான் திசை திருப்பப் பார்க்கிறேன் என்று. நான் நிச்சயமாக திசை திருப்பமாட்டேன். அந்தப் பட்டியலை நிச்சயமாகக் கொடுப்பேன். உறுதியாகக் கொடுப்பேன். ஆனால் நான் கேட்பது இந்த அமைச்சரவை என்ன செய்துகொண்டிருக்கிறது. அமைச்சர் என்ன செய்துக் கொண்டிருக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

1980 ஜூலை 8]

திரு. ரா. உமாநாத்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இப்போதுதான் பேச ஆரம்பிக்கிறேன். மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பாக இந்த பட்ஜெட்டைப்பற்றிய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: 11-30 மணிக்கு முடித்துவிடுங்கள்.

திரு. ரா. உமாநாத்: தமிழகத்தை முன்னேறச் செய்ய வேண்டும் என்றும், ஏழை எளிய நடுத்தர மக்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும் என்ற அளவிலே உள்ள முயற்சிகள் ஒரு பக்கம் இந்திரா காங்கிரஸ் ஆளுகின்ற மத்திய அரசு தலையீடு, நம்முடைய அரசியல் சட்டத்தில் இருக்கக்கூடிய லிமிட்டேஷன் அதை எல்லாம் சேர்த்தது மறுபக்கம். இந்த இரண்டுக்கும் இருக்கக்கூடிய முரண்பாடாக இருக்கக்கூடிய ஒரு குழந்தையாகத்தான் இந்த பட்ஜெட்டை நான் பார்க்கிறேன். அப்படி இருந்தும் கூட, இந்த முட்டுக்கட்டையைச் சந்தித்து, ஏழை நடுத்தர மக்களுக்கு சில நிவாரணங்கள் அளிப்பதற்கு இந்த அரசு பட்ஜெட்டை முன் வைத்திருக்கிறது என்பதும் அதில் வெற்றி கண்டு உள்ளார்கள் என்பது என்னுடைய கருத்து. முதலாவதாக நான் சொல்வது, தமிழகத்தின் பொருளாதாரம், இந்தியப் பொருளாதாரத்தில் இருந்து பிரிக்க முடியாத ஒரு பகுதியாகும் என்பது உண்மை. தமிழக மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை பாதுகாக்கும் என்று உணர்வுகள் இந்த பட்ஜெட்டில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது, பல்வேறு வார்த்தைகளிலே, அதை நான் வரவேற்கிறேன். ஏனென்றால், மத்திய பட்ஜெட்டு பேரபாயம் இருக்கிறது என்பதை அறிவோம்.

[மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் தலைமை]

நிதி அமைச்சர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் சொன்னார். துண்டு விழக்கூடிய தொகை அதனுடைய எஸ்டிமேட்டை அவர்கள் கணக்கிட்டு, 1980–81-ல் 1,400 கோடி ரூபாய் துண்டு விழப்போகிறது என்று சொன்னார். அப்படித்தான் 1979–80 அவர்கள் எஸ்டிமேட் போட்டார்கள். அப்போது சொன்னார்கள் 1,300 சொச்சம் கோடி துண்டு விழும் என்று சொன்னார்கள். அப்போது திரு. ஆர்.வி. அவர்கள் கணக்குப் பார்த்து, ஆக்சுவல் பார்த்த போது, உண்மையான துண்டு 2,700 கோடி விழுந்திருக்கிறது என்று 1979–80-ல் கொடுக்கிறார். அப்படி என்றால் 1980–81-க்கு கூறுகிறபோது ஆக்சுவல் 3,000 கோடி ஆகும் என்று நினைக்கிறேன். இது ஒரு டேன்ஜரஸ் சிட்சுவேஷன் ஆபத்தான ஏற்பாடு என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன். இது ஒரு பக்கம் இன்னொரு பக்கத்திலே 1,400 கோடி என்று நிதி அமைச்சர் கூறுகிறபோது இது ஏமாற்றக் கூடிய கணக்கு, அவர்களுடைய கணக்குப்படி துண்டு விழும்

தொகை 2,500 கோடி ரூபாயாகும். இதை எப்படி செய்திருக்கிறார்கள் என்றால் 2,500 கோடி ரூபாய் துண்டு விழும் என்றால் ஆயிரம் கோடி ரூபாய் வெளி நாட்டில் இருந்து கடன் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம் என்கிறார்கள். அப்படி எதிர் பார்த்த கடன் கிடைக்கவில்லை என்றால் 2,500 கோடி துண்டு விழும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. என்ன செய்வார்கள், காகித நோட்டு அச்சடிப்பார்கள். அது நல்ல நோட்டு அது ஆயிரம் கோடி என்றால், கள்ள நோட்டு அடிப்பதும் 1,000 கோடி. ஆக எல்லாம் சேர்த்து பல்லாயிரக் கோடி அளவிற்கு நாட்டில் பண வீக்கம் ஏற்பட்டு விடும். இப்போதே சமையல் எண்ணெய் விலை ஏறியிருக்கிறது. நாடு பூராவும் இந்த விலை ஏறியிருக்கிறது. தமிழ் நாட்டிலும் ஏறியிருக்கிறது. ஆகவே, இந்த 'டெபிசிட்' பைனான்சிங்'—பற்றாக்குறையை ஈடு செய்வதற்காக வரக்கூடிய காலத்தில் இந்த மாதிரி மத்திய சர்க்கார் செய்கிறபோது, அதனுடைய பிரதிபலிப்பு இங்கே தெரிகிறது. இன்னும் 3—4 மாதங்களில் விலைவாசிகள் நிச்சயமாக ஏறும். தமிழகத்தில் உள்ள மக்களின் குடும்ப பட்ஜெட் கவிழ்ந்து விடும். மாநில அரசின் திட்ட மதிப்பீடுகள், இந்த பட்ஜெட்டில் சொல்லியிருக்கும் திட்ட மதிப்பீடுகள், இன்னும் 3—4 மாதத்திற்குள், புதிய மத்திய பட்ஜெட்டின் பணப் பெருக்கத்தின் காரணமாக மாநில அரசின் திட்ட மதிப்பீடுகளும் கவிழ்ந்து விடும். மக்களின் குடும்ப பட்ஜெட் கவிழும்போது, நிச்சயமாக உழைக்கும் மக்கள், நடுத்தர மக்கள் போராடுவார்கள். அப்படிப்பட்ட மத்திய அரசாங்கத்தின் பட்ஜெட்டின் விளைவாக நம்முடைய பொருளாதாரத்தில் தொய்வு வருகிறபோதும், அவைகளை எதிர்த்து பல்வேறு மக்கள் போராடுகின்ற சூழ்நிலை வருகிறபோது, மாநில அரசு அவர்கள் பக்கம் நிற்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மத்திய அரசாங்கத்தின் தீய கொள்கைகளை மேற்கு வங்கம், திரிபுரா, கேரளா போன்ற மாநில முதலமைச்சர்கள் எதிர்க்கிறபோது அவர்களோடு சேர்ந்து நின்று, அந்தக் கொள்கைகளை மாற்றுவதற்கு நம்முடைய தமிழக அரசு மத்திய அரசிடம் வற்புறுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அத்தியாவசியப் பொருள்கள் பூராவும்—இந்தியா பூராவும் ஒரே விலையில் மக்களுக்கு விநியோகம் செய்வதற்கு—டிஸ்டிரிபுயூஷன் மெஷினரி—அதற்காக கொள்முதல் செய்ய தேவையான பணம் மத்திய அரசாங்கம் கொடுக்கவேண்டும் என்கிற கருத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு மட்டுமல்லாமல், நம்முடைய மாநிலத்திற்குள்ளே, நம்முடைய அதிகாரத்திற்கு உட்பட்டு வரக்கூடிய உற்பத்திப் பொருள்களை சீராக விநியோகிப்பதற்கும், உற்பத்தியான பொருள்களை வாங்கி, அந்தப் பொருள்களை மக்களுக்கு மலிவான விலையில் கொடுக்கவும் ஏற்பாடு செய்ய

வேண்டும். அந்த ஏற்பாட்டைப் பொறுத்தவரையில் இந்த பட்ஜெட் ஸ்பீச் கொஞ்சம் பலகீனமாக இருக்கிறது. அதில் ஆழம் இல்லை, தெளிவு இல்லை வலியுறுத்தி அதில் கூறப்பட வில்லை என்பது என்னுடைய கருத்து.

நமது அரசியல் சட்ட திட்டத்தில் பிரதான தொழில் வளர்ச்சித்துறை மத்திய அரசின் அதிகாரத்தில் உள்ளது. மத்திய அரசாங்கம் நம்முடைய மாநிலத்திற்கு எதிராக துஷ்பிரயோகம் செய்கிறார்கள் என்பதை பட்ஜெட் ஸ்பீச்சில் வந்து இருக்கிறது என்பதை நான் கவனித்தேன். அது தான் எங்களுடைய அனுபவம் என்று நான் சொல்லுகிறபோது—மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கூட்சி இரண்டு மாநிலத்திலும், 3-வது மாநிலத்தின் கூட்டணியாகவும் இருந்து ஆட்சி நடத்துகிறோம்—அதைத் தான் சொல்கிறேன். எங்களுடைய அனுபவமும் அதுதான். இண்டஸ்டிரிஸ் சம்பந்தமாக மத்திய சர்க்கார், அவர்களுக்குப் பிடிக்காத மாநிலங்களுக்கு எதிராக அந்த அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வது என்பது எங்கள் அனுபவம். போன வாரம் மேற்கு வங்க முதல்வர் திரு. ஜோதி பாசு அவர்கள் பகிரங்கமாக ஒரு கட்டுரை எழுதி இருக்கிறார். அதில் அவர் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். ''மைய அரசின் உதவி இன்றி, மாநில அரசின் சொந்த முயற்சியால் மட்டும், அதிகம் முன்னேற முடியாது ; ஆனால் இங்கு தான் மைய அரசின் அணுகும் முறை உதவியற்றதாக இருக்கிறது. குடிசைகள் தொழிலுக்கும் சிறு தொழிலுக்கும் மூலப் பொருள்கள் ஒதுக்குவது, சிமென்ட், ஜீனி, டீசல், மண்ணெண்ணெய் போன்றவை ஒதுக்குவதில் இந்த மாநிலத்திற்கெதிராக மைய அரசு பாகுபாடு காட்டியது பளிச்செனத் தெரிகிறது.'' பகிரங்கமாக எழுதியுள்ள ஒரு கட்டுரையில் மேற்கு வங்க முதலமைச்சர் மத்திய அரசின் போக்கு பற்றி எழுதியிருக்கிறார். மைய அரசு தமிழகத்தில் இப்படிப்பட்ட ஒர வஞ்சனை காட்டியும் கூட தொழில் துறையில் நீங்கள் செய்துள்ள ஒதுக்கீடு இந்த அரசின் நன் முயற்சியைக் காட்டுகிறது. இப்படிப்பட்ட ஒர வஞ்சனை இருந்தும், தொழில் துறையில் இவ்வளவு சிரமங்கள் இருந்தும், இந்த அரசாங்கம் நல்ல வகையில் நிதி ஒதுக்கீடு செய்து இருப்பது அதன் நன் முயற்சியைக் காட்டுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த விஷயத்தில் அசோக் லேலண்டு கம்பெனியுடன் இந்த அரசு காட்டிய அணுகும் முறையை நாங்கள் வரவேற்கிறோம். அசோக் லேலண்டு நிர்வாகம் தமிழகத்தில் கம்பெனியை விரிவுபடுத்துவது என்ற பெயரால், அந்த முதலாளிகளுக்குச் சலுகைகள் வேண்டும் என்ற பெயரால் அரசு கஜானாவை கொள்ளை அடிக்க எத்தனித்தார்கள். அன்று நடந்த கேள்வி-பதிலில்—கவர்னர் அட்ரசில் மாண்புமிகு முதலமைச்சர் பேசுகிற போது கிடைத்த தகவலின் அடிப்படையில் நான் புரிந்து

கொண்டதை வைத்துக்கொண்டு—இன்னின்ன சலுகைகள் வேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள், அது கொடுக்கப் படாததால் அவர்கள் மத்தியப் பிரதேசத்திற்குச் சென்றுவிட்டார்கள். அவர்கள் கேட்டிருந்ததை நாம் கொடுத்து இருந்தால் நம் கஜானா காலியாகி இருக்கும். அசோக் லேலண்டு எக்ஸ்பேன்ஸன் என்ற பெயரால் நம்முடைய கஜானாவை அவர்கள் கொள்ளை அடிக்க முயற்சித்தார்கள் என்று சொல்லிக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-10]

ஆனால் இங்கே இந்திரா காங்கிரசைச் சேர்ந்தவர் மாண்புமிகு உறுப்பினர்களும், தி.மு.க.வைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்களும் அந்த அசோக் லேலண்ட் விரிவுபடுத்தும் திட்டத்தைப்பற்றி அவர்கள் கேட்ட கேள்விகளைப் பார்க்கும்போது எப்படியும் அதை இங்கேதான் வைத்திருக்க வேண்டும் என்று சொன்னார்கள் என்பது என்னுடைய கருத்து. இல்லை என்றால் அவர்கள் மறுக்கட்டும். அவர்கள் கூறியபடி அந்த நிறுவனத்தாரை இங்கே விட்டிருந்தால் அந்த முதலாளியை இங்கே மேய விட்டிருப்பார்கள். ஆனால் இந்த சர்க்காரைப் பொறுத்த மட்டில்

The Chief Minister put his foot down on the Leyland managements attempts.

இந்த மாதிரி விரிவுபடுத்தும் திட்டத்தின் பெயரோடு நம்முடைய மக்கள் செலுத்திய வரிப் பணத்தால் நிரம்பியிருக்கிற நம்முடைய ட்ரஷரியை, கஜானாவை இந்த முதலாளி கொள்ளையடித்துக் கொண்டு போயிருப்பார். அதைச் செய்ய விடாமல் நம்முடைய முதலமைச்சர் அடக்கி வைத்துவிட்டார். அதற்காக முதலமைச்சரை நான் பாராட்டுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : சார், ஒரு விளக்கம். அவர் சொன்னதை சரியில்லை என்றால் மறுக்கலாம் என்று சொன்னார். அதனால் கேட்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. முத்தையா :) அவர் ஈல்டு ஆகவில்லை ; உட்காருங்கள்.

திரு. ரா. உமாநாத் : இந்த விஷயத்தில் மாண்புமிகு உறுப்பினர் ஹாஜாசெரீப் அவர்கள் கருத்தை மாண்புமிகு முதலமைச்சர் நிராகரித்ததற்காக நான் அவரைப் பாராட்டுகிறேன். மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஹாஜாசெரீப் அவர்கள் கவர்னர் அட்ரஸ் மீதான டிபேட்டிலே சொன்னது ரிக்கார்டில் இருக்கிறது.

TRUTH ALONE TRIUMPHS

1980 ஜூலை 8] [திரு. ரா. உமாநாத்]

நான் அதை கோட் பண்ணுகிறேன். டாட்டாக்களும் பிர்லாக்களும் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாயை குவித்துள்ளார்கள் என்று கூறுவது உண்மையை புரட்டுவதாகும். ரிக்கார்டில் இருந்ததை அப்படியே கோட் பண்ணுகிறேன். கரெக்ட் என்று இப்போது ஊர்ஜிதம் செய்கிறார்; ரொம்ப நன்றி. நான் கேட்க விரும்புகிறேன். 1972-ல் 589·40 கோடி ரூபாய் பிர்லா குடும்பத்திற்கு இருந்த ஆஸ்தி. 1977-ல் அது 1,070·20 கோடிக்கு அதாவது 81·6 சதவீதம் உயர்ந்திருக்கிறது.

*Thiru K. S. G. HAJA SHAREEF: Sir, I am not an agent for Birlas or Tatas. But I want the facts to be understood by the Hon'ble Members of this House. Suppesing Tatas and Birlas start an industry, say for 100 crores of rupees, their contribution is hardly about 20%. Even out of this 20%, 99% comes from equity and the rest is only their own fund. But the remaining 80% is given by the public institution, financial institutions and the Banks. There fore it does not mean that Tata and Birlas has become 100 crores worth of 'Mudhalalee'. They are not 'Mudhalalee'. They only bring up an industry worth about 100 crores of rupees. So, to say that they are 'Mudhalalee' for 100 crores of rupees is nothing but a travesty of truth. I want this should be understood.

திரு. ரா. உமாநாத்: டாட்டாவின், பிர்லாவின் ஏஜென்டாக நான் பணிபுரியவில்லை என்று 'ஃப்ரீ பேசாக' சொல்லி இருப்பது எங்கள் அப்பன் குதிருக்குள் இல்லை என்று சொல்வது போல் இருக்கிறது. பரவாயில்லை. அவர் என்ன பெயர் சொன்னாலும் அரசாங்கத்தினுடைய கணக்கிலே பிர்லாவின் குடும்பத்தினுடைய ஆஸ்தி, டாட்டா குடும்பத்தினுடைய ஆஸ்தி பிர்லா பிக் பிஸ்னஸ் ஹவுஸ், அதனுடைய ஆஸ்தி, டாட்டா பிக் பிஸ்னஸ் ஹவுஸ் அதனுடைய ஆஸ்தி இவை எல்லாம் பார்லிமென்ட் ரிக்கார்டில் இருக்கிறது. டாட்டா 641·93 கோடி 1972லே. 1977ல் 1,069·28 கோடி. அதாவது 66 சதவீதம் உயர்ந்திருக்கிறது. இப்படி 20 அல்லது 25 பெரிய குடும்பங்கள் இருக்கின்றன. 1972லே அவர்களுடைய ஆஸ்தி 3,701 கோடி ரூபாய். 1977லே 5,401 கோடி ரூபாயாக அது உயர்ந்திருக்கிறது. இது அந்த கணக்கு. இது புரட்டு அல்ல. மாண்புமிகு உறுப்பினர் திரு ஹாஜாசெரீப் அவர்களுடைய அரசாங்

கத்தினுடைய 'கம்பெனி அஃபயர்ஸ் டிபார்ட்மென்ட்'டில் நாடாளு மன்றத்தில் இருக்கிற ரிக்கார்டு. அந்த ரிக்கார்டிலே இருக்கக் கூடிய கணக்கு இது. ஒருகால் மாண்புமிகு ஹாஜாஷெரீப் அவர்கள் தன்னுடைய சர்க்கார் கொடுத்ததை புரட்டு என்று கூறுவார் ஆனால் நான் நன்றிக் கடன் பட்டிருக்கிறேன்.

இந்த நேரத்தில் நான் கேட்கிறேன். இவ்வளவு கோடி, கோடியாக பெருகியிருக்கிறதே, இது என்ன, ரூபாய் அல்லவா? இது குதிரை லத்தியா அல்லது யானை லத்தியா?

It is the hard core, the blood of the toilers, and middle class people of this country.

உழைக்கிறது டாட்டா அல்ல, பிர்லா அல்ல. அந்த 20 அல்லது 25 குடும்பங்கள் அல்ல. ஏழை நடுத்தர மக்கள். அவர்களுடைய ரத்தமும் வியர்வையும்தான் அந்த கோடிக்கணக்கான ரூபாயாகப் பெருகி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.]

மேலும் அவர்கள் கூறினார்கள், டாட்டாக்களும், பிர்லாக்களும் இந்த நாட்டு மக்களுக்கு மகத்தான சேவை செய்யக்கூடியவர்கள் என்று. என்ன சேவை செய்கிறார்கள். கொஞ்ச காலத்திற்கு முன்பு திருமதி இந்திரா சர்க்காரின் கம்பெனி லா அமைச்சரகம் ஒரு கமிட்டியை அமைத்தது. அந்தக் கமிட்டி தனது ரிப்போர்ட்டை பிரதமருக்கு சமர்ப்பித்திருக்கிறார்கள். நான் இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் சேலன்ஜ் பண்ணுகிறேன், அந்த ரிப்போர்ட்டைப் பப்ளிஷ் பண்ணச் சொல்லுங்கள் பிரதமரை, பார்க்கலாம்.(குறுக்கீடு) பிரதமரிடத்திலே நாங்கள் கேட்டோம். பப்ளிஷ் பண்ணவில்லை. அதனால்தான் நண்பர் என்ற முறையிலே திரு. ஹாஜா ஷெரீப் அவர்களைக் கேட்டேன். அவர்கள் பப்ளிஷ் பண்ணத் தயாராக இல்லை. அந்த ரிப்போர்ட் என்ன கூறுகிறது என்றால் ஏகபோக முதலாளிகள் தங்கள் பொறுப்பிலுள்ள தொழிற்சாலைகளில் பொருத்தப்பட்ட இயந்திர சக்தியை வேண்டுமென்றே குறைத்து இயக்கியதாகவும் பொருள் தட்டுப்பாடு உண்டாக்கி விலையை உயர்த்துவதற்காகவே உற்பத்தியைக் குறைத்தார்கள்'' என்று அந்த ரிப்போர்ட்டிலே இருக்கின்றது. ஆகவே டாட்டா, பிர்லா செய்கின்ற சேவை என்ன? உற்பத்தியைக் குறைப்பது, பொருள் தட்டுப்பாடு உண்டாக்குவது, விலையை ஏற்றுவது போன்ற சேவைகளைத்தான் செய்துகொண்டிருக்கிறார்கள். ஏன் அவ்வளவு தூரம்? இங்கே சென்னையிலே க்ரோம் லெதர் ஃபாக்டரியிலே....

1980 ஜூலை 8]

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரிப் : தலைவரவர்களே, டாட்டா, பிர்லா ஆகியவர்களுக்கு கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆட்சி நடத்துகின்ற மேற்கு வங்காளத்திலே அதிகமான சொத்துக்கள் இருக்கின்றதே, இவர்கள் ஏன்.......

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசியல் அதிகாரத்தை அதாவது கான்ஸ்டிட்யூஷனை மாற்றி எங்கள் கையிலே கொடுத்தரல் அந்தச் சொத்துக்களை எடுப்பதற்கு ஆவன செய்வோம் என்பதைச் சொல்லி அதற்கான அஷ்யூரன்ஸை என்னுடைய கட்சியின் சார்பாக நான் தருகிறேன் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து சென்னை கிரோம் லெதர் ஃபாக்டரி அருமையான தொழிற்சாலை. அந்தத் தொழிற்சாலையிலிருந்து 8 கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. ஆனால் திடீரென்று அந்தக் கம்பெனி 12 கோடி ரூபாய்க்கு ஆர்டர் எடுத்தது. அப்படி ஆர்டர் எடுத்தால் அதற்குத் தகுந்தாற்போல் தொழிலாளர்களைக் கொஞ்சம் அதிகரித்து நல்லமுறையில் செய்திருக்க வேண்டும். ஆனால் அப்படிச் செய்யாமல் 8 கோடி உற்பத்திக்கான தொழிலாளிகளையே வைத்து அவசரம் அவசரமாக 12 கோடி ரூபாய் அளவுக்கு உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்தார்கள். அவ்வாறு அவசரம் அவசரமாக செய்து அனுப்பப்பட்ட ஏற்றுமதியில் 75 சதவீதம் திருப்பி அனுப்பப்பட்டு விட்டது. எதற்காக? தரம் கெட்டது என்ற காரணத்தால். அதனால் ஏற்பட்ட நிலை என்ன? 8 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. கடைசியில் ஃபேக்டரியை மூடிவிட்டார்கள். ஆகவே புரொடக்ஷன் சஃபர் ஆகிவிட்டது. ஆகவே உற்பத்தி பெருக்குக்கு தடையாக நிற்பவர்கள் இவர்கள், இந்த நாட்டின் ரத்தத்தை உறியும் அட்டைகள் என்று நான் சொல்ல விரும்புகிறேன். இவர்கள் கையிலே இருக்கின்ற மீன்ஸ் ஆஃப் ப்ரொடக்ஷனை வைத்துக்கொண்டு உற்பத்தியைப் பெருக்காமல் உற்பத்தியைக் குறைத்து உற்பத்திக்குத் தடையாக நிற்கிறார்கள். இவர்களுடைய தொழிற்சாலைகளை நேஷனலைஸ் பண்ண வேண்டும் என்று சொல்வதற்கு இதுதான் காரணம்.

[மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் தலைமை.]

இது குறித்து நமது முதலமைச்சரவர்கள் முதலமைச்சர்களின் கூட்டத்தில் வற்புறுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய சர்க்கார் இதை எடுத்து மாநில சர்க்கார் கையிலே கொடுத்து அதன் மூலம் மேலும் 5 ஆயிரம் தொழிலாளர்களுக்கு—பழைய, புதிய தொழிலாளர்களுக்கு—வேலை கிடைக்கின்ற வகை

யிலே ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அதற்காக நமது சீஃப் மினிஸ்டர் அவர்கள் வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இருப்பினும் எங்களுக்கு ஒரு விமரிசனம் உண்டு. நம்முடைய மாநிலத்தைத் தொழில்மயமாக்க, தொழிலமைதி அவசியமான ஒரு அம்சம் என்று முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி கூறியுள்ளார். ஆனால் தொழிலமைதியை பெறுவதற்காக, நீங்கள் மேற்கொள்ள இருக்கும் தொழிலாளர் நலக் கொள்கை எப்படி இருக்கும் என்பதை, கனம் முதலமைச்சரவர்கள் தேர்தல் அறிக்கையிலோ கவர்னர் உரை மூலமோ, பட்ஜெட் உரையின் மூலமோ விரிவாக வரையறுத்துக் கூறவில்லை என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். தொழில் தாவாக்களில் தீர்வு முறை, வேலை நிறுத்த உரிமை, கட்டாய மத்தியஸ்தம், கூட்டு பேரத்தில் தொழிலாளி பிரதிநிதி சங்கத்தை ஓட்டுமூலம் தேர்ந்தெடுக்கும் உரிமை, சங்க அங்கீகாரம், 12(3) ஒப்பந்தம், தொழில் தகராறில் போலீஸின் பாத்திரம், போன்றவற்றில் இந்த அரசு தனது நிலையைத் தெளிவு படுத்தி விளக்க வேண்டும் என்று கேட்க விரும்புகிறேன்.

[முற்பகல் 11—20.]

அப்படிச் செய்யாததின் விளைவை நாம் பார்க்கிறோம். அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு புதிய சட்டங்கள் கொண்டு வருகிறோம் என்று ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. புதிய சட்டங்கள் கொண்டு வந்தால் போதுமா ? இருக்கிற சட்டங்களை ஒழுங்காக அமுல் நடத்த ஏற்பாடு செய்தால் போதாதா ? டிரேட் யூனியன் ரைட் என்று ஒரு சட்டம் இருக்கிறது. அந்த ரைட்டையே அவர்கள் அனுபவிப்பதற்கு முடியவில்லை. பாலு கார்மென்ட்ஸ் பெண் தொழிலாளிகள் அதற்காக முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். மூன்று மாதமாக தெருவிலே நிற்கிறார்கள். முன்பிருந்த சர்க்காரிடமும் பல முறை சொல்லியாகிவிட்டது. புதிய சர்க்காரிடமும் சொல்லியாகி விட்டது. அந்த 500 பெண்களும் ரொம்ப டெஸ்பரேட் ஆகி தீவிரமாக உயிரே போனாலும் கவலை இல்லை என்று போராட்டத்தில் இறங்கப் போகிறார்கள். பிறகு அவர்களைக் குற்றம் சொல்லிப் பயன் இல்லை.

ஆகவேதான் இருக்கிற சட்டத்தினுடைய உரிமைகளை அனுபவிப்பதற்கு முதலாளிகள் தடை சொல்கிறபோது அந்த முதலாளிகளை வற்புறுத்தி ஏற்றுக் கொள்ளச் செய்வதற்கான ஒரு கொள்கை அல்லது அதிகாரம் அரசாங்கத்திடம் இல்லை என்று சொன்னால், அல்லது இருந்தும் அதை உபயோகப்படுத்தவில்லை என்றால், இப்படி மேலும் மேலும் சட்டம் கொண்டு வருவதில் எந்தப் பயனும் இல்லை என்றுதான் சொல்வேன். அந்தச் சட்டங்கள் ரெகார்டில் தான் இருக்கும். ஆகவே இந்த விஷயங்களை தெளிவாக்க வேண்டும் என்று நான் கூற விரும்புகிறேன்.

1980 ஜூலை 8] [திரு. ரா. உமாநாத்]

இந்த அரசினுடைய பட்ஜெட் உரையில், 'உணவு உற்பத்தியைப் பெருக்க திட்டமிடப்பட்டுள்ளது? என்று சொல்லியிருக்கிறது. நன்று. ஆனால் இதை ஏழை விவசாயிகளுக்கு நிலமற்ற விவசாய தொழிலாளர்களுக்கு நிலச் சீர்திருத்தச் சட்டம் மூலம் இலவசமாக நிலங்கள் கொடுக்கப்பட்டு அதன் மூலம் உற்பத்தி பெருக்கப்படும் என்று ஒரு ஸ்ட்ரேட்டஜி இந்த பட்ஜெட் உரையிலே இருக்கிறதா? இல்லை. தேர்தல் அறிக்கையிலும் குறிப்பிடப்படவில்லை. ஆளுநர் உரையிலும் குறிப்பிடப்படவில்லை. பட்ஜெட் உரையிலும் இல்லை. ஏழை விவசாயிகளை ரிலை பண்ணாமல், இன்-புட் ஸ்ட்ரிரேட்டஜியை மட்டும் நம்பி, பசுமைப் புரட்சி என்னும், முதலாளித்துவ முறைகளை நம்பித்தான் இதில் திட்டமிடபட்டிருப்பதாக எங்களுக்குத் தோன்றுகிறது. இந்த முறைகள் நல்ல முறையில் முறையாக மழை பெய்தால் உற்பத்தியைப் பெருக்கும். ஆனால் ஏழை நடுத்தர விவசாயிகளின் வாழ்க்கை மேம்படாது. நிலப் பிரபுக்களும், விவசாய சூதாடிகளும் தான் அப்படிப்பட்ட வகையில் உற்பத்தியைப் பெருக்கினால் லாபம் அடைவார்கள் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. நீங்கள் ஏற்கனவே இயற்றிய நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் கூட ஒழுங்காக அமுல் ஆகவில்லை. 75:25 என்று ஒரு சட்டம். மிக நல்லச் சட்டம். அது அமுல் ஆகவில்லை. ஏன் இதற்கு முன்னால் போடப்பட்ட 60:40 என்ற சட்டம் அது ஒரு சில இடங்களில்தான் அமுலில் உள்ளது. பெரும் பகுதிகளில் அமுலில் இல்லை. 50:50 என்கிற ஒரு சட்டம்தான் பெரும்பான்மையான கிராமங்களில் அமுலில் இருந்து வருகிறது.

கூலிச் சட்டங்களை எடுத்துக் கொண்டால், அந்தச் சட்டத்தில் கமிட்டியின் சிபாரிசுகளை ஸ்டேச்சுட்டரி புரவிஷனாக ஆக்கியிருக்கிறார்கள். நல்லது. ஆனால் கணிசமான பகுதி இடங்களில் அந்தக் கூலிச் சட்டம் சொல்வதை விட கம்மியாகத்தான் தொழிலாளர்கள் கூலி பெறுகிறார்கள். ஏன்? சட்டங்களை அமுல் படுத்த முழுக்க முழுக்க அதிகாரிகளையே நம்புவது என்ற முறைகள் தான் காரணம். பெரும் பகுதிகளிலே நீங்கள் சட்டம் இயற்றியும் கூட அது அமுலுக்கு வராமல் இருக்கிறது. அதிகாரிகளால் செய்ய முடியாது என்பது அனைவரும் கண்டறிந்திருக்கக்கூடிய உண்மை.

மாநில திட்டக் கமிஷனுடைய 'டாஸ்க்-போர்ஸ்' திட்டவட்டமாக பகிரங்கமாக கூறியிருக்கிறது. என்னவென்று 'அரசு அதிகாரிகளும் கிரமப்புற நிலப்பிரபுக்களும் எண்ணற்ற கயிறுகளால் பிணைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அதிகாரிகளால் இந்த சட்டங்களை அமுல் படுத்த முடியாது என்று.'

இதைப்பற்றி 5 ஆண்டு திட்டத்திலேயே தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். ''விவசாய கூலிச் சட்டத்தைப் பொருத்தவரையில் விவசாய தொழிலாளர்களின் குறைந்த பட்ச கூலிச் சட்டங்கள் அமுல்படுத்தப்படுவது இல்லை.'' என்று ஆகவே இதை அமுல் படுத்த ஏழை விவசாயிகளை, குத்தகைதாரர்களை, விவசாய தொழிலாளர்களையும் நாம் திரட்டியாக வேண்டும். இந்தச் சட்டத்தை அமுல் படுத்துவதற்கு அவர்களை மொபிலைஸ் பண்ணியாக வேண்டும் அவர்கள் இயக்கத்தை நடத்த வேண்டி இருக்கும். அப்படி நடத்துகிற போது நிச்சயமாக நிலப்பிரபுக்கள் அதை எதிர்ப்பார்கள். * * *அவர்களும் திரட்டப்படுகிற ஏழை மக்களை எதிர்ப்பார்கள். அந்த நேரத்தில் நிலப்பிரபுக்கள் போலீசை அழைப்பார்கள் இங்குதான் அரசு என்ன செய்யப் போகிறது என்று பிரகடனப்படுத்த வேண்டும். இதுதான் கீ பாயிண்ட். சட்டங்களை அமுல் நடத்துவதற்குப் போராட்டம் நடக்கும் போது, போலீசை நிலப்பிரபுக்கள் அழைத்தால் அந்த இடத்தில் நம் சர்க்கார் என்ன செய்யப் போகிறது?....... (கூச்சல் குழப்பம்.)

திரு இல. பலராமன்: தலைவரவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். கட்சியின் தலைவர் என்று இருப்பதால் கம்யூனிஸ்ட் கட்சியின் மாண்புமிகு உறுப்பினர் திரு உமாநாத் அவர்கள்—

* * * * *

என்று ஊகித்துச் சொல்வது இந்த அவைக்கு ஏற்றதா? மரபுக்கு ஏற்றதா? என்று அறிய விரும்புகிறேன். குற்றச்சாட்டாக இருப்பதனால் அதை அவர் வாபஸ் பெறுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குற்றச்சாட்டாக அதைச் சொல்லவில்லை. தகவல்தான் சொல்கிறார். குற்றச்சாட்டாக இல்லாதபோது பாயிண்ட் ஆப் ஆர்டர் எழாது.

திரு ரா. உமாநாத்: சட்ட அனுகூலங்களை மறுக்க போலீஸ் தரமாட்டோம் என்று தெளிவாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அப்போது கூறவேண்டும். என்று நான் கேட்டுக் கொள்கிறேன். மேற்கு வங்க முதல்வர் ஜோதிபாசு அவர்கள் பகிரங்கமாக எழுதியுள்ளார்....... (கூச்சல் குழப்பம்).

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கு இணங்க அகற்றப்பெற்றது.

1980 ஜூலை 8]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு இரா. முத்தையா) : குற்றச்சாட்டாக இல்லாத வகையில் ஒரு தகவலைச் சொல்லும் போது அதில் தவறு இல்லை. அதை நீங்கள் பேசும்போது மறுக்கலாம்.

திரு. நா. சுந்தரராஜ் : அவர்கள் குற்றச்சாட்டாகத்தான் சொல்கிறார்கள். . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. முத்தையா) : குற்றச்சாட்டாக இருந்தால் அதை அவை முன் பேசக் கூடாது; நடவடிக்கைக் குறிப்பில் இருந்து நீக்கப் பெற வேண்டும். அவர் குற்றச்சாட்டாக சொல்லவில்லை என்று நான் நினைக்கிறேன். (கூச்சல், குழப்பம்.)

திரு ரா. உமாநாத் : குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. தகவலைத்தான் நான் சொன்னதாக நீங்கள் சொல்லிவிட்டீர்கள். அதற்குப் பிறகும் இப்படி குறுக்கிடுவது சரியல்ல. அவர்களது கட்சித் தலைவர் பேச இருக்கிறார். அதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். (கூச்சல், குழப்பம்).

திரு. என். எஸ். வி. சித்தன் : எங்கள் கட்சி உறுப்பினர் என்ன சொல்கிறார் என்று கேட்டுவிட்டு பிறகு தீர்ப்பு சொல்லுங்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

[முற்பகல் 11-30]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவைக் குறிப்பை வரவழைத்துப் பார்த்து, பிறகு தீர்ப்பு கொடுக்கிறேன். அது வரைக்கும் எந்த பத்திரிகையிலும் வரக்கூடாது. நடவடிக்கைக் குறிப்பில் இருக்கக்கூடாது என்று உத்தரவிடுகிறேன்.

திரு. ரா. உமாநாத் : இந்த நேரத்தை நான் பின்னால் எடுத்துக் கொள்வேன். இதே டாக்டிஸ் எனக்குத் தெரியும். போன வாரம் மேற்கு வங்க முதல்வர் ஜோதிபாசு அவர்கள் பகிரங்கமாக எழுதியுள்ளார்கள். "நிலப் பிரபுக்களுக்கும் குத்தகை விவசாயிகளுக்கும், நிலப் பிரபுக்களுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்குமிடையில் தாவாக்கள் ஏற்பட்டால், அதில் காவலர்களும், அதிகாரிகளும் கராராக நடுநிலை மேற்கொள்ள வேண்டும் எனவும், சட்டப்படி நடக்க வேண்டுமென்றும் நான் திட்டவட்டமான உத்தரவிட்டுள்ளேன். கிராமப்புற ஏழைகளுக்கும், நலிந்த பிரிவினர்களுக்கும் தங்களுக்குரிய பங்கைப் பெற, காவலர்களும், அதிகாரிகளும் உதவிபுரிய வேண்டும்" என உத்தரவிட்டுள்ளேன்.

என்று. எனவே, இதைப் போல் நமது முதலமைச்சர் அவர்களும் இப்படிப்பட்ட தெளிவான உத்தரவை இடவேண்டும் என ஆவலுடன் இருக்கிறோம். என்பதை நான் இந்த அவையிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஏழை நடுத்தர மக்களுக்கு நிவாரணங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அவற்றை வரவேற்கிறோம். சிலவற்றில் சில மாற்றங்கள் தேவை; சில அபிவிருத்தியும் தேவை. எனக்கு முன்னால் பேசியிருக்கக்கூடிய என்னுடைய கட்சியைச் சார்ந்த தோழர்கள் இதைப்பற்றி சஜஷன்ஸ் கொடுத்திருக்கிறார்கள். அதிலே முக்கியத்துவம் வாய்ந்த கருத்து, ஐந்து ஏக்கரும், அதற்குக் கீழும் நிலம் வைத்திருப்பவர்களுக்கு கூட்டுறவு பயிர்க் கடன்களும், வட்டியும் ரத்து செய்யப்படும் என்பதாகும். இதிலே நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம்; பாராட்டுகிறோம். இந்த ஐந்து ஏக்கர்கள் என்பது நஞ்சை என்று நாங்கள் கருத்தில் கொண்டிருக்கிறோம். எங்களுடைய மற்றொரு சஜஷன், ஐந்து ஏக்கரிலிருந்து பத்து ஏக்கர் வரை வைத்திருக்கக்கூடியவர்களுக்கு வட்டி ரத்து செய்யவேண்டுமென்பதாகும். இதிலே நாங்கள் மகிழ்ச்சி அடைவோம். பாராட்டுவோம். ஏன் மகிழ்ச்சி அடைவோம் என்று கேட்டால், மனிதாபிமான நடவடிக்கை என்பதற்காக அல்ல; இரக்க குணம் படைத்தது என்பதற்காக நாங்கள் பாராட்டவில்லை. But because this is a development oriented measure. ஏன்பாராட்டுகிறோம் என்றால் இந்த தமிழகத்தினுடைய வளர்ச்சி திசையை நோக்கி போகக்கூடிய நடவடிக்கை இது என்பதால் நாங்கள் பராட்டுகிறோம் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறோம். (மேசையைத் தட்டல்.)

இவைகளை நாங்கள் நாட்டின் அபிவிருத்திக்கு உதவும் நடவடிக்கையாக பார்க்கிறோம். ஏனென்றால், ஐந்து ஏக்கரும், அதற்கும் குறைவானவர்களும் உள்ளவர்களின் எண்ணிக்கை தான் அதிகம். அத்தகைய நிலச் சொந்தக்காரர்களின் எண்ணிக்கை தான் அதிகம். எனவே, இந்தக் கடன் ரத்தின் விளைவாக இந்த கணிசமான எண்ணிக்கை கிராம ஜனங்களின் வாங்கும் சக்தியை அதிகமாக்கும். இதனால் அவர்கள் உற்பத்தியில் ஈடுபடுவதற்கு ஊக்கம் கொடுக்கும். பொதுவாக மக்களின் வாங்கும் சக்தி பெருகினால் பல தொழிற்சாலைகளின் உற்பத்திப் பொருள்களின் தேவை அதிகரிக்கும். அதனால், அதிக தொழிற்சாலைகள் அமைக்க வாய்ப்புகள் ஏற்படும். அந்த முறையிலே இப்படிப்பட்ட அபிவிருத்திக்கான நடவடிக்கையாக இவைகளை நாங்கள் பார்க்கிறோம். கிராமங்களிலே இருக்கக் கூடிய மக்களுக்கு இப்படிப்பட்ட நிவாரணம் கொடுத்தது வரவேற்கத்தகுந்த நடவடிக்கையாகும். ஆகவே, இந்த நடவடிக்கை கரெக்டான திசையை நோக்கிச் செல்கின்றது என்று நாங்கள் சொல்கிறோம்.

1980 ஜூலை 8] [திரு. ரா. உமாநாத்]

ஆனால், இந்த சிறு விவசாயிகளுக்கு நிவாரணம் அளித்தது பற்றி சில மாண்புமிகு உறுப்பினர்கள் அவ்வளவு மகிழ்ச்சி அடைந்ததாகத் தெரியவில்லை. மகிழ்ச்சி இருக்கிறதாகத் தெரிய வில்லை என்று சொல்கிறபோது, ஏன் மகிழ்ச்சி இல்லை என்பது எனக்குத் தெரியும். ஏனென்றால், அவர்கள் பேச்சு எப்போதும் கிராமத்திலுள்ள நிலப்பிரபுக்களின் பேச்சாகத் தான் வரும் என்பது எங்களுக்குத் தெரியும். (கைதட்டல்.) ஆகவேதான் அவர்கள் எல்லோருடைய கடனையும் ரத்து செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். கிராமப்புறங்களிலே உள்ள பெரிய நிலப்பிரபுக்களின் கடன்களை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்பதற்குப் பதிலாக, எல்லோருடைய கடனையும் 'எல்லோருடைய' என்று சொல்லுகிறார்கள். பச்சையாக பெரிய நிலப்பிரபுக்களின் கடனை ரத்து செய்யுங்கள் என்று சொல்வதற்குப் பதிலாக, எல்லோருடைய கடனையும் ரத்து செய்யுங்கள் என்று சொல்லுகிறார்கள். இத்தகைய நிலப் பிரபுக்களுக்கு எதற்காக, ஏன் கடனை ரத்து செய்ய வேண்டும். இதை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இங்கே பக்கத்தில் திரு இளையபெருமாள் அவர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்கள் இந்த நிலப் பிரபுக்களைப் பற்றி பகிங்கரமாகவே சொல்லி விட்டார்கள். தமிழ் நாட்டிலே இந்த நிலப் பிரபுக்கள் எல்லாம் எங்கே இருக்கிறார் என்று கூறிவிட்டார்கள். (மேசையைத் தட்டல்.)

மதிப்பிற்குரிய திரு இளையபெருமாள் அவர்கள் இரண்டு தினங்களுக்கு முன்பு, பேசுகின்றபோது, பேசியதை நான் உண்மையிலேயே பாராட்டுகிறேன். ஏனென்று சொன்னால், அவர் ஒரு பயங்கரமான உண்மையை கட்சிக்கும் கவலைப்படாமல், ஏழை மக்களுக்கு ஆதரவான உண்மையை பகிங்கரமாக இங்கே எடுத்துச் சொன்னதற்காக நான் அவரைப் பாராட்டுகிறேன். அவர்கள் சொன்னார்கள், பூனைக்கும், நாய்க்கும் பினாமி நிலம் எழுதி வைக்கப்பட்டு, அந்த நிலத்திலிருந்து வரக்கூடிய வருமானம் பூராவும் ஒரு இடத்திற்கு வந்து சேருகின்றது என்று சொன்னார்கள். அந்த நிலப்பிரபுக்களுடைய கடனை ரத்து செய்ய வேண்டுமென்று சொல்லுகிறீர்களா ? இதை நான் நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு இளையபெருமாள் அவர்களைக் கேட்கவில்லை. அதை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டவர்களைக் கேட்கிறேன். பல பேர்கள் சொன்னார்கள். யார் என்பது எனக்குத் தெரியும், பெயர்களைச் சொல்லிவிட்டால் உடனே கூச்சல் போடுகிறார்கள். ஆனால், எனக்குத் தெரியும், யார் யார் என்பது. எனவே, அப்படிப்பட்ட பெரிய நிலப் பிரபுக்களுக்கு கடன்களை ரத்து செய்ய வேண்டுமா ? 60:40-ஐ அமுல் நடத்தாமல் கொள்ளை அடிப்பவர்களுக்கு, இந்த வசதிகளை செய்து தர வேண்டுமா ? அவர்களுக்கு இந்தக் கடனை ரத்து செய்ய வேண்டுமா ? விவசாயத் தொழிலாளிகளுக்கு சட்டப்படி கூலி கொடுக்க மறுப்பவர்களுக்கும், குத்தகை நிலத்திலிருந்து வெளி

யேற்றம் செய்கின்றவர்களுக்கும், இத்தகைய கொள்ளையடிக்கும் நிலப்பிரபுக்களுக்கு கடனை ரத்து செய்ய வேண்டுமா? இதை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது.

நான் கூற விரும்புகிறேன்—கிராமப்புற கூட்டுறவு வங்கிகளில் இப்படிப்பட்ட நிலப் பிரபுக்கள் அந்த வங்கிகளில் ஆதிக்கம் செலுத்தி, கண்ட்ரோல் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். சரியான இடத்தில் கை வைக்கப் போகிறேன், யாரும் சத்தம் போடக் கூடாது. (குறுக்கீடுகள்) ஸ்போர்ட்டிங்காகச் சொன்னேன். ஸ்போர்ட்டிங்காகச் சொல்லக் கூடாதா?

திரு. இல. பலராமன்: பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நாடாளுமன்ற மரபைத் தெரிந்தவர்கள். நாடாளுமன்ற உறுப்பினராகவும், இந்தச் சட்டமன்ற உறுப்பினராகவும் நீண்ட நாட்களாகப் பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள். அவர்கள் ஒரு பகுதியினரைப் பார்த்து 'நீங்கள் சத்தம் போடாதீர்கள்' என்று சொல்வது சரியா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நானும் சொல்லுகிறேன்—யாரும் சத்தம் போடாதீர்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: டிபேட்டில் சில ஹியூமர்ஸ் இருக்கின்றன. அது யூஷுவல். அதைத் தாங்க முடியவில்லை என்றால் நான் விட்டுவிடுகிறேன். உங்கள் மூலமாகச் சொல்லுகிறேன்—கிராமப்புறங்களில் கிரெடிட் சொசைடிகளை நிலப் பிரபுக்கள் தங்கள் கையில் வைத்துக்கொண்டு பினாமி பெயரில், செத்துப் போன ஆள் பெயரில்கூட கடன் வாங்கியிருக்கிறார்கள். அப்படி ஆறு பர்சன்டுக்கு பாங்கில் கடன் வாங்கி 12 பர்சன்டுக்கு தந்து வட்டிக்கு கொடுக்கிறார்கள். அவர்களுக்கு கடன் ரத்து செய்ய வேண்டுமா? I can't accept that position. அதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது.

அதே மாதிரி டிராக்டருக்கு என்று கடன் வாங்கி ஆடம்பர குடும்ப கல்யாணச் செலவுக்குச் செலவு செய்கிறார்கள்—டிராக்டர் வாங்கியிருக்க மாட்டார்கள். நான் கேட்கிறேன்—அப்படிப்பட்டவர்களுக்கு, கடனை வாங்கி லேவாதேவிக்கு 12 சத வீதத்துக்கு வெளியே லோன் கொடுக்கிறவர்களுக்கு அவர்கள் பாங்கில் வாங்கிய கடனை ரத்து செய்ய வேண்டுமா? டிராக்டருக்கு என்று சொல்லி கல்யாணச் செலவுக்குச் செலவு செய்த கடனை ரத்து செய்ய வேண்டுமா? அதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. ஏழை, நடுத்தர மக்களுடைய வரிப் பணத்திலிருந்து....

1980 ஜூலை 8]

*திரு. துரை முருகன் : மாண்புமிகு உமாநாத் அவர்கள் யார் யாருக்கோ கடன் ரத்து செய்ய வேண்டுமா என்று கேட்டார்கள். அவர்கள் கேட்பது நியாயமாகக்கூட இருக்கிறது. நான் கேட்க விரும்புவது—இந்த விவசாயிகளுடைய கடனை எல்லாம் ரத்து செய்ய மத்திய அரசு உதவி கொடுப்பார்களானால் எல்லாக் கடனையும் ரத்து செய்வோம் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 250 கோடி கடனையும் ரத்து செய்வோம் என்று ரெவின்யூ அமைச்சர் சொன்னார். அதற்கு என்ன சொல்லுகிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதற்கும் தற்போது நடக்கும் விவாதத்திற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, அந்த விஷயங்களைப்பற்றியெல்லாம் நிதியமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது அவர்கள் பதில் என்ன என்று சொல்வார்கள். நான் என் பார்ட்டி பாயின்டைப் பேசுகிறேன்.

திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் வைத்திருக்கக்கூடிய சில கோரிக்கைகள் நியாயமாக இருக்கின்றன. விவசாயப் பொருள்களுக்கு நியாயமான விலை வேண்டும், கிராப் இன்ஷூரன்ஸ் போன்ற கோரிக்கைகள் நியாயமானவை. ஆனால், அதே சமயத்தில் அவர் பெரிய விவசாயிகளுக்கு நிலப் பிரபுக்கள் உட்பட வித்தியாசம் இல்லாமல் எல்லோருடைய கடனையும் ரத்து செய்யவேண்டுமென்பது நியாயம் என்று சொல்லுகிறார். அவர் சொல்லுகிறார்—சிறு விவசாயி ஆனாலும், பெரிய விவசாயி ஆனாலும் இருவருக்கும் ஒன்றுதானே உற்பத்திச் செலவு, இருவர் விற்கும் விலையும் ஒன்றுதானே. ஆகவே, டிபரன்ஸியேட் பண்ண வேண்டாம் என்று சொல்லுகிறார். அது தான் இல்லை. இருவரும் ஒரே விலையில் விற்கவில்லை—That is the wholething. சாவி அங்குதான் இருக்கிறது. சிறு விவசாயி அறுவடை ஆனவுடனேயே 'ஸ்டாக் ஹோல்டிங் கெபாசிடி' இல்லாததால் களத்து மேட்டிலேயே விற்க வேண்டியிருக்கிறது. 100 ரூபாய், 90 ரூபாய், 80 ரூபாய் என்ற அந்த விலைக்குத்தான் சிறு விவசாயி விற்கிறான். அந்த விவசாயிக்கு சர்க்காருடைய கடன் ரத்து உதவியாக இருக்கும். அது செய்ய வேண்டியது கடமை.

ஆனால், நிலப் பிரபுக்கள் இருக்கிறார்களே, அவர்களுக்கு ஹோல்டிங் கெபாசிடி உண்டு. மார்க்கட்டில் உச்ச கட்டத்திற்கு விலை ஏறும் வரைக்கும் ஸ்டாக் பண்ணி, அந்த உயர்ந்த விலை வரும்போது வெளியே விடுகிறார்கள். மார்ச் மாதத்தில் நெல் மார்க்கெட்டில் 115 ரூபாய் குவிண்டால் ; மே மாதத்தில் குவிண்டால் 145, 150 ரூபாய்க்குப் போயிற்று. அப்போதும்

நிலப் பிரபுக்கள் ஸ்டாக்கை இறக்கவில்லை. 160 ரூபாய்க்குப் போகிறதா என்று பார்க்கிறார்கள். சிறு விவசாயிகள் 90 ரூபாய், 100 ரூபாய்க்கு விற்கும்போது ஹோல்டிங் கெபாசிடி இருக்கக் கூடிய பெரிய விவசாயிகள் 145 ரூபாய், 150 ரூபாய்க்கு விற்கிறார்கள். இப்படி கொள்ளை விலைக்கு விற்று காசு சேர்த்துக் கொண்டிருக்கும் நிலப்பிரபுக்கள் கடனை ஏன் ரத்து செய்ய வேண்டுமென்று நான் விவரங்களோடு கேட்கிறேன். அதற்கு பதில் சொல்லட்டும்.

I am giving certain facts.

நேர்மாறாக என்ன சொல்லுகிறார்கள் இந்த சர்க்காரிடத்தில்?

[முற்பகல் 11-40]

விலை ஏறுகிற வரைக்கும் சேர்த்து வைத்துக் கொண்டு அதிக விலைக்கு விற்று ஏராளமான செல்வத்தை வைத்துக் கொண்டிருக்கின்றவர்களிடமிருந்து சர்ப்ளஸ் பணத்திலிருந்து அரசாங்கம் ரிசோர்ஸஸை மாப் அப் பண்ண வேண்டும். கிராமங்களிலே உள்ள ஏழை மக்களுக்கு குடிநீர் வசதி, பஸ் வசதி, ரோடு வசதி, சுகாதார வசதிகள் இவைகள் எல்லாம் செய்துக் கொடுப்பதற்கு அவர்களுடைய பணத்திலிருந்து ரிசோர்ஸஸ் மாப் அப் பண்ணவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மீனவர்கள் சம்பந்தமாக பட்ஜெட்டிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர்கள் வசிக்கின்ற மெயின் ரோட்டிற்கும் அதாவது அவர்கள் குடியிருக்கின்ற குடியிருப்புக்கும் லிங்க் ரோட்ஸ் சுத்தமாகக் கிடையாது. இதன் காரணத்தினால் அவர்கள் மணலிலே நடந்துபோக வேண்டிய நிலைமை இருக்கிறது. அதோடு அவர்களுக்கு குடிநீர் கிடையாது. இப்படிப்பட்ட எலிமென்ட்ரி நீட்ஸ் இருக்கின்றன. ஆனால் இந்த பட்ஜெட்டிலே 43 லட்சம் ரூபாய் தான் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. எல்லா பகுதிகளிலேயும் குடிநீர் கொடுக்க மொத்தம் 5 கோடி ரூபாய் ஆகும் என்று சொல்லப்படுகிறது. கடலிலே போய் சாகக்கூடிய ரிஸ்கை எடுத்துக் கொண்டு அவதிப்படுகின்ற அந்த மக்களுக்கு லிங்க் ரோட்ஸை ஏற்படுத்தவும் குடிநீரைக் கொடுக்கவும் உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும். இதை படிப்படியாகச் செய்துக் கொண்டே போனால் எத்தனை ஆண்டுகள் ஆகும். 5 கோடி ரூபாய் ஆகும் என்றால் ஒரு வருடத்திற்கு இரண்டரை கோடி வீதம் ஒதுக்கி இரண்டு ஆண்டு காலத்திலே இந்த அடிப்படை வசதிகளை அவர்களுக்குச் செய்துக் கொடுக்க வேண்டுமென்றும் கிராஷ் புரகிராமாக இதை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அரிசன மக்களுக்கு நிலப்பட்டா, வீட்டு மனைப்பட்டா கொடுப்பதிலே, இந்த அரசு ஆர்வம் காட்டுகிறது. ஆனால் கிராமங்களிலே உள்ள அரிசனங்கள் மீது ஜாதிக் கொடுமைகள்

1980 ஜூலை 8] [திரு. ரா. உமாநாத்]

ஏற்படுத்தப்படுகின்றன. அவைகளிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதற்கு அவர்களுக்கு தைரியம் கொடுப்பதிலே நடவடிக்கை எடுக்காமல் இருந்தால் அவர்களுக்கு என்ன நிலம் கொடுத்து என்ன பிரயோஜனம்? அவர்களுக்கு கொடுத்த பட்டாக்களை காப்பாற்றிக் கொள்ள அவர்களுக்கு சக்தியைக் கொடுக்காமல், அதற்குத் தேவையான போலீஸ் பாதுகாப்பைக் கொடுக்காமல் அவர்களுக்கு என்ன பட்டா தந்து என்ன பிரயோஜனம் திருவெறும்பூர் பகுதியிலே மேலக்குமரேசபுரம் என்ற இடத்திலே நிலத்தை அளப்பதற்காக அரிசனங்களுக்கும் அவர்களோடு பைலை எடுத்துக் கொண்டு சர்வேயரும் பியூனும் சேர்ந்து போனபோது அங்கே 200 சாதிவெறி பிடித்தவர்கள் அவர்களைத் தடுத்து அடித்து நொறுக்கி அந்த இரண்டு அதிகாரிகளையும் பிடித்து அரஸ்ட் பண்ணி, ஊத்தபாரிலே கொண்டு போய்—அவர்கள் தனியாக ஜெயில் வைத்திருக்கிறார்கள்—அங்கே போய் அவர்களை சிறையிலே வைத்திருந்த பயங்கரமான கொடுமையான நிலைமை நடந்தது. அதற்குப் பிறகு போலீஸே வந்துவிடும் என்ற நிலைமையைத் தெரிந்துகொண்டு ஊருக்குப் பெரியவர்களுக்குத் தெரிந்து அவர்கள் அவர்களை அனுப்பி வைத்தார்கள். இவ்வாறு ஆயுத பலம் உள்ள சர்க்கார் அதிகாரிகளையே அடித்து அரஸ்ட் பண்ணக்கூடிய முறையிலே அவர்களுடைய பைலை பிடுங்கி எரியக் கூடிய முறையிலே நடந்திருக்கிறது என்றால், அந்த அளவுக்கு ஜாதி வெறி பிடித்தவர்கள் இருக்கிறார்கள் என்றால் அரிசனங்களுக்கு பட்டா கொடுத்தால் அவர்கள் சும்மா இருப்பார்களா? இதையெல்லாம் அரசாங்கம் சிந்தித்து அவர்களுக்கு தேவையான பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே ஊரிலே ஒரு பாலத்தின் மீது அரிசனங்கள் செருப்புப் போட்டு போகக்கூடாது என்று சொல்லப்படுகிறது. இப்போதும் நடக்கிறது. இதிலே சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதோடு அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து நடவடிக்கையிலே இறங்க வேண்டும். அந்தக் கிராமத்திலே உள்ள அனைத்துக் கட்சிக்காரர்களும் ஒன்று சேர்ந்து கட்சி வித்தியாசம் பாராது அரிசனங்கள் செருப்புப் போட்டு நடக்குமாறு செய்ய வேண்டும். போலீஸாருடைய உதவியோடு செய்ய வேண்டும். எல்லா பார்டிகளும் ஒன்று சேர்ந்தால் செய்யலாம். ஆனால் ஓட்டுப் போய் விடுமோ என்று பயந்து விடக்கூடாது. இதிலே எல்லாம் ஓட்டைப் பார்க்கக்கூடாது.

அதேமாதிரி பக்கத்து ஊரிலே 39 அரிசனங்களுக்கு டெம்பரரி பட்டா கொடுத்தாகிவிட்டது. வாழவந்தான் கோட்டை, கிராம முன்சீப்பு பொய் கையெழுத்துப்போட்டு வேறு ஆட்களுக்கு அவைகளை டிரான்ஸ்பர் பண்ணிவிட்டார். 5 வருடங்கள் ஆகிவிட்டன. அவர்கள் இன்றைக்கு கலெக்டருக்கும், ஆர். டி. ஓ.-க்கும் பெட்டிஷன் போட்டிருக்கிறார்கள். அந்த பெட்டிஷன் அந்த

கணக்குப் பிள்ளைக்கு வந்து அவரே கிராமத்திலே அதை வைத்துக கொண்டு நீ ஆர். டி. ஓ. விடம் கொடுக்கிறாயா என்று கேட்கிற நிலைமை இருந்தது. இப்போதுதான் ஜமாபந்தியிலே அது கண்டு பிடிக்கப்பட்டு அதைப்பற்றிச் சொல்லி, நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. சஸ்பெண்ட் செய்தால் மட்டும் போதாது ; இலட்சக் கணக்கான ரூபாய் சேர்த்திருப்பதாகக் தகவல் வந்திருக்கின்றது. எனவே, கிரிமினல் புரொசீடிங்க்ஸ் ஸ்டார்ட் செய்ய வேண்டும். இதை நான் உதாரணத்திற்காகத்தான் சொன்னேன். ஐஸ் கடலிலே மேலே ஐஸ் கட்டியின் நுணி மட்டும் தெரியும் அதைப் போல இது ஒரு நுணிதான்.

அடுத்தபடியாக, போலீஸ் போராட்ட விஷயத்தில் டிஸ்மிஸ் செய்யப்பட்ட எல்லோருக்கும் வேலை கொடுத்தும், இண்டர் டிபார்ட்மெண்டல் ஆக்ஷனை ரத்து செய்தும், கேஸ்களை வாபஸ் பெற்றும் அரசாங்கம் எடுத்த துணிச்சலான நடவடிக்கை களைப் பாராட்டுகிறேன். அவ்வாறு பாராட்டி, மேலும் ஒரு விஷயத்தை அரசாங்கத்தின் அவசரக் கவனத்திற்குக் கொண் வருகிறேன். கவர்ன்மெண்ட் எடுத்த இந்த ஆக்ஷன் மேலதிகாரி களுக்குப் பிடிக்கவில்லை. ஆகவே, இந்தச் சர்க்கார் பாஸ் செய்திருக்கும் உத்தரவின் பலன் அந்தப் போலீசாருக்குக்கிடைத்து அவர்கள் சந்தோஷப்படாத அளவிற்கு மேலதிகாரிகள் வேட்டு வைக்க முயற்சிக்கின்றனர். ரீ-இன்ஸ்டேட் செய்யப்பட்டவர் களை எவ்வளவு சித்தரவதை செய்ய வேண்டுமோ அவ்வளவும் செய்கின்றார்கள். கம்பெனியை விட்டு மாற்றுகிறார்கள். பட்டாலியனை விட்டு மாற்றுகிறார்கள், ஊரை விட்டு ஊர் மாற்றுகிறார்கள். இதனால் அவர்கள் தாங்கள் குடியிருக்கும் காலனியிலேயிருந்து காலி செய்ய வேண்டும். அவர்கள் பிள்ளை கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் உத்தரவை அமல் நடத்துவதற்குள் அதிகாரிகள் அவர்களை அழச் செய்கி றார்கள். பிளாக் மார்க் இருக்கக் கூடாது என்று சர்க்கார் உத்தரவு தெளிவாக இருக்கிறது. ஆனால் டிஸ்மிஸ் செய்யப்பட்ட வர்களுக்குத் திரும்ப வேலை கொடுக்கும்பொழுது, புதிய குற்றச்சாட்டுக்களைச் சொல்லி, அதன் பேரிலே பழி வாங்கும் நிலைமைகள் இருக்கின்றன. இதையெல்லாம் நிறுத்த வேண்டும். அப்பொழுதுதான் அரசாங்கம் போட்ட உத்தரவு அவர்களுக்குப் பயன்படும். இதை நிறுத்துவதற்கு உள்ள ஒரே வழி, தேர்தல் அறிக்கையில் கொடுத்த வாக்குறுதியான, காவலர் முதல் ஆய் வாளர்கள் வரையில் இருக்கும் சங்கத்தை அங்கீகரிப்போம் என்று திட்டவட்டமாக இருக்கிறது. அந்த வாக்குறுதியின்படி உடனடி யாக அப்படிப்பட்ட சங்கத்தை அங்கீகரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1980 ஜூலை 8] [திரு. ரா. உமாநாத்]

நிர்வாக வசதிக்காகத் தஞ்சை மாவட்டத்தை இரண்டு மாவட்டமாக ஆக்க வேண்டும்.

நாகை துறைமுகத்திற்குச் சரக்குக் கப்பல்கள் இப்பொழுது வராததால் ஏராளமான—ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். மேலும் மெட்ராசிலே ரொம்ப கன்ஜஸ்டெட் ஆக இருப்பதாகச் சொல்லுகிறார்கள். எனவே, மெட்ராசுக்கு வருகின்ற கப்பல்களை அங்கு டைவர்ட் செய்தால் நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுற்றுலா வளர்ச்சி பற்றிக் குறிப்பிட்டுள்ளீர்கள். நாகூர் இலட்சக்கணக்கான மக்கள் வருகின்ற நகரம், உலகெங்கிலும் இருந்து மக்கள் வரும் இடம். வேளாங்கண்ணியும் அப்படிப்பட்ட ஒரு இடம். துறைமுகம் இருக்கின்ற இடம் நாகப்பட்டிணம். ஆகவே, நாகை நகரத்திற்கு இவ்வளவு இம்பார்ட்டன்ஸ் இருக்கும் பொழுது அதைச் சுற்றுலா மையமாக ஆக்கக் கூடாதா? நாகூரை ஒரு டவுன்ஷிப்பாக ஆக்கக் கூடாதா? அமைச்சரவர்கள் பார்க்க வேண்டும். பல இலட்சம் மக்கள், ஒரு இலட்சம், இரண்டு இலட்சம், மூன்று இலட்சம் மக்கள் வருகிறார்கள். அங்கே சாக்கடை வசதி மிகவும் மோசமாக இருக்கிறது. எனவே, நாகை நகரத்தின் வளர்ச்சிக்காக நாகை முனிசிபாலிடிக்கு விசேஷ ஒதுக்கீடு செய்யக் கூடாதா?

பல்லாண்டு காலமாக சில அத்தியாவசியமான பாலங்களைக் கேட்கிறார்கள். ஆனால் அதிகாரிகள் ரொம்பவும் கண் மூடித் தனமாக இருக்கிறார்கள். சடயன் கோட்டத்தில்—அது கடை மடைப் பகுதி—ஒவ்வொரு வருஷமும் தண்ணீரினால் ஒரு தீவாக ஆகி விடும். அங்கேயிருப்பவர்கள் போட் வைத்துக் கொண்டுதான் வெளியே வர வேண்டும். எத்தனையோ பாலம் கட்டுகிறீர்கள். இதற்கு ஒரு பிரிட்ஜ் கட்டக் கூடாதா? இதற்கு பிரையாரிட்டி கொடுக்கக் கூடாதா? ஒரு ஊருக்குப் பாலம் போட்டால் நேராகப் போகலாம். இல்லையென்றால் எட்டு மைல்கள் சுற்றி அடுத்த ஊருக்குப் போக வேண்டும். எனவே, இதற்குப் பிரையாரிட்டி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக இந்த பட்ஜெட்டைப் பற்றி ஒரே ஒரு பாயிண்ட் சொல்லி முடித்து விடுகிறேன். இந்த பட்ஜெட்டைப் பறறிச் சில நண்பர்கள் கருத்து கூறியதுபற்றிச் சொல்லியாக வேண்டும். மாண்புமிகு உறுப்பினர், காங்கிரஸ்—ஐ கட்சியைச் சேர்ந்த திரு. சித்தன் அவர்கள் கூறினார்கள். '' டெவலப்மெண்ட் ஓரியண்டட் பட்ஜெட் '' ஆக இது இல்லை என்று, அதாவது

[திரு. ரா. உமாநாத்] [1980 ஜூலை 8

வளர்ச்சி திசை கொண்ட பட்ஜெட்டாக இல்லை என்று சொன்னார்கள். ஒன்று நான் கேட்க விரும்புகிறேன். நாடு பூராவிற்கும் திட்டத்தை முதலில் திட்டக் கமிஷன்தான் தயார் செய்யும். பிறகு மாநில அரசுகள், மத்திய அரசின் திட்டக் கமிஷன் தயார் செய்த திட்டப்படிதான் தயார் செய்ய வேண்டும். பேசிக் டெசிஷன், முதலீட்டு சம்பந்தமாக, முதலீட்டுற்கு நிதி திரட்டும் கொள்கை சம்பந்தமாக உற்பத்தி அளவு சம்பந்தமாக. எந்தெந்தத் துறையில் எவ்வளவு உற்பத்தி என்பது உட்பட எல்லா அடிப்படை முடிவு எடுக்கும் அதிகாரம் மைய அரசின் கையில்தான் இருக்கிறது. இதன் விளைவாக வரும் மாநில பட்ஜெட்டில் ''கணக்குப் பிள்ளை உருவம்தான் தெரிகிறது'' என்றால், தங்கள் சொந்த முகத்தைத்தான் அவர்கள் பார்க்கிறார்கள் என்றுதான் அர்த்தம். கடந்த 30 வருட காலமாக இவர்கள் ''டெவலப்மெண்ட் ஓரியண்டெட் பட்ஜெட்'' தயார் செய்யாமல், இப்பொழுது சொல்கிறார்கள்.

[முற்பகல் 11-50]

திரு. என். எஸ். வி. சித்தன் : பொதுவுடமைக் கட்சியினுடைய மாண்புமிகு துணைத் தலைவர்........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. உமாநாத் பெயரை உச்சரிக்கும்போதே நினைத்தேன், அவருக்கு ஒரு பாய்ன்ட் கொடுத்து விட்டார்கள்........

திரு. ரா. உமாநாத் : அவர் மறுப்பார் என்பதற்காக நான் பயந்தால்........

I must give expression to my point of view.

திரு. என். எஸ். வி. சித்தன் : திட்டக் கமிஷன், மற்றும் அங்கேயிருக்கிற மத்திய அரசாங்கத்தினுடைய எண்ணத்திற்கு உட்பட்டுத்தான் அங்கே செய்ய வேண்டியிருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். நான் அவருக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். இத்தனை கன்டிஷன்களுக்கு உட்பட்டுத்தான் காங்கிரஸ் ஆட்சி தமிழகத்திலே செய்திருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

திரு. ரா. உமாநாத் : அதற்குத்தான் நான் வருகிறேன். அதற்குள் அவர் அவசரப்பட்டு விட்டார். ஆர். பி. ஐ. ரிப்போர்ட்படி திட்டங்கள் போட ஆரம்பித்து 14 ஆண்டுகளில் சராசரி ஆண்டுத் தொழில் வளர்ச்சி தமிழகம் உட்பட, 6·9 சதவீதம். அதற்குப் பிறகு 10 ஆண்டுகளில் சராசரி 3·4 சதவீதம். வளர்ச்சியா கண்டீர்கள்? நான் உங்களைப் பார்த்து கேட்கிறேன், தளர்ச்சியைத் தானே கண்டீர்கள், 30 ஆண்டுகளிலே, Annual rate of growth of net national product'.

1980 ஜூலை 8] [திரு. ரா. உமாநாத்]

நிகர் உற்பத்தி வளர்ச்சி, 1970–71-ல் 5·2 சதவீதம்; 1971–72-ல் அது 1·8 சதவீதமாகத் தாழ்கிறது; 1972–73-ல் மறுபடியும் தாழ்கிறது—1·5 சதவீதம்; 1973–74-ல் வளர்ச்சி 5·0 சதவீதம்; 1974–75-லே 0·2 சதவீதம். இது இவர்களுடைய டெவலப்மென்ட் ஓரியன்டேஷனுடைய லட்சணம் பார்த்தீர்களா? அது 1975–76 எக்கனாமிக் சர்வே ரிப்போர்ட்டில் உள்ளது.

அவர் கேட்டார், தமிழ்நாட்டிலே இத்தனை தொழிற்சாலைகள் இல்லையே, என்று. அது அல்ல கணக்கு. நான் குறிப்பிட்ட கணக்குதான் கணக்கு. வளர்ச்சி இருக்கிறதா? இப்படி நடந்தே 30 வருஷமாகப் பிச்சைக்காரர்களாக மாற்றியிருக்கிறீர்கள். அதற்குப் பிறகு 3-வது படியாக இருந்த தமிழ்நாடு 14 படிக்குக் கீழே இறங்கிப் போயிற்று என்று சொல்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசு டிஸ்மிஸ் செய்யப்படுவதற்கு முன்னாலோ, பின்னாலோ, 3-வது படியிலிருந்து தமிழகம் 13-வது படிக்கு இறங்கிப் போயிற்று என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு, அடுத்து, இவர்கள் ஆட்சியில் 14–வது படிக்கு இறங்கிற்று என்று சொல்கிறார்கள். நான் கேட்கிறேன், நாடே பிச்சைக்காரர்களாயிற்றே, அதிலே மூன்றானால் என்ன? பதினான்கானால் என்ன? அவர்கள் சொல்வதன் பொருள் என்ன? நாங்கள் ஆட்சி நடத்துகிற காலத்தில் பிச்சைக்கார வரிசையில் தமிழகத்தை முதலாவதாக நிறுத்தினோம். நீங்கள் வந்து 14-வது ஆவதாகத் தள்ளி விட்டீர்கள் என்பதுதான். ஐயா, நான் உங்கள் மூலமாகக் கேட்கிறேன், பிச்சை எடுப்பதிலே முதல்படி எங்களுக்கு வேண்டாம். காங்கிரஸ் ஆட்சி நடத்துகிற மாநிலங்களிலே வைத்துக்கொள்ளட்டும்.

ஆகவே, நான் மாநில அரசைக் கேட்டுக்கொள்வது, அது சம்பந்தமாக, மாற்றுக் கொள்கைக்கு நாம் இந்திரா காங்கிரஸ்—மைய அரசினுடைய கொள்கை, 'ஃப்ரேம் ஒர்க்குக்குள்ளே' நின்று கொண்டு நாம் போராடமுடியாது. மாற்றுக் கொள்கை தேவை. அதற்கு 3 அரசாங்கங்கள், வெஸ்ட் பெங்கால், திரிபுரா, கேரளா; இந்த மாநிலங்களின் முதலமைச்சர்கள் அடிக்கடி தொடர்பு வைத்துக் கொண்டு, டிஸ்கஸ் செய்து (குறுக்கீடு) ஆமாம், அதுதான் வழி. முன்னேற்றத்திற்கு வழி. அந்த 3 அரசாங்க முதலமைச்சர்களும் இங்கேயிருக்கிற முதலமைச்சரும் ஒன்று சேர்ந்து மாற்றுப் பாதைகளை உருவாக்கி, நாட்டு மக்களுக்குப் பாதை காட்டுவதுதான் சரியான வழி. அந்த வழியை முதலமைச்சர் ஏற்றுக்கொண்டு அமுல் நடத்துவதற்கு நிச்சயமாக முன் வருவார் என்று நம்புகிறேன், நன்றி, வணக்கம்.

*திரு. இரா. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1980–81 ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் பேசுவதற்கு முன்பாக மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களை மனமாற பாராட்டக் கடமைப் பட்டிருக்கின்றேன். ஏழை எளிய மக்களுக்காக, விவசாய பெருங்குடி மக்களுக்காக தாழ்த்தப்பட்ட மக்களுக்காக சமுதாயத்தில் நலிந்தோர் மெலிந்தோர் அனைவருக்கும் புத்துணர்ச்சி, புது வாழ்வு அளிக்கின்ற வகையில் புரட்சித் திட்டங்களை அளித்திருக்கின்றார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் மக்களுக்கு என்ன செய்யவேண்டும் என்று எண்ணினார்களோ அதை அப்படியே நிதிநிலை அறிக்கையிலே அளித்து இருக்கிறார்கள்.

முதலிலே ஏழை விவசாயப் பெருங்குடி மக்களுக்கு 60 கோடி ரூபாய் கடன் நிலுவையை ரத்து செய்தது மாபெரும் புரட்சியாகும். "ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம்" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னது போல, நிதி நிலை அறிக்கையில் அரசினுடைய வளர்ச்சித் திட்டங்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. புரட்சிகரமான திட்டங்களைப் புரட்சித் தலைவரின் ஆட்சியில் எடுத்துக் காட்டியிருப்பதை யாரும் மறக்க முடியாது. இந்த மாமன்றத்தின் வாயிலாக மத்திய அரசுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மதுவிலக்கு கொள்கையால் ஏற்கனவே 150 கோடிக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. என்றாலும் முன்னேற்றத் திட்டங்களை நிறைவேற்றுவதில் இந்த அரசு முன்னணியில் நிற்கிறது என்பதை தயவு செய்து அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எனவே இப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்ற அதிக அளவில் நிதி ஒதுக்க மத்திய அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கல்வியைப் பொறுத்தவரையில் இந்த அரசு எப்படிப்பட்ட நல்ல திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறது என்பதை மாற்றுக் கட்சி நண்பர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் மாற்றுக் கட்சி நண்பர்களைப் பொறுத்த வரையில் இந்த பட்ஜெட்டில் ஒன்றுமே இல்லை, ஒன்றுமே இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பின்னர்தான் புரட்சிகரமான திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறார்கள் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். மேல்நிலைப் பள்ளி 900 என்று இருந்ததை 1980–81-ல் மேலும் 150 உயர்நிலைப் பள்ளிகள் உயர்த்தப்பட்டன. அனைத்து அளவில் உள்ள இடங்களில் 1,242 மேல் நிலைப் பள்ளிகள் உயர்த்தப்பட்டு, பல்வேறு பகுதிகளில் குறிப்பாக கிராமப்புறப் பகுதிகளில் பரவலாகப்

போடப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் பல்வேறு நிலையில் புதிதாக 2,800 ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு பெறும் திட்டத்தைப் புரட்சித் தலைவர் அரசு அறிவித்திருக்கிறது.

அடுத்தபடியாக, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக இங்கே மாற்றுக்கட்சி நண்பர்கள் கண்ணீர் வடிப்பதை அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றைய தினம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 3,000 ரூபாய் கடனும், 600 ரூபாய் மானியமுமாக கொடுக்கப்பட்டது. அதை இன்றைய தினம் 600 ரூபாயை ஆயிரம் ரூபாயாக உயர்த்தி இருப்பது, தாழ்த்தப்பட்ட மக்களின்பால் இந்த அரசு அதிக கவனம் செலுத்தி இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அதே சமயத்தில் அரசை ஒன்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்த 3,000 ரூபாய் என்பதை 5,000 ரூபாயாக உயர்த்தி, 1,000 ரூபாய் மானியம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைய தினம் மரச்சாமான்களும், சிமெண்டும் விற்கிற விலையில் இந்த 3,000 ரூபாயில் தாழ்த்தப்பட்ட மக்கள் வீடுகள் கட்டிக் கொள்ள முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே இதை 5,000 ரூபாயாக உயர்த்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதே சமயத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த நேரத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அதைச் செய்தோம் இதைச் செய்தோம் என்று சொன்னார்கள். அவர்கள் அரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்ததாகவும் சொன்னார்கள். அவர்கள் கட்டிய வீடுகள் இன்றைக்கு எந்த நிலையில் இருக்கின்றன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அன்று கட்டிய வீடுகளிலே இன்று விரிசல் ஏற்பட்டு ஒழுகும் நிலையில் உள்ளது. கான்கிரீட் போட்டு கட்டிய வீடுகளுக்கு எப்படி இந்த நிலைமை ஏற்பட்டது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அந்த வீடுகளைக் கட்டிய கான்ட்ராக்டர்கள் தவறு செய்திருக்கிறார்கள், அதில் ஊழல் நடந்திருக்கிறது என்பதை இந்த அரசு கவனித்து அதைக் கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிப்பட்ட வீடுகளுக்கு வேண்டிய சாமான்களும், சிமெண்டும் இலவசமாக கொடுக்க வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

நேரம் அதிகம் இல்லாத காரணத்தால், என்னுடைய தொகுதியைப் பற்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். என் தொகுதியான நாமக்கல்லில் எங்கு பார்த்தாலும் குடிநீர் பிரச்சினை இருக்கிறது. நாமக்கல்லைப் பொறுத்தவரையில், சேலம் மாவட்டத்திலேயே மிகவும் பின்தங்கிய பகுதியாகவும், வறட்சிப் பகுதியாகவும் இருக்கிறது. அருகாமையில் 10 மைல் தூரத்தில் காவிரி ஓடுகிறது என்றாலும், குடிநீர் பஞ்சம் அதிக அளவில் இருக்கிறது. ஒருங்கிணைந்த திட்டத்தின் கீழ், மோகனூர்,

எருமைப்பட்டி போன்ற ஒன்றியங்களில் ஆய்வுப் பணிக்காக 1972—73-லே ஒவ்வொரு ஒன்றியத்தில் இருந்தும் ரூபாய் 21,315-ஐ ஆய்வு கட்டணமாக செலுத்தப்பட்டிருக்கிறது. இதை எருமைப்பட்டி ஒன்றியத்தின் சார்பாக தெரியப்படுத்தி உள்ளேன்.

நண்பகல் [12—00]

அங்கே ஏற்கெனவே 1972-73-ல் இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை மேற்கொண்டு, அந்தத் திட்டம் இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றது. இது தொடர்பாக குடிநீர் வடிகால் வாரிய நிர்வாகப் பொறியாளர் (சேலம்) அவர்களிடமிருந்து எருமைப்பட்டி ஒன்றியத்தில் சில கிராமங்களுக்கு அரசு செலவில் குடிநீர் வழங்கிட ஒப்புதல் கேட்டு 22—2—1980 அன்று எருமப்பட்டி ஒன்றிய அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டது. 21—3—1980 அன்று ஒன்றியத்தில் ஒப்புதல் அளித்து தீர்மானம் நிறைவேற்றி அரசு நிதியிலேயே குடிநீர் திட்டத்தை நிறைவேற்றித்தர வேண்டும் என்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தைக் கேட்டுக்கொண்டு 27—3—1980 அன்று நிர்வாகப் பொறியாளருக்குக் கடிதம் அனுப்பப்பட்டது. இந்தத் திட்டத்தை மோகனூரில் இருந்து காவிரி நீரை எருமைப்பட்டி திட்டத்திற்கு கொண்டு வருவதன் மூலமாக திப்பரமாதேவி, புதுக்கோட்டை, பொட்டிரெட்டிப்பட்டி, பொன்னேரி, தேவராயபுரம், எம். மேட்டுப்பட்டி போன்ற கிராமங்களுக்கு எல்லாம் மிகுந்த பயன்படும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொண்டு, அந்தத் திட்டத்தை நிறைவேற்ற உடனடியாக அரசு நடவடிக்கை எடுத்து நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கெனவே, மோகனூர்—காவிரி நீரை--நாமக்கல் நகருக்குக் கொண்டுவர ஒரு திட்டம் போடப்பட்டது. அந்தத் திட்டம் இன்றைய தினம் வரையில் முடிவுறாமல் இருக்கிறது. இது ஏன் என்றால் நாமக்கல்லுக்குக் கொண்டு வரப்படும் நீரை தற்போது அமைக்கப்பட உள்ள பாதுகாக்கப்பட்ட குடிநீர் தரப்பட உள்ள கிராமங்களில் மக்கள் தொகை போதுமானதாக இல்லாததேயாகும். ரூபாய் 147 லட்சத்தில் ஒரு விஸ்தரிப்புத் திட்டம் பரிசீலனையில் இருப்பதாகவும் தெரிகிறது. அதே சமயத்தில் சேமந்தமங்கலம், காளப்பநாயக்கன்பட்டி, நாமகிரிப்பேட்டை, ராசிபுரம், பில்லாநல்லூர், ஆகிய கிராமங்களுக்கும் சேர்த்துத் திட்டம் வகுத்து நாமக்கல் நகராட்சிக்கும் மேற்படி விஸ்தரிப்புத் திட்டத்தை சேர்ப்பது குறித்து பரிசீலிப்பது என்று தெரியவருகின்றது. நாமக்கல் நகரத்திற்கு மட்டும் தனியாக ஏற்கெனவே திட்டமிடப்பட்ட ரூபாய் 147 லட்சம் திட்டத்தை நிறைவேற்றினால், அரசு கடனைத் திருப்பிச் செலுத்த நாமக்கல் நகராட்சிக்குப் பொருளாதார நிலை சரியாக இருக்கிறது. ஆகவே, அந்த வகையில் அதை உடனடியாக செயல்படுத்த வேண்டும். ஒருங்கிணைந்த கிராமப்புறத் திட்டத்தைப் பொறுத்தவரையில், அந்தத் திட்டம் நிறை

வேற்றப்படுவதாக இருந்தால், நாமக்கல் நகராட்சி தவிர மற்ற ஊர்களில் போதுமான நிதி வசதி இல்லாததால், திட்டத்தின் தொகையைப் பங்கீட்டு முறையில் செலுத்த வசதி இல்லாததால், அதை செயல்படுத்த முடியாமல் போகலாம். அப்போது நாமக்கல் நகராட்சிக்காவது தனியாக திட்டம் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

நாமக்கல் நகராட்சிக்கு குடிநீர் கொண்டுவருவதன் மூலமாக நாமக்கல் நகரைச் சுற்றியுள்ள கொண்டிசெட்டிப்பட்டி, கொசலம்பட்டி, நல்லிபாளையம், பெரியபட்டி போன்ற மற்ற ஊர்களுக்கும் பயன்படும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன். அதே சமயத்தில் கொல்லிமலை அடிவாரத்தில் இருந்து முதுகாபட்டி என்ற ஊருக்கும் குடிநீர் கொண்டு வருவதற்கான திட்டத்தை நிறைவேற்றித்தருவதன் மூலம் ஏறத்தாழ 3 லட்சம் ரூபாய் செலவாகும் என்று நினைக்கின்றேன். அந்தத் திட்டத்தையும் நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே நான் இதைப்பற்றி இந்த அவையில் குறிப்பிட்டு இருக்கின்றேன். நாமக்கல் நகரில் ஒரு தொழிற் பேட்டையும் பாலிடெக்னிக்கும் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டு இருக்கின்றேன். அதை தயவு செய்து இந்த ஆண்டாவது நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனெனில் நாமக்கல்லில் இரண்டு கல்லூரிகள் இருக்கின்றன. ராசிபுரத்தில் ஒரு கல்லூரி இருக்கிறது. அங்கே எல்லாம் படித்துப் பட்டம் பெற்றவர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும் இந்தத் தொழிற் கூடம் பயன்படும். ஆகவே, ஒரு தொழிற்பேட்டையும், ஒரு பாலிடெக்னிக்கும் நாமக்கல் நகரில் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே சமயத்தில் சேலம் ஸ்டீல்ஸ்க்கு பீடர் இன்டஸ்ட்ரீஸ்களுக்கும் வலு ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நாமக்கல் நகராட்சியில் தவணை முறையில் வீடு கட்டிக் கொடுக்க திட்டம் கொண்டு வருவதற்கு முயற்சி எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நாமக்கல் வட்டத்தைச் சுற்றியுள்ள எல்லாப் பகுதிகளிலும், இன்றையதினம் முக்கியமாக கோழிப்பண்ணைத் தொழில் மிக நல்ல முறையில் நடந்து வருகிறது. ஏறத்தாழ 1 நாளைக்கு 10 லட்சம் முட்டைகள் வெளி இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. 15 லட்சத்திற்கு மேலான கோழிக் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படுகிறது. இப்படிப்பட்ட நிலையில் அந்தக் கோழிப் பண்ணையை அதிக அளவில் விருத்தி செய்ய அரசு உதவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய நிலையில் அந்தக் கோழிப் பண்ணைக்கு தேவையான தீவனம் விலை அதிகமாக ஏறியிருக்கிறது. ஒரு மூட்டைக்கு 4 பைசா என்று சர்சார்ஜ் வசூலிக்கப்படுகிறது. சில மாநிலங்களில் சர்சார்ஜ் இல்லாமலும் சில மாநிலங்களில் 2 பைசா என்றும் வசூலிக்கப்படுகிறது. நம்முடைய அரசு கோழிப் பண்ணைத் திட்டத்தை அதிக அளவு விருத்தி செய்வதற்காக கோழித் தீவனத்திற்குப் போட்டிருக்கிற வரியை முழுதும் ரத்து செய்து, கோழிப் பண்ணைகளை அதிக அளவில் உண்டாக்கும் நிலைமையை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தூசூர் ஏரி, செல்லிபாளையம் ஏரி போன்றவைகளை எல்லாம் வெள்ள நிவாரணப் பணியின்கீழ் சாலைகளை மராமத்து செய்து வருகிறார்கள். அதேபோல பொட்டிரெட்டி பட்டி ஊரிலும் ஏரி இருக்கிறது. அதையும் இந்தத் திட்டத்தின் கீழ் சேர்த்து நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நாமக்கல் வட்டம், எருமபட்டி ஒன்றியத்தில் சிங்களம் கோம்பை என்ற ஒரு பகுதி இருக்கிறது. அந்தப் பகுதியில், அங்கே இருக்கிற 20 ஏக்கர் நிலத்தை கிராம கர்ணமும் கிராம அதிகாரியும் சேர்ந்து ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்கெனவே ஆட்சியில் இருந்தபோது, அவர்கள் ஆக்கிரமிப்பு செய்த நிலத்தை உடனடியாக வருவாய்த் துறை அமைச்சரவர்கள் தலையிட்டு, உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொல்லியிருந்தார்கள். நாமக்கல் துணை ஆட்சியாளர் நடவடிக்கை எடுத்து, அந்த நிலத்தை திரும்பப் பெற்றார்கள். ஆனால் நம்முடைய ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு அதே நிலத்தை எப்படி அவர்கள் திரும்பப் பெற்றார்கள் என்று தெரியவில்லை. அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து, அந்த 20 ஏக்கர் நிலத்தைப் பெற்று அதை ஏழை எளிய மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பகிர்ந்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நிதிநிலை அறிக்கையை பொறுத்த அளவிலே ஒன்றும் இல்லை, ஒன்றும் இல்லை என்று சொல்கிறவர்களுக்கு எல்லாம் அவர்களுக்கு ஒன்றும் இல்லாமல் இருக்கிறதோ என்ற எண்ணம் தான் எனக்குத் தோன்றுகிறது. வரலாற்றில் நாம் படித்திருக்கிறோம், குப்தர்கள் காலம்தான் பொற்காலம் என்று. அதைப் போல இனி வரும் காலத்திலும் வரலாற்றுப் பேராசிரியர்கள் புரட்சித் தலைவர் அரசு, புனித ஆட்சி, இதுதான் குப்தர்கள் ஆட்சி போன்றது என்று எழுதத்தான் போகிறார்கள்; அதை

1980 ஜூலை 8] [திரு. இரா. அருணாசலம்]

நாம் காணத்தான் போகிறோம் என்று கூறி, பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக நன்றி தெரிவித்து, முடித்துக் கொள்கிறேன் வணக்கம்.

திரு. பெ. திருமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1980-81 ஆம் ஆண்டிற்கான டாக்டர் நாவலர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற நிதிநிலை அறிக்கையை வரவேற்று ஒரு சில கருத்துக்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நடந்து முடிந்த தேர்தலிலே பெரும்பான்மையான வாக்குகளை அளித்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைக்கப்படுவதற்குக் காரணமாய் இருந்த மக்களுக்கும், எனது ஆலங்குடி தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும், நான் வெற்றி பெறுவதற்குக் காரணமாக இருந்த புரட்சித் தலைவர் அவர்களுக்கும் முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியை மீண்டும் தமிழகத்தில் வரவிடமாட்டோம் என்ற எதிர் கட்சிகளின் கருத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கின்ற வகையில் தமிழக மக்கள் மீண்டும் புரட்சித் தலைவர் தலைமையில் அண்ணா ஆட்சியை அமைத்துத் தந்தமைக்கு தமிழக மக்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

காங்கிரஸ் ஆட்சி காலத்தில் செய்யாத கலைஞர் கருணாநிதி அவர்கள் ஆட்சிக் காலத்தில் செய்ய விரும்பாத தமிழ்நாட்டு விவசாயிகள் பிரச்சனையை நன்கு கவனித்து நிதிநிலை பற்றாக்குறை இருந்தும் ஏறத்தாழ 60 கோடி ரூபாய் விவசாயக் கடன்களை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ரத்து செய்து, தமிழக விவசாயிகள் வயிற்றில் பால் வார்த்துள்ளார்கள். நானும் ஒரு விவசாயி என்ற வகையில் இதய சுத்தியோடு தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றியையும் வணக்கத்தையும் இந்த நேரத்தில் உரித்தாக்கிக் கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா காலத்தில் எந்த நோக்கத்தோடும், எந்த உணர்வோடும் ஆட்சி நடைபெற்றதோ அந்த உணர்வு குன்றாமல் குறையாமல் இந்த ஆட்சி நடைபெறுகின்றது என்பதை நமது நிதிநிலை அறிக்கை மிகத் தெளிவாக காட்டியுள்ளது.

ஏழை, நடுத்தர விவசாயிகள், விவசாயக் கூலிகள், தொழிலாள நண்பர்கள், உழைக்கும் வர்க்கத்தினர் மற்றும் பொருளாதாரத்தில் அடித்தளத்திலே உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை மனதில் கொண்டு இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது. சில எதிர்க்கட்சி

கள் வரவேற்று ஏற்காவிட்டாலும் தமிழக மக்கள் குறிப்பாக 80 சதவிகிதம் வாழும் விவசாய மக்கள் புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியை, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

என்னுடைய ஆலங்குடி தொகுதிக்கு வேண்டிய சில கோரிக்கை களையும் இந்த மாமன்றத்தில் வைக்கக் கடமைப்பட்டுள்ளேன். இத்தொகுதியிலுள்ள கொத்தமங்கலம், பாலையூர், இசுவுபட்டி, மேலக்கோட்டை ஆகிய ஊர்களில் குடிநீர் ஒரு பெரும் பிரச்சி னையாக இருந்து வருகிறது. அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து அக்கிராமங்களுக்கு குடிநீர் கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12·10.]

அடுத்து, குலமங்கலம் வில்லுனி ஆற்றிலும் நகரம் கிராமத்தி லுள்ள அம்புலி ஆற்றிலும் இரண்டு அணைகள் கட்டினால் 2,000 ஏக்கருக்கும் அதிகமான நிலப் பரப்பிற்கு பாசன வசதி கிடைக் கும். இதனை அரசு உடனடியாக செயல்படுத்த வேண்டுகி றேன்.

கரம்பக்குடி ஒன்றியத்திலுள்ள தட்டாமனைப்பட்டி ஆற்றில் குறுக்கே ஒரு பாலம் கட்டினால் மழைக்காலத்தில் 3 மாதம் ஓடாமல் இருக்கின்ற 5 பஸ்களும் வருடம் முழுவதும் ஓடுவதற் கான வாய்ப்பும் அதன்மூலம் போக்குவரத்து வசதியும் அதிகரிக் கும்.

இதேபோல 5,000 பேருக்குமேல் வாழ்கின்ற கீராத் தூர் கிராம மக்கள் மழைக்காலங்களில் எந்தப் பகுதிக்கும் செல்ல இயலாமல் கஷ்டப் படுகிறார்கள். அங்கு ஓடும் காட்டாற்றின் மீது குறுக்கே ஒரு பாலம் கட்டினால் அம்மக்கள் பெரிதும் பயன டைவார்கள். உடனடியாக இதனைச் செயல்படுத்த வேண்டு கிறேன்.

மழையூர்-அதிரான் விடுதி இடையே குறுக்கே அக்கினி ஆறு போய்க் கொண்டிருக்கிறது. அவ்வாற்றின் மீது ஒரு பாலம் கட்டினால் இவ்வூர் மக்களுக்கு போக்குவரத்து வசதி ஏற்படும்.

கொத்தமங்கலம்-வடகாடு குறுக்கே அம்புலி ஆற்றில் ஒரு பாலம் கட்டினால் அப்பகுதி மக்களுக்கு போக்குவரத்து வசதி ஏற்படும்.

கருப்புட்டிப்பட்டி, மீனப்பட்டி, வெள்ளால விடுதி, மோலுடை யான் பட்டி ஆகிய ஊர்கள் மற்ற பகுதிகளோடு எவ்விதத்

தொடர்புமின்றி தனித்தனி தீவுகளைப் போல உள்ளன. அவ்வூர்களுக்கு சாலை வசதி, பஸ் வசதி, மருத்துவ வசதி, குடிநீர் வசதி செய்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

கீரமங்கலத்தை துணைவட்டமாக ஆக்கவேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாள் கோரிக்கையாகும். இக்கோரிக்கையை உடனே நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆலங்குடியிலிருந்து புள்ளான் விடுதி நெடுவாசல் வழியாக ஆவனத்திற்கும், ஆலங்குடியிலிருந்து வெல்லாகுளம், குலமங்கலம் வழியாக கீரமங்கலத்திற்கும், ஆலங்குடியிலிருந்து மரமடக்கி, பரவாக்கோட்டை வழியாக ஆவனத்தான் கோட்டைக்கும், ஆலங்குடியிலிருந்து வெட்டன் விடுதி வழியாக கறம்பக்குடிக்கும், ஆலங்குடியிலிருந்து செம்பட்டி விடுதி வழியாக ஆதனக்கோட்டைக்கும் டவுன் பஸ்கள் விட வேண்டுகிறேன்.

புதுக்கோட்டையில் 100 ஆண்டுகளுக்கு முன்னர் துவங்கப் பெற்று நூறாவது ஆண்டைத் தாண்டியுள்ள மன்னர் கல்லூரியில் முதுநிலைப்பட்டப் படிப்பான எம்.,ஏ.,எம்.எஸ்.ஸி. வகுப்புகள் உடனே இந்த ஆண்டே தொடங்க இந்த அரசு ஆணை வழங்க வேண்டுகிறேன். புதுக்கோட்டை மாவட்டத்தில் 2,000 ஏக்கரில் மகாத்மா காந்தி பழத்தோட்டம் ஒன்றும், குடுமியா மலையில் அண்ணா விவசாயப் பண்ணையும் விவசாய ஆராய்ச்சிப் பண்ணையும் உள்ளது. எனவே புதுக்கோட்டையில் ஒரு விவசாயக் கல்லூரி அமைத்துத் தர வேண்டுகிறேன்.

ஆலங்குடி தொகுதி குளவாய்ப்பட்டியில் குளுகோஸ் ஃபாக்டரி ஒன்று அமைக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் இருந்து அதற்கான இடமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்தத் திட்டத்தினை நிறைவேற்றித் தர வேண்டுகிறேன். தமிழ்நாட்டில் மிக அழகான நகரம் என்று புகழப்படும் புதுக்கோட்டைக்கு குடிநீராக நூறு ஆண்டு காலமாகப் பயன்பட்டு வந்த புதுக்குளம் தற்பொழுது பாதுகாப்பற்ற நிலையில் இருந்து வருகிறது.

இக்குளத்திலிருந்து நாள்தோறும் பத்தாயிரத்திற்கு அதிகமான மக்கள் நீர் எடுத்துக்கொண்டு இருக்கின்றார்கள். வறட்சிக் காலத்தில் பத்து மைலுக்கு அப்பால் இருந்து கூட மக்கள் நீர் எடுக்க வருவார்கள். இக்குளத்தின் கரைகளில் வீடுகளைக் கட்டிக்கொண்டும், தூய்மையைக் கெடுத்தும் வருகின்றார்கள். உடன் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

புதுக்கோட்டை டு ஆலங்குடி, மணிப்பள்ளம் சாலை பல ஆண்டாக மண் சாலையாகவே இருந்து வருகின்றது. அதைத் தார் சாலையாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் பால் பெருக்கு முயற்சியினை யொட்டி மருத்துவப்பிரிவு அமைக்கவும் இம்மாவட்டத்தில் புதிய தொழில் பகுதிகளை தொடங்குவதற்கும் நிதி ஒதுக்கியுள்ளதோடு, கர்ப்பிணி பெண்களும் குழந்தைகளும் பயன்பெறும் வகையில் சத்துணவுத் திட்டத்தினையும் இம்மாவட்டத்தில் செயல்படுத்த நிதிநிலை அறிக்கை வழிவகை செய்துள்ளது.

வறட்சி மாவட்டமான புதுக்கோட்டை மாவட்டம் வளம் பெறுவதற்கு மேற்கூறிய நல்ல திட்டங்களை அறிவித்திருப்பதற்கு புரட்சித் தலைவர் அரசினை புதுக்கோட்டை மாவட்ட மக்களின் சார்பாக மனமுவந்து பாராட்டி எனது உரையை முடிக்கின்றேன். நன்றி, வணக்கம்.

*திரு. ப. நெடுமாறன் : உதவிச் சபாநாயகர் அவர்களே, இங்கே அளிக்கப்பட்டிருக்கின்ற நிதிநிலை அறிக்கையைப் பற்றிய என்னுடைய எண்ணங்களை உங்கள் முன்னாலே எடுத்து வைக்க விரும்புகிறேன்.

ஆங்கிலத்திலே சொல்வார்கள், எ குட் ஸ்டார்ட் என்று. இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையிலே ஒரு நல்ல ஆரம்பம் என்று நான் நினைக்கிறேன்.

இதை ஒரு ஏழை மக்கள் பட்ஜெட்டாக நம்முடைய மாண்பு மிகு நாவலர் அவர்கள் இங்கே அளித்திருக்கிறார்கள். ஏழை எளிய மக்களுக்கு எண்ணற்ற திட்டங்கள் இதிலே தீட்டப்பட்டு அதன் மூலம் சில நல்ல காரியங்களை அவர்கள் ஆரம்பித்து வைத்திருக்கிறார்கள். அதை நான் உளமாரப் பாராட்டுகிறேன். இதிலே வறுமை கோட்டிற்கு கீழே இருக்கக்கூடிய மக்களுக்கு, ஏராளமாக உதவி தரும் நல்ல திட்டங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இங்கே இரண்டு நாட்களாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் 'வறுமை கோடு' என்றால் என்ன என்பதைப் பற்றியெல்லாம் விவாதித்தார்கள். மிகப் பெரிய பொருளாதார நிபுணரான 'டட்' என்பவர் சொல்கிறார்,

"In India, the generally accepted difinition of poverty emphasises minimum level of living rather than a reasonable level of living"

"நியாயமான வாழ்வுத் திட்டம் என்பதைவிட குறைந்த பட்ச வாழ்வுத் திட்டம் என்பதே இந்தியாவில் வறுமைக்கான இலக்கணமாக இருந்து வருகிறது" என்று அவர் சொல்லியிருக்கிறார்.

1980 ஜூலை 8] [திரு. ப. நெடுமாறன்]

"Aggregating all the quantities included a figure expressing per Capita Consumer expenditure is determined the population whole level of income (or expenditure) is below this figure, it is considered to be below the poverty line"

அதேபோல அவர் இன்னொரு இடத்திலே சொல்லும்போது என்று மிகத் தெளிவாக வறுமைக் கோடு என்றால் என்ன என்பதை வரையறை செய்து கூறியிருக்கிறார்கள். "எல்லாவிதமான புள்ளி விவரங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு ஒரு நபர்க்கு ஆகும் வாழ்க்கைச் செலவு நிர்ணயிக்கப்படுகிறது. அந்த தொகைக்கு கீழே வருவாய் உள்ளவர்கள் வறுமை கோட்டிற்கு கீழே இருப்பவர்களாக எண்ணப்படுகிறார்கள்." அந்த நிலையில் பார்த்தால் நமது கிராமப்புறப் பகுதிகளில் 62·98 சதவீதமும், நகர்ப்புறங்களில் 52·69 சதவீதமும் இன்றைக்கு வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கிறார்கள். அப்படிப்பட்ட அவர்களுக்கு இந்தப் பட்ஜெட்டிலே நல்ல பல திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதை நான் உளமார பாராட்டி வரவேற்கிறேன்.

இங்கே முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் விவசாயப் பிரச்சினையைப் பற்றியெல்லாம் சொன்னார். என்னைப் பொறுத்தவரையில் குறிப்பாக இந்த பட்ஜெட்டிலே விவசாயிகளுக்கு ஏராளமான நிவாரணங்கள் அளிக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். 1972 ஆம் ஆண்டிலிருந்து 1980 ஆம் ஆண்டு வரை, 8 ஆண்டுக் காலமாக விவசாயிகள் எந்த கோரிக்கையை வைத்து எதற்காகப் போராடினார்களோ அந்த கோரிக்கையை இந்த அரசு அனுதாபத்தோடு அணுகி அதை முழுமையாகத் தர வேண்டும் என்று முயற்சிகள் எடுத்துக் கொண்டிருப்பதை நான் உளமார பாராட்டுகிறேன்.

1972 ஆம் ஆண்டிலே $8\frac{1}{2}$ பைசாவாக இருந்த மின்சார கட்டணத்தை 10 பைசாவாக உயர்த்தியதற்குப் பிறகு அதை எதிர்த்து விவசாயிகள் போராடினார்கள். இன்றைக்கு எதிர்க்கட்சியிலே இருக்கக் கூடிய பல நண்பர்கள் உள்பட பலபேர் சிறை பட்டோம். ஏறத்தாழ 15 பேர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இரண்டு பேர்கள் சிறையிலேயே இறந்து விட்டனர். அப்படிப் பெரிய போராட்டமாக நடத்தியும் $1\frac{1}{2}$ பைசாவை குறைப்பதற்கு முடியவில்லை. விவசாயிகளுக்கு எதிர் நோக்கியிருந்த ஒன்றன்பின் ஒன்றான பிரச்சனைகளையெல்லாம் இந்த அரசு அனுதாபத்தோடு அணுகி அவைகளுக்கு நிவாரணம் காண ஒன்றன்பின் ஒன்றாக எடுத்துக் கொண்டு வருவதை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் இங்கே 5 ஏக்கருக்கு உட்பட்ட சிறு விவசாயிகளுக்கு உள்ள கடன்கள் ரத்து செய்யப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். ஆனால் 5 ஏக்கர் என்று இருப்பதை மேலும் 10 ஏக்கர் வரை உள்ளவர்களுக்குக் குறைந்த பட்சம் வட்டியையாவது ரத்து செய்ய அரசு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்தில் வலியுறுத்த விரும்புகிறேன்.

குறுகிய கால கடன்களை நீண்ட கால கடனாக மாற்றி அவர்களுக்கும் நிவாரணம் அளிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் பேசும்போது '' யானை பசிக்கு சோளப்பொறி'' என்று இந்த விவசாய கடன்கள் ரத்து செய்யப்பட்டதைக் குறிப்பிட்டார். அதே நேரத்தில் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் நான் ஒன்றை நினைவு படுத்த விரும்புகிறேன். மதிப்பிற்குரிய மத்திய விவசாய அமைச்சர் திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் அமைச்சர் பதவி ஏற்ற பின்னால் மதுரைக்கு வந்தபோது, மதுரை கலெக்டர் அலுவலகத்திலே, மதுரை இராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளை கூட்டி இந்தப் பிரச்னையைப் பற்றி விவாதித்தார். அதிலே திட்டவட்டமாக அறிவித்தார். விவசாயிகளுக்கான அத்தனை கடன்களும் ரத்து செய்யப்படும் என்று. அவர் அப்படி சொன்னதற்குப் பின்னாலே விவசாயிகளுக்குப் மிகப் பெரிய நம்பிக்கை ஏற்பட்டது. விவசாயிகளுக்கு இருக்கக் கூடிய பிரச்னைகள் யானை பசிக்கு சமானம் தான்.

(பிற்பகல் 12-20)

அந்த யானைப் பசியைத் தீர்ப்பதற்கு லாரிலாரியாக மத்திய ஸ்டேட் அமைச்சர் திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் வேண்டிய தீனியை அனுப்புவார் என்று எதிர்பார்த்தோம். அனுப்பவில்லை. அதற்குப் பதிலாக இன்றைக்கு இந்த அரசு சோளப் பொரியாவது கொடுத்திருப்பதை நான் மனமாறப் பாராட்டுகிறேன். அதேபோல் இங்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் சொன்னார்கள். விவசாய கடன்களைப்பற்றிய விஷயத்தில், மத்திய அரசு செய்வதற்கு ஒன்றுமில்லை என்று மத்திய நிதி அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் சொன்னது தான் எங்கள் தேர்தலைப் பாதித்துவிட்டதோ என்று மக்கள் நினைக்கிறார்கள் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். தேர்தல் தோல்விக்கு என்ன காரணம் என்பதை அரசியல் ரீதியாக ஆராய்வதை விட்டு மத்திய நிதி அமைச்சர் அவர்களை பலிக்கடாவாக்குவதற்கு அவர்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் இங்கே முன் வந்திருப்பது வருந்தத்தக்கது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் பேசும்போது பினாமி நிலங்களைப் பற்றியெல்லாம் இங்கே குறிப்பிட்டார்கள். அதைப்பற்றிய சுவையான வாதம் இன்று இந்தச் சபையில் நடந்தது. அதற்கான பட்டியலை அளிக்க அவர்கள் தயாரா என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. முசிறிப்புத்தன் அவர்கள் கேட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்களும் அதை வினாவினார். மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்களைப் பற்றி எனக்கு மிக நன்

றாகத் தெரியும். அவர்களைப் பொறுத்தவரையில், உள்ளத்தில் என்ன நினைக்கிறார்களோ அதை ஒளிக்காமல் யாராக இருந்தாலும் வெளியே சொல்வார்கள். அரசியல் ரீதியாக அவர்கள் இன்று அடைந்திருக்கின்ற பல சிரமங்கள் இதனால்தான் வந்தது. அவர்களைப் பொறுத்தவரையில் பினாமி நிலங்களை யார் யார் வைத்திருக்கிறார்கள் என்று அவர்களுக்கு தெரிந்திருந்தாலும் கூட, இன்று கட்சிக் கட்டுப்பாடு காரணமாக வெளியே சொல்ல முடியாத நிலை அவருக்கு இருக்கிறது. பினாமி நிலங்களை ஒழிப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் காட்டிய ஆர்வத்தை நான் உளமாற வரவேற்கிறேன். இதில் அனைத்துக் கட்சியினரும் ஒன்றுபட்டு நின்றாலொழிய பினாமி நிலங்களை ஒழிப்பது என்பதை சுலபமாகச் செய்ய முடியாது. பினாமி நிலங்களை கண்டுபிடிப்பதற்கு கிராமங்கள் தோறும் மக்கள் கமிட்டிகள் அமைக்கப்பட்டாக வேண்டும். அந்த மக்கள் கமிட்டிகளில் கிராமங்களில் உள்ள முக்கியமானவர்கள், சர்வக் கட்சியினரும் இருக்க வேண்டும். அந்த மக்கள் கமிட்டிகள் பினாமி நிலங்களை கட்டாயம் அடையாளம் கண்டு சொல்ல முடியும். ஆகவே, மக்கள் கமிட்டிகள் அமைக்க இந்த அரசு முன்வரவேண்டும் என்று நான் அடிபணிந்து கேட்டுக் கொள்கிறேன்.

நிலச் சீர்திருத்தத்தை மீறுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது கிரிமினல் நடவடிக்கைகள் எடுக்கவும் இந்த அரசு முன்வரவேண்டும். அதே நேரத்தில் விவசாயிகள் கஷ்டங்களைப் பற்றிப் பேசுகிற நாம் விவசாயத் தொழிலாளர்களைப் பற்றியும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். விவசாயத் தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கின்ற குறைந்த பட்சக் கூலியை இன்று தமிழகத்தில் உள்ள எத்தனை நிலப் பிரபுக்கள் உண்மையாக அமல்படுத்துகிறார்களா என்றால் நிச்சயமாக பல மாவட்டங்களில் அந்த குறைந்தபட்சக் கூலித் திட்டத்தை அவர்கள் அமல் படுத்தவில்லை. தமிழகத்தில் உள்ள விவசாயத் தொழிலாளர்கள் என்போர் அடித்தளத்தில் இருக்கக்கூடிய அரிசனன சமுதாயத்தை சேர்ந்த சகோதர சகோதரிகளாகத்தான் இருக்கிறார்கள். அரசால் நிர்ணயித்துள்ள அந்தக் கூலியை அவர்கள் பெறமுடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, அந்த குறைந்தபட்சக் கூலியை அமல்படுத்த விசேஷ நிர்வாக அமைப்பினை இந்த அரசு நிறுவவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் விவசாயிகளுக்கு கடன் வழங்குவதில் டெக்னிக்கலாக சில சிரமங்கள் இருக்கின்றன. அதையும் இந்த அரசுக்கு நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். விவசாயிகளுக்காக ரிசர்வ் பாங்கியில் இருந்து ஏராளமான தொகை அளிக்கப்படுகிறது. ஆனால்

ரிசர்வ் பாங்கிலிருந்து அளிக்கப்படுகிற இந்தத் தொகைக்கு வட்டி 6 சதவீதம். ரிசர்வ் பாங்கியிலிருந்து இந்தத் தொகையை அப்பெக்ஸ் பாங்க் என்று சொல்லப்படுகின்ற மாநில கூட்டுறவு வங்கிக்கு அளிக்கிறார்கள். அவர்கள் அதை வாங்கி ஒவ்வொரு மாவட்ட கூட்டுறவு வங்கிக்கும் அளித்து அதற்குப் பிறகு சொஸைட்டிகளுக்கு வந்து அதற்குப் பிறகு விவசாயிகளுக்கு அளிக்கப்படுகிறது. இதற்காக ரிசர்வ் பாங்க் பணம் கொடுக்கும் போது அதற்குரிய வட்டி 6 சதவீதம். அதை அபெக்ஸ் பாங்க் வாங்கி மாவட்ட வங்கிக்கு அளிக்கும்போது 6·66 சதவீதம் ஆக வட்டி உயர்த்தப்படுகிறது. அதற்குப் பின்னால் மாவட்ட பாங்கி லிருந்து சொஸைட்டிகளுக்குப் போகும்போது 8 சதவீதம் ஆக வட்டி உயர்த்தப்படுகிறது. அதேபோல் சொஸைட்டியிலிருந்து விவசாயிகளுக்கு போகும்போது 10·5 சதவீதம் ஆக வட்டி உயர்த்தப்படுகிறது. ஆக 6 சதவீதம் வட்டி என்பது 10·5 சத விதம் அளவிற்கு உயர்த்தப்படுகிறது விவசாயிகளுக்கு வரும் போது. ஆகவே, $4\frac{1}{2}$ சதவீதம் அதிகமாகிறது. $4\frac{1}{2}$ சதவிகிதம் அதிலே அதிகப்படுகிறது. ஸ்டேட் கோவாபரேடிவ் பாங்கு என்ற அமைப்பு அவசியம்தானா என்பதை இந்த அரசு எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்களிடம் கொடுத்து, அவர்களிடமிருந்து மத்திய வங்கிக்கு வரும்போது வட்டி உயர்ந்து விடுகிறது. எனவே, நேரடியாகவே ரிசர்வ் வங்கி யிடமிருந்து ஒவ்வொரு மாவட்ட மத்திய வங்கிகளும் பணத்தைப் பெறுவதற்கான வழிவகைகளை இந்த அரசாங்கம் செய்ய வேண் டும் என்று நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

அதைப்போலவே, மாநில அரசுக்கு மத்திய அரசு வழங்கக் கூடிய உதவி ஆண்டுக்கு ஆண்டு, திட்டத்திற்கு திட்டம் குறைந்து வருவதாக இங்கே நிதி நிலை அறிக்கையிலே நமது நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். 1951-56-ஆம் ஆண்டு வகுக்கப்பட்ட முதல் திட்டத்திலே 10·8 ஆக இருந்த உதவித் தொகை, 1974-78-லே 4·1 என்று குறைந்திருக்கிறது. அகில இந்திய சராசரி நபர்வாரி திட்டச் செலவு இந்தியா முழுவதும் சராசரி 345 ரூபாயாக இருக்கிறது. ஆனால், அதுவும் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் சராசரி நபர்வாரி திட்டச் செலவு ரூபாய் 272 ஆக குறைந்திருப்பது மிகவும் வருந்தத் தக்கது என்று நிதி நிலை அறிக்கையிலே சொல்லியிருப்பதை நான் வரவேற்கிறேன். இதற்கு இந்த சபை முழுவதும் ஏகமனதாக மத்திய அரசாங்கத்திடமிருந்து மாநில அரசு பெறவேண்டிய நிதி உதவியைப் பெறுவதற்குப் போராட தயாராக இருக்கிறது என்ப தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதே நேரத்திலே, இந்த நிதி நிலை அறிக்கையிலே பயிற்று மொழியான தமிழிற்கு அதிக நிதி ஒதுக்கப்படவில்லை என்பதை நான் வருத்தத்தோடு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். தமி

1980 ஜூலை 8] [திரு. ப. நெடுமாறன்]

பயிற்று மொழித் திட்டம் என்பது நீண்ட காலமாக இருந்து வந்தாலும், இந்தத் திட்டத்திலே விரைவான முன்னேற்றம் இல்லை. அண்டை நாடான இலங்கையிலே, ஈழம் தமிழ்ப் பகுதியாக இருந்தாலும்கூட, இலங்கைப் பல்கலைக் கழகத்திலே எம். ஏ., வரை அங்கே தமிழிலே சொல்லிக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் இன்றைக்கு வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. இலங்கையிலே அப்படி இருக்கும்போது, தமிழ் நாட்டிலே உள்ள சென்னை, மதுரை அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களில் முதுகலை பட்டப் படிப்பு வரையிலே தமிழ் போதனா மொழியாவதற்கு இந்த நிதி நிலை அறிக்கையிலே நிதி ஒதுக்கம் செய்யப்படவில்லை. அப்படிச் செய்ய வேண்டும் என்றும், நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்று இங்கே சுட்டிக் காட்ட விரும்பு கிறேன்.

அதேபோல், விற்பனை வரியிலே சில பொருள்களின் மீது இருந்த பலமுனை வரிகளை ஒருமுனை வரியாக குறைத்திருப்ப தாக நிதி அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். சிலவற்றிற்கு விற்பனை வரி ரத்து செய்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால், அதே நேரத்தில் சென்னை, மதுரை, திருச்சி, கோவை, சேலம் போன்ற முக்கியமான நகரங் களில் விற்பனை வரி மீது 5 சத வீதம் சர் சார்ஜ் விதிக்கப்படு கிறது. கிராம மக்களுக்கும், நகர மக்களுக்கும் இடையே இது பாரபட்சம் காட்டுவதாகும். அதிலும், சென்னை, மதுரை, திருச்சி போன்ற நகரங்களிலே வாழ்கின்ற மக்கள் அந்த நகரங் களிலே வாழ்கின்ற காரணத்தினால், விற்பனை வரிக்கு 5 சத வீதம் சர்சார்ஜ் கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அதை இந்த அரசு ரத்து செய்ய வேண்டும் என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப் போலவே, சைக்கிள், சைக்கிள் ரிக்ஷா போன்றவை களின் மீது 6 சதவீதம் என்று வரி இருந்தது. அது 3 சத வீதமாக குறைக்கப்பட்டிருப்பதை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்திலே பீகார், பஞ்சாப் போன்ற மாநிலங்களில் சைக்கிள், சைக்கிள் ரிக்ஷா போன்ற ஏழை எளிய மக்களின் வாகனங் களின் மீது முழுமையாக வரியை ரத்து செய்திருக்கிறார்கள். ஆகவே, அதைப் போலவே இந்த சைக்கிள், சைக்கிள் ரிக்ஷா போன்றவைகளின் மீது முழுமையாக வரியை ரத்து செய்ய இந்த அரசு முன் வரவேண்டும் என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பேசும் போது, மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் ஊராட்சிமன்றத் தேர்தலிலே வாக்காளர்களின் வயதை குறைப் பதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி சர்ச்சை இருந்தது, அதிலும் குறிப்பாக, இந்திரா காங்கிரஸ் கட்சியைச்

சேர்ந்த நண்பர்கள் இது அவசியம்தானா என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் மறந்திருக்கக்கூடும். அவர்களுக்கு நினைவு படுத்த விரும்புகிறேன். மறைந்த திரு. சஞ்சய்காந்தி அவர்கள் தலைமையில் அகில இந்திய இளைஞர்கள் கமிட்டி கூடி மக்கள் சபைக்கும், சட்டசபைத் தேர்தலிலும் கூட இளைஞர்களுக்கு ஓட்டளிக்கும் உரிமை கொடுக்க வேண்டும். அதிலும் 18 வயதானவர்களுக்கு ஓட்டளிக்கும் உரிமை அளிக்கப் பட வேண்டுமென்பதை திரு. சஞ்சய் காந்தி அவர்கள் வலியுறுத்தி இருக்கிறார்கள். அதை எண்ணிப் பார்க்க வேண்டும். திரு. சஞ்சய் காந்தி மறைந்ததும், அவர் இந்த நாட்டுக்கு வலியுறுத்தியதை நீங்கள் அவருடைய சாம்பலோடு கடலிலே கரைத்து விட்டீர்களா என்று நான் உங்களைப் பார்த்து கேட்க விரும்புகிறேன்.

[பிற்பகல் 12-30]

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

அதைப் போலவே, தேர்தலிலே ஒரு கட்சி வெற்றி பெறுகிறது, இன்னொரு கட்சி வெற்றி பெறுவதில்லை. இது ஜனநாயகத்தில் சகஜம். வெற்றி தோல்விகளை சகஜமாக எடுத்துக் கொண்டு மக்கள் யாரை ஆளும் கட்சியாக இருக்க வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்களோ அவர்கள் ஆளும் கட்சியாகவும், எதிர்க்கட்சியாக மக்கள் யாருக்கு ஆணையிட்டிருக்கிறார்களோ அவர்கள் எதிர்க்கட்சியாகவும் இருந்து தங்கள் கடமைகளைச் செவ்வனே செய்ய வேண்டும். தேர்தல் தோல்விகளுக்கு அரசியல் ரீதியான காரணங்களை ஆராய வேண்டுமே தவிர, ஒரு குறிப்பிட்ட வகுப்பார்தான், ஒரு குறிப்பிட்ட இனத்தார்தான் தேர்தல் தோல்விக்குக் காரணம் என்ற வகையில் பல பத்திரிகைகளில் எழுதி வருகிறார்கள். முக்கியமான தலைவர்கள் கூடப் பேசுகிறார்கள். பிராமணர்களுக்கு எதிரான துவேஷப் பிரசாரம் அவிழ்த்து விடப்பட்டிருக்கிறது. இது போன்ற துவேஷப் பிரசாரங்கள் மூலம், இன வெறிப் பிரசாரங்கள் மூலம் தமிழகத்தில் இன்றைக்கு நிலவிக் கொண்டிருக்கும் அமைதிக்குப் பங்கம் ஏற்படும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு பிராமண சமுதாயத்தினர் மொத்தத்தில் மூன்று சதவிகிதந்தான் இருக்கிறார்கள். அந்த மூன்று சதவிகிதம் பேர்தான் தங்கள் தோல்விக்குக் காரணம் என்று யாராவது எண்ணுவார்களானால் அது அனாவசியமான அச்சம் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு மத்திய அரசில் இருக்கக்கூடிய 19 காபினெட் அந்தஸ்தில் இருக்கக்கூடிய அமைச்சர்களில் 12 பேர் பிராமணர்கள். அந்த ஆட்சியை ஏற்படுத்த யார் உதவி செய்தார்

களோ அவர்கள் பிராமணர்களுக்கு விரோதமான குரலை எழுப்புவது மிக வருந்தத் தக்கது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே நீதிநிலை அறிக்கையிலே பெரியார் அவர்கள் பெயராலும், அண்ணா அவர்கள் பெயராலும் அமைப்புகள் ஏற்படுத்துவது பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பெரியார் அவர்களும், அண்ணா அவர்களும், பெருந் தலைவர் காமராஜ் அவர்களும் சென்னை நகருக்கு மட்டும் உரித்தானவர்கள் அல்ல. தமிழகம் பூராவுக்கும் நாடு பூராவுக்கும் சொந்தமானவர்கள். அருமை நண்பர் முசிறிப்புத்தன் அவர்கள் பெரியார் பெயரால் அமைக்கப்படும் அருங்கலையகத்தைத் திருச்சியில் அமைக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதிலே எனக்கு ஆட்சேபம் இல்லை. சென்னையில் மட்டும் பெரிய பெரிய கட்டிடங்களை, அமைப்புகளை ஏற்படுத்தாமல் பொதுவாக மாவட்டங்களிலும் ஏற்படுத்த வேண்டும். அந்த வகையில் என்னுடைய நகரமான மதுரை மாநகரத்தில் நம் பெரியார் பெயரால், அண்ணா அவர்கள் பெயரால், எந்தத் திருக்குறளை மதுரையில் அரங்கேற்றினோமோ அந்த மதுரையில் உலகத் தமிழ் மாநாட்டின் போதாவது வள்ளுவர் பெயரால் ஒரு அமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டுக் கொள்ள விரும்புகிறேன். உலகத் தமிழ் மாநாட்டின் போது மதுரையில் மிகப் பெரிய முத்தமிழ் கோட்டம் அமைக்க வேண்டுமென்பதை இந்த நேரத்தில் வலியுறுத்த விரும்புகிறேன்.

மதுரை, கோவை போன்ற மாநகராட்சிப் பகுதிகளில் சென்னையில் இருப்பது போல் குடிசை மாற்று வாரியத்தை அமைத்து அந்த நகரங்களில் இருக்கும் சேரிகளை ஒழிப்பதற்கான நடவடிக்கையை எடுத்துக் கொள்ள வேண்டும். மதுரையைப் பொறுத்தவரை என்னுடைய தொகுதியில் பேச்சியம்மன் படித்துறையையும் செல்லூரையும் இணைக்க ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் அவசியமாக இருக்கிறது. மிக நீண்ட காலத் தேவை. முதலமைச்சர் தொகுதியையும், என்னுடைய தொகுதியையும் இணைக்கக்கூடிய அந்தப் பாலத்தை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும். மதுரையில் மதிச்சயத்தில் மிகப்பெரிய பஸ் நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. அந்தப் பஸ் நிலையத்தினையும் தென் பகுதியில் இருக்கும் முனிச்சாலையையும் இணைக்கும் வகையில் மற்றொரு பாலத்தையும் அமைக்க வேண்டும்.

இன்னொரு முக்கியமான பிரச்சினை. மதுரை—இராமநாதபுரம் மாவட்டங்களில் வாழ்கிற விவசாயப் பெருமக்களுக்கு அச்சம் ஊட்டுகின்ற பிரச்சினை ஒன்று பூதாகாரமாக எழுந்து

இருக்கிறது. காலைப் பத்திரிகையைப் பார்த்தபோது கேரள அமைச்சர் மதிப்பிற்குரிய புருஷோத்தமன் அவர்கள் கேரளாவில் ஓடுகிற நதிகளில் இருந்து ஒரு சொட்டுத் தண்ணீர் கூட தமிழகத்திற்குக் கொடுக்க மாட்டோம் என்று சொல்லியிருக்கிறார். அவர்கள் சொல்லியிருப்பது உண்மையாக இருக்குமானால் வருந்தத் தக்கது. தேசீய ஒருமைப்பாட்டுக்கு விரோதமானது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மதுரை பெரியார் அணை என்பதற்கு 1896-ல் ஒப்பந்தம் ஏற்பட்டது. அன்றைக்கு இருந்த திருவாங்கூர் அரசுக்கும் சென்னை மாகாண அரசாங்கத்திற்கும் இடையே ஒப்பந்தம் 99 ஆண்டுக்கான ஒப்பந்தமாக அது அன்றைக்கு எழுதப்பட்டது.

அந்த ஒப்பந்தத்தின்படி பெரியார் அணையில் இருக்கக் கூடிய அவ்வளவு நீரும் தமிழகத்திற்குச் சொந்தம். அந்த அணையிலே நீர்மட்டத்தின் உயரம் 152 அடியாக இருக்க வேண்டுமென்று அன்றைக்கு முடிவு செய்யப்பட்டது. சமீபத்திலே 2, 3 ஆண்டு காலமாக கேரளத்தில் ஒருவகையான பிரச்சாரம் முடுக்கி விடப்பட்டிருக்கிறது. பெரியார் அணை உடைந்துவிடும் என்றும், அப்படி உடைந்துவிடுமானால் கேரளாவில் மிகப் பெரிய பகுதி அழிந்துவிடும் என்றும் ஆகவே பெரியார் அணையிலே நீர் மட்டத்தைக் குறைக்க வேண்டும் என்றும் தேவையில்லாத அச்சத்தை வேண்டுமென்றே எழுப்பி வருகிறார்கள். அவர்களுடைய நோக்கத்தின்படி அந்த அணையின் நீர் மட்டத்தை 136 அடியாகக் குறைத்தால் அதன் மூலம் 16 அடி அளவுக்கு தண்ணீர் மட்டம் குறைக்கப்படுகிறது. அதன் மூலமாக மிஞ்சுகிற அந்தத் தண்ணீர் பெரியார் அணைக்குக் கீழே இருக்கிற இடுக்கி நீர்த் தேக்கத்திற்குக் கொண்டுபோகப் பட்டு அதிலிருந்து அதிகப்படியான மின்சாரம் தயாரிக்கப் படுகிறது. அதன் மூலமாக மட்டும் 640 மில்லியன் யூனிட் உற்பத்தி செய்யப்பட்டு அதை 15 கோடி ரூபாய்க்கு தமிழகத்திற்கு விற்று லாபம் பெறப்படுகிறது.

இதற்காக பிரச்சாரம் முடுக்கிவிடப்பட்டு, அதன் காரணத்தால் மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களிலே 80 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்குச் செல்ல வேண்டிய நீரைத் தடுத்து அங்கே கொண்டு போகக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதைப்பற்றி முன்பு இந்த பொறுப்பை ஏற்றிருந்த மாண்புமிகு அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்கள் தலைமையிலே இங்கிருந்து ஒரு குழு கேரளம் சென்று பேசினாலும் அந்தப் பேச்சு இன்னும் முடிவடையவில்லை. இதன் விளைவாக, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களிலே 80 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கு நீர் இல்லாத அபாயம் உருவாகியிருக்கிறது. இன்றைக்கு கேரள அமைச்சரின் அறிவிப்பைப் பார்த்தால், அது

உண்மையாக இருந்தால், மேலும் அது நம்மைப் பாதிக்கும் என்ற இயற்கையான அச்சம் விவசாயிகளுக்கு எழுந்திருக்கிறது. இதை அரசு எண்ணிப்பார்த்து இந்தப் பிரச்சினையிலே தீவிரமான கவனத்தைச் செலுத்த வேண்டும்.

இப்போது இருக்கிற பெரியார் அணைக்குப் பதிலாக புதிய அணையைக் கட்ட வேண்டுமென்ற கோரிக்கையை கேரள அரசின் சார்பிலே எழுப்பியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட புதிய அணை கட்டப்பட வேண்டுமானால் 50 கோடி ரூபாய் அதற்காகச் செலவாகும். அந்த 50 கோடி ரூபாய் செலவை தமிழகம் தான் செய்ய வேண்டிய நிலைமை ஏற்படும். 50 கோடி ரூபாய் செலவு செய்தாலும், கேரளத்திலே உள்ளவர்களுக்குத்தான் அதிலே வேலை கிடைக்கும், தமிழர்களுக்கு வேலை கிடைக்காது. அது மட்டுமல்ல, புதிய அணை கட்டப்படுமானால், ஏற்கனவே 99 ஆண்டுகளுக்கு செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் இயற்கையாகவே ரத்தாகிவிடும். அதற்குப் பதிலாக புதிய ஒப்பந்தம் ஏற்படுகிற சூழ்நிலை உருவாகும். புதிய ஒப்பந்தம் ஏற்படுகிறபோது, கேரள அரசு என்ன என்ன சொல்கிறதோ அவைகளை எல்லாம் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாய நிலையும் ஏற்படும். இதை எல்லாம் கருத்திலே கொண்டு புதிய அணை கட்டுகிற உத்தேசத்திற்கு தமிழக அரசு இணங்கக் கூடாது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இப்போது இருக்கிற அணை எந்தக் கால கட்டத்திலேயும் உடையாது, உறுதியானது என்ற உத்திரவாதமானது மத்திய அரசாங்கம் அனுப்பிய கமிஷனால் தீர்ப்பாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. மத்திய அரசாங்க அதிகாரிகள் அந்த அணைக்கு வந்து பார்த்துவிட்டு அது உறுதியாக இருக்கிறது. எந்தக் காலத்திலும் உடையாது என்று சொல்லியிருக்கிறார்கள். இது போன்ற பீதியை கேரளத்திலே இருக்கிற சிலர் வேண்டும் என்றே கிளப்பிக் கொண்டிருக்கிறார்கள். இதை மனத்திலே கொண்டு மதுரை, இராமநாதபுரம் விவசாயிகளின் அச்சத்தை போக்குவதற்கு இந்த அரசு முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த நிதி நிலை அறிக்கையை, நான் ஆரம்பத்திலே சொன்னது போல், '' புவர்மேன்'ஸ் பட்ஜெட் '' என்று பாராட்டி ஏழை எளிய மக்களின் நல்வாழ்விலே சிந்தனையைச் செலுத்துகின்ற புதிய பாதை இன்றைக்குத் திறக்கப்பட்டு இருக்கிறது, அந்தப் பாதையிலே தொடர்ந்து சென்று ஏழை எளிய மக்களுக்குப் பல புதிய திட்டங்களை உருவாக்க வேண்டும் என்று இந்த அரசுக்குச் சொல்லி இந்த நிதி நிலை அறிக்கையைக் கொடுத்த நிதி அமைச்சர் அவர்களுக்குப் பாராட்டுத் தெரிவித்து உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

[1980 ஜூலை 8

[பிற்பகல் 12-40]

*திரு. எல். இளையபெருமாள்: பாயின்ட் ஆப் பர்சனல் எக்ஸ்ப்ளனேஷன். நண்பர் திரு. நெடுமாறன் அவர்கள், என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு அது அதிருப்தியை அளித்திருக்கும் என்றும் அல்லது அவர்களுக்குப் பயந்து அவதிப்படுவதாகவும், அதனால் சிரமப்படுவதாகவும் அனுதாபப் பட்டார். அவர்களுக்கு நான் நன்றி சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன். நிச்சயமாக என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள், பினாமி டிரான்சேக்ஷனைப் பற்றிப் பேசியதற்கு யாரும் வருத்தப்படவில்லை. சகோதரர் அவர்கள் சொன்னது மாதிரி மக்கள் குழு என்று அமைக்க வேண்டும் என்று அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள், அவ்வாறே நம்முடைய முதலமைச்சரவர்கள் மக்கள் குழு ஒன்றை அமைத்து, பினாமி டிரான்சேக்ஷனைக் கண்டுபிடிக்க உதவி செய்வார்கள் என்ற நம்பிக்கை நண்பர் திரு. நெடுமாறன் அவர்களுக்கு இருப்பதைப்போல் எனக்கும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதனால் எந்த எதிர்ப்பும் என்னுடைய கட்சியில் இல்லை என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் பேசும்பொழுது, * * * என்று சொன்ன வார்த்தைகளைச் சபைக் குறிப்பிலேயிருந்து நீக்கும்படி ஆணையிடுகிறேன்.

*திரு. பி. முகமது இஸ்மாயில்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, சென்ற நான்கு தினங்களாக நிதிநிலை அறிக்கையின் மீது இந்தச் சட்ட மன்றத்தில் நடைபெற்று வருகின்ற விவாதத்தினைப் பார்க்கின்ற பொழுது, நாங்கள் எதிர்பார்த்த நிலையில் கொஞ்சங்கூட மாறுபடாமல், ஆளுகின்ற அணியைச் சார்ந்தவர்கள் பட்ஜெட் அறிக்கையை முழுமையாக ஆதரித்தும், எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்ற தோழர்கள் கடுமையாக அதை விமர்சித்தும் வாதம் புரிந்து வருவதை நாம் பார்க்கிறோம். ஆளுகின்றவர்கள் தந்திருக்கின்ற நிதி நிலை அறிக்கையில் இருக்கின்ற நல்ல நிலைகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில், பண்போடு எதிர்க்கட்சி வரிசைத் தோழர்களைப் பார்க்க முடியவில்லை. அதே போன்று ஆளுகின்ற அணியிலே இருக்கின்றவர்கள், உண்மையான குறைகளை எடுத்துக்காட்டும்பொழுது அதை ஏற்றுக் கொள்கின்ற பண்பையும் இந்த மன்றத்தில் காட்டவில்லை என்பதை நாம் பார்த்துக்கொண்டே இருக்கிறோம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1980 ஜூலை 8] [திரு. பி. முகமது இஸ்மாயில்]

ஜனதாவைப் பொறுத்தவரையில் அளிக்கப்பட்டிருக்கின்ற நிதி நிலை அறிக்கையிலிருக்கின்ற நல்ல அம்சங்களை நாங்கள் நிச்சயமாகப் பாராட்டுவோம்; இருக்கின்ற குறைகளைச் சுட்டிக் காட்டுவதற்கும் நாங்கள் தயங்க மாட்டோம் என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நிதி நிலை அறிக்கையில் நல்ல பல அம்சங்கள் இருக்கின்றன. அதற்காக நிதியமைச்சரவர்களை நான் பாராட்டுகிறேன்.

குறிப்பாக, வாழ வகை அற்றவர்களின் வாழ்க்கை வளம் பெறுவதற்காக நல்ல பல திட்டங்களை அறிக்கையில் தந்திருக்கிறார்கள். அதற்காக நான் நிதியமைச்சரவர்களை வெகுவாகப் பாராட்டுகிறேன்.

வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்கள் வாழ்வதற்காக நிதி உதவி மட்டுமல்ல, உணவு உதவியும், உடை உதவியும் கூடச் செய்வதாக நிதிநிலை அறிக்கை வெளிப்படையாகச் சொல்லிக் கொண்டிருக்கிறது. அதற்காக அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதல்களைச் தெரிவித்துக் கொள்கிறேன்.

நலிந்தவர்களுக்கும், சமுதாயத்தின் கீழ் மட்டத்திலே இருப்பவர்களுக்கும் பயன்படுகின்ற வகையில் சைக்கிள் போன்றவைகளுக்கும், அவற்றிற்கான உதிரிப் பாகங்களுக்கும் விற்பனை வரியைக் குறைவு செய்திருக்கிறார்கள். அதற்காகவும் சர்க்கார் என்னுடைய பாராட்டுதலைப் பெறுகின்றது. சில பிரிவுகளில் முழுமையாக வரிவிதிப்பு நிறுத்தப்பட்டிருக்கிறது. அதையும் நாங்கள் வரவேற்கிறோம். சில இனங்களில் பல முனை வரி இருப்பதை மாற்றி ஒருமுனை வரியாக மாற்றப்பட்டிருக்கிறது.

சிறிய தொழில்களில் ஈடுபட்டிருக்கின்ற சில தோழர்கள் இதுபற்றிச் சிறிது சந்தேகத்தைக் கிளப்பியிருக்கிறார்கள். குறிப்பாக. பிளாஸ்டிக் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருப்பவர்கள் —பிளாஸ்டிக் மூலப்பொருட்களை வாங்கி அதைப் பண்டங்களாக மாற்றி விற்பனை செய்யும் தொழிலாளர்கள் ஒரு சிறிய அச்சத்தைக் காட்டியிருக்கிறார்கள். அவர்கள் சொல்கிறார்கள், பிளாஸ்டிக் மூலப்பொருட்களை நாங்கள் வாங்கும்பொழுது 8 சதவீத வரி செலுத்திக் கொண்டிருக்கிறோம்; அதை வேறு பண்டங்களாக உருமாற்றம் செய்து நாங்கள் விற்பனை செய்யும்பொழுது இன்னும் 8 சதவீதம் விற்பனை வரி ஈடாகச் செலவு செய்கின்ற நிலைமை நேருமோ என்ற அச்சத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இரு நிலைகளில் 8 சதவீதம் விற்பனை வரி செலுத்துகின்ற கட்டாயம் தங்களுக்கு ஏற்பட்டு விடுமோ என்று சிறு தொழிலில் ஈடுபட்டுள்ள சில தோழர்கள் அச்சத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த

அச்சத்தைப் போக்கும் அளவிற்கு மூலப்பொருட்கள் மீது விதிக்கின்ற வரியையோ அல்லது அதைப் பண்டமாக மாற்றி விற்பனை செய்கின்ற நிலையில் இருக்கின்ற வரியையோ ஒழுங்குபடுத்தி ஒருமுனை வரி அமுல்படுத்தப்படுகிறது என்ற நிலையை உருவாக்குமாறு நிதியமைச்சரவர்களை நான் பணிவாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கின்ற வகையில் ஏறத்தாழ ரூ. 58 கோடி கடன் ரத்து செய்வதாக அறிவித்திருக்கிறார்கள். சிறிது தயக்கத்துடன் நான் அதை ஆதரிக்கிறேன். தயக்கத்துடன் என்று நான் சொல்வதற்குக் காரணம், அந்தக் கொள்கை நீடித்த கொள்கையாக இருக்கக் கூடாது என்று நான் விரும்புகிறேன். காரணம், சில கட்டங்களில் ஏற்பட்டிருக்கிற கடன்களை தள்ளுபடி செய்வது என்பதுஅரசாங்கத்தின் கொள்கை என்ற நிலை ஏற்பட்டுவிட்டால் கடன் பெறுகின்றவர்கள் கடனைச் செலுத்தாமல் இருந்து விடலாமோ என்ற எண்ணம் அவர்கள் உள்ளத்தில் ஏற்பட்டுவிட்டால், கடன் வழங்குகின்ற அந்தத் திட்டமே சிதைந்து போகுமோ என்று அச்சம் ஏற்படுகிறது. எனவே, நீங்கள் அறிவித்திருக்கிற அந்தக் கடன் நிவாரணத் திட்டத்தை நாங்கள் வரவேற்கிற அதே தருணத்தில் எஞ்சியிருக்கிற கடனை தயவுசெய்து சமுதாய உணர்ச்சியோடு திருப்பிச் செலுத்த வேண்டுமென்று நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்களே, அதை நாங்கள் இன்னும் அதிகமாகப் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம்.

எனவே, விவசாயிகளுக்கு நிவாரணம் அளிப்பது, கடன்களை ரத்து செய்கின்ற திட்டத்தில் மட்டுமல்ல என்பதைப் புரிந்து கொண்டு, விவசாயிகள் தங்களுடைய விவசாயத்திற்குப் போதிய மூலப் பொருள்களுக்கு அதிகமான விலை தருகின்ற புதிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிற இந்த வேளையில் அவர்களுடைய உற்பத்திப் பொருளுக்கு அதிகமான விலை நிர்ணயம் செய்வதுதான் அவர்களுக்கு நாம் செய்கின்ற மிக நல்ல ஆக்கபூர்வமான துணையாக இருக்கும் என்பதைக் கருத்திற்கொண்டு, உற்பத்திப் பொருள்களுக்கு விலையை உயர்த்துவதாகச் சொல்லிக்கொள்கிற அதே நேரத்தில் விலையை உயர்த்துவதாக நாம் சொல்லிக் கொண்டு, இருக்கும்போது, உற்பத்தியாளர்கள் தங்களுடைய விளை பொருள்களை அறுவடை காலத்தில் மார்க்கெட்டுக்குக் கொண்டு வரும்போது, இயல்பாகவே விலைகள் குறைவாக இருக்கும். அந்தச் சமயத்தில் அரசாங்கம் நிர்ணயம் செய்கின்ற உயர்ந்த விலைக்கு, வருகின்ற பொருள் அத்தனையையும் வாங்குகின்ற நிலையில் அரசாங்கத்தின் வர்த்தகக் கழகம் செயல்பட வேண்டுமென்ற எங்களுடைய விருப்பத்தை நாங்கள் தெரிவித்துக் கொள்கிறோம்.

1980 ஜூலை 8] *[திரு. பி. முகமது இஸ்மாயில்]*

விலையை மட்டும் அதிகமாக உயர்த்தி விட்டு, விவசாயிகள் தங்களுடைய பொருள்களை விற்பனை செய்வதற்குக் கொண்டு வருகின்ற பொழுது, அரசு இயந்திரம் அதை வாங்குவதற்குத் தயக்கம் காட்டுவதாக இருந்தால், விலையை உயர்வாக நிர்ண யித்ததால் எந்தவித பலனும் உற்பத்தியாளருக்குக் கிடைக்காமல் போய் விடுவதோடு மட்டுமல்லாமல் இங்கே பேசிய மதிப்பிற்குரிய உமாநாத் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல், பெரும் தனக் காரர்கள் குறைந்த மார்க்கெட் நிலவரம் இருக்கும்போது, உற் பத்திப் பொருள்களை, நெல்லை வாங்கிவிட்டு, விலைகள் உயர வாகப் போகின்றபொழுது விற்பனை செய்கின்ற சூழ்நிலையைக் கையாளும்போது, அந்தப் பெரும் தனக்காரர்களுக்கு துணை நிற்கும் என்ற விரும்பத்தகாத சூழ்நிலையை இந்த அரசாங்கம் ஏற்படுத்திவிடக்கூடாது என்று நான் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்ற நல்ல நோக்கம் படைத்த சர்க்கார், ஏனைய பல துறைகளில் தொழி லாளர் வர்க்கம் இருக்கிறது என்பதை மறந்துவிட வேண்டாம். விவசாயிகள் இருக்கிறார்கள். கைத்தறி தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் நெசவாளர்கள் இருக்கிறார்கள், மீன்பிடி தொழி லில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் ஏழை மீனவர்கள் இருக்கிறார் கள். பனையேற்றத் தொழிலாளர்களும் இருக்கிறார்கள். விவ சாயக் கடன்களை விவசாயிகள் பெற்றிருப்பதைப் போன்று, கூட்டுறவு கடன்களை, இந்தப் பிரிவைச் சேர்ந்த தொழிலாளர் களும் பெற்றிருக்கிறார்கள். இந்தக் கடன்களால் இன்றைய தினம் அவர்கள் அழுத்தப்பட்டிருக்கிறார்கள். சமநீதி வழங்கு கின்ற சர்க்கார் என்ற தத்துவத்தின் அடிப்படையில் இயங்குகின்ற இந்தச் சர்க்கார், அத்தகைய நிலையில் இருக்கிற வேறுபல இனத் தைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் நிவாரணம் அளிக்கின்ற வகையில், அவர்கள் பெற்றிருக்கிற கடனையும் ரத்து செய்யுமா என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் அவர் களைப் பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் பட்ஜெட்டைப் பற்றிப் பேசுகின்றபொழுது பல நண்பர்கள் இது உபரி பட்ஜெட். எனவே பாராட்டுக்குரியது என்று சொன்னார்கள். பட்ஜெட்டில் குறிப்பிட்டிருக்கிற நிதி நிலைகளை நாம் எண்ணிப் பார்க்கும்பொழுது, சாதாரணமாக ஆண்டுதோறும் வருகின்ற வருவாய் அதிகரித்து வருவதை நாம் பார்க்கிறோம். அதே நேரத்தில், முக்கியமான சில செலவினங் கள் குறைந்திருப்பதை நான் பார்க்கிறேன். நமக்குத் தெரியும், ஆண்டாண்டுதோறும் ஒவ்வொரு இனத்திலும் வருவாய் அதிகரித் கரித்து வரும், சிலவினங்களும் அதிகரித்துக்கொண்டே வரும். மதிப்பிற்குரிய நிதியமைச்சரவர்கள் தந்திருக்கிற நிதிநிலை

அறிக்கையில் சில சிலவினங்கள் மிக அதிகமாக வெட்டப்பட்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக, மிசல்லேனியஸ் ஐட்டெம்ஸ் என்று சொல்லப்படுகிற நிலைகளில் அதிகமான வெட்டுதல் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக, சிலவினங்கள் குறைத்துக் காட்டப்பட்டு, பற்றாக்குறை பட்ஜெட்டாக இருக்க வேண்டிய ஒரு பட்ஜெட், உபரி பட்ஜெட்டாக உருமாற்றம் செய்யப்பட்டு காட்டப்படுகிறதோ என்ற ஐயப்பாடு எனக்கு ஏற்படுகிறது.

[பிற்பகல் 12-50]

எனவே இந்த நிலையில் நிதி அமைச்சர் அவர்களைப் பாராட்ட முடியாத நிலையில் நான் இருக்கிறேன் என்பதை சுட்டிக்காட்டுகிறேன். அதுவும் சுருக்கமாக சொல்லிவிட்டு என்னுடைய தொகுதியில் இருக்கிற சில தேவைகளையும் சுட்டிக் காட்டாமல் நான் இருக்கக்கூடாது என்பதற்காக ஒரு சில தேவைகளை மட்டும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

என்னுடைய தொகுதியில் மாம்புழத்துறை அணைத் திட்டம் என்ற ஒரு அணைத் திட்டம் இருக்கிறது. அதற்கான ஆய்வு வேலைகள் எல்லாம் முடிந்துவிட்டன. மதிப்பீடுகளும் ஏற்பட்டு விட்டன. இந்த நிலையில் அந்தத் திட்டம் கைவிடப்பட்டு விட்டதாகக் கேள்விப்படுகிறேன். பத்மநாபபுரம் நகர எல்லைக்கும் விலவூர், இரணியல், ஆளூர் முதலிய பகுதியில் வாழ்கின்ற மக்களுக்கும் குடிநீர் வழங்கும் திட்டம் இது. அரசாங்கம் இதைக் கைவிடுவதற்காகச் சொல்லப்பட்ட காரணம் இந்தத் திட்டம் லாபகரமானது அல்ல என்று சொல்லப்படுகிறது. அரசாங்கம் மக்களுடைய சுகாதாரத்தைத்தான் பார்க்க வேண்டுமே தவிர லாப நஷ்டக் கணக்கைப் பார்க்காமல் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

இன்னும் எங்களுடைய ஜில்லாவில் ஏறத்தாழ 1,000 குளங்கள் இருக்கின்றன. அவைகளைத் தொடர்ச்சியாக தூர்வாரும் திட்டத்தினை அமுல்படுத்தாமல் இருந்த காரணத்தால் அத்தனை குளங்களும் மண் நிறைந்து இருக்கின்றன. அதனால் நீர் பிடிக்கும் பகுதி குறைந்திருக்கிறது. அதனுடைய கொள் அளவு குறைந்து விடுகிறது. எனவே போதுமான நீர்ப்பாசன வசதியை விவசாயப் பெருமக்கள் இழந்திருக்கிற நிலையோடு, அப்படி மண் மூடிப்போன அந்த நிலங்களை பக்கத்திலே இருக்கிற நிலச்சுவான்தாரர்கள் ஆக்கிரமித்து, அவர்களுக்கே பட்டா ங்கப்படுகின்ற நிலை இருக்கிறது. பல வருஷங்களாக நிறை

1980 ஜூலை 8] [திரு. பி. முகமது இஸ்மாயில்]

வேற்றப்படாமல் இருக்கின்ற இந்தத் திட்டத்தின் மீது அரசாங்கம் கவனம் செலுத்தி, இந்தத் தூர் வாரும் நடவடிக்கையை அமல் படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் எங்கள் மாவட்டம் தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய மாவட்டமாகும். ஏற்கனவே இதைப் பற்றி அருமை உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். பல வளம் பொருந்திய மாவட்டமாக இருந்தாலும் தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய மாவட்டமாக இருக்கிறது. மேலும் இந்த நாட்டில் உற்பத்தியாகக் கூடிய ரப்பர் நல்ல செழுமை வாய்ந்தது, நல்ல தரமான ரப்பர் ஆகும். அதை உற்பத்தி செய்வது கன்னியாகுமரி மாவட்டம்தான். இங்கே கிடைக்கும் ரப்பரைக் கொண்டு ஒரு தொழிற்சாலை இங்கே ஆரம்பிக்க வேண்டும் என்று அரசாங்கத்தை நான் கேட்டுக்கொள் கிறேன். இவ்வாறு பல திட்டங்கள் பல ஆண்டுகளாக புறக் கணிக்கப்பட்டு எங்கள் மாவட்டத்தில், தொழிற்சாலை ஆரம் பிக்க வேண்டும் என்று அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு சுருக்கமாக என் கருத்துக்களை வெளியிடுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

*திரு. வெ. அரங்கராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே கன்னிப்பேச்சை பேச எனக்கு சந்தர்ப்பம் அளித்த அறிஞர் அண்ணாவின் அறவழியில் ஆட்சி நடத்தும் தர்மத்தின் தளநாயகன் புரட்சித் தலைவர் அவர்களுக் கும், உப்பிலியாபுரம் தொகுதி மக்களுக்கும் நன்றி செலுத்த கடமைப்பட்டுள்ளேன்.

இந்த மாமன்றத்தில் மிகக் குறுகிய காலத்தில் தயாரித்து தாக்கல் செய்துள்ள நிதிநிலை அறிக்கையை எல்லோரும், அதா வது விவசாயப் பெருங்குடி மக்கள், வர்த்தகர்கள், ஏழை எளிய பாட்டாளி மக்கள் அனைவரும் பாராட்டுகின்றார்கள்.

விவசாயிகள் கடன் தள்ளுபடி 60 கோடி ரூபாய் என்பது மிகவும் பாராட்டத்தக்க ஒன்று. எல்லாக் கடன்களையும் தள்ளு படி செய்வது என்பது—நண்பர் திரு உமாநாத் அவர்கள் கூறியது போல் தேவையில்லாத ஒன்று என்று நான் கருதுகிறேன். காரணம் வசதி வாய்ப்புள்ளவர்களெல்லாம் கடன் வாங்கிய காரியங்களுக்கு அந்தத் தொகைகளைப் பயன்படுத்தாமல் வீண் ஆடம்பர குடும்பச் செலவுகளைச் செய்துவிட்டு, தாங்கள் வாங்கிய கடன் தொகை களை ரத்து செய்ய வேண்டும் என கேட்பது நியாயமற்றது என்று சொல்லிக் கொள்கிறேன். திரு உமாநாத் அவர்கள் டிராக்டர் வாங்கும் கடன் குறித்துச் சொன்னார்கள். நான் கூட்டுறவுத்

துறையில் மேற்பார்வையாளராகப் பணியாற்றிய காரணத்தால் சொல்கிறேன். டிராக்டர் வாங்கிய கடனை ஏமாற்ற முடியாது. டிராக்டர் வாங்குவதற்கு அந்தக் கம்பெனிக்குத்தான் தொகை செக்காக அனுப்புகிறார்கள். அந்தத் தொகையை அவர்கள் கையில் கொடுத்து, டிராக்டர் வாங்கவில்லை என்று கூறுவது சரியல்ல.

5 ஏக்கருக்குக் குறைவாக நிலம் உள்ளவர்களுக்கு கடன் தள்ளுபடி என்பதை ஏழை எளிய மக்கள், பாட்டாளி மக்கள் அனைவரும் பாராட்டுகிறார்கள்.

அடுத்து, எனது பகுதியில் பச்சைமலைப் பகுதியில் குடியிருக்கும் மக்களுக்குச் சாலை வசதி, மின் வசதி, போக்குவரத்து வசதி மருத்துவ வசதியின்றி மிகவும் சிரமப்படுகிறார்கள். அந்தப் பகுதியில் வாழ்கின்றவர்களில் பழங்குடியினர் மிகுதியாக இருப்பதால், பழங்குடியினருக்கு நிதி ஒதுக்கீடு செய்வதில் அதிகமான அக்கறையை காட்டி, அந்தப் பகுதி மக்களுக்கு நான் மேற் சொன்ன எல்லாப் பணிகளும் நிறைவேற்றித்தர வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சார உற்பத்திக்கு இந்த ஆண்டு 155.76 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து இருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. ஏனெனில் மின் இணைப்பு கொடுக்கின்ற பணியினை மட்டும் செய்து கொண்டே போனால் மின்சாரப் பற்றாக்குறை மிகவும் அதிகமாக வந்துவிடும். எனவே இந்த ஆண்டு 5, 6 இடங்களில் மின் உற்பத்தித் திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை மேற் கொண்டு இருப்பது பாராட்டத்தக்கது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்த வரையில் ஆரம்ப காலம் முதல் அவைகள் நஷ்டத்தில் தான் இயங்கி வந்திருக்கின்றன. இப்போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பொறுப் பேற்றதற்குப் பின்னாலே, போக்குவரத்துக் கழகங்கள் லாபகரமாக நடந்துகொண்டு இருக்கின்றன. இவைகளின் முன்னேற்றத்திற்காக சென்ற ஆண்டு பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டு இருந்த மூன்று கோடி ரூபாயை விட இந்த ஆண்டு இரண்டு மடங்காக அதாவது ரூ. 6 கோடி என்கிற அளவில் ஒதுக்கியிருப்பதற்காக நான் இந்த அரசை மிகவும் பாராட்டுகிறேன்.

உப்பிலியாபுரம் தொகுதி பழங்குடியினர் அதிகம் வாழும் பகுதியாக உள்ளது. அது மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. எனவே துறையூர் தாலுக்காவையே பின்தங்கிய பகுதியாக அறிவிக்க அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1980 ஜூலை 8] [திரு. வெ. அரங்கராசன்]

எங்கள் தொகுதியில் சிறு தொழிலோ கனரக தொழிலோ கிடையாது ஆகவே, பச்சைமலை, கொல்லிமலை ஆகிய இடங்களில் அதிகமாகக் கிடைக்கும் சந்தன மரங்களையும், மூங்கில் மரங்களையும் மூலப் பொருளாக வைத்து அந்தப் பகுதியில் ஒரு சந்தனப் பவுடர், அல்லது சந்தன பத்தி, அல்லது ஒரு காகிதத் தொழிற்சாலை என்று ஏதாவது ஒரு தொழிற்சாலையை நிறுவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கான நடவடிக்கைகளை அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காகிதத் தொழிற்சாலை ஏற்படுத்தினால் அந்தப் பகுதியில் உள்ள காட்டூர், எறையூர் சர்க்கரை ஆலையிலுள்ள கரும்புச் சக்கையையும் பயன்படுத்த வாய்ப்பு இருக்கிறது. அதனால் அந்தப் பகுதியில் வேலை வாய்ப்புத் திட்டம் அதிகரிக்கவும், வேலையில்லாத் திண்டாட்டம் போக்கவும் வசதியாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

துறையூர் நகரத்தில் குடிநீர் பிரச்னை நீண்ட நெடுங்காலமாக தீர்க்கப்படாமல் இருக்கிறது. 1975 ம் ஆண்டிலேயே துறையூர் நகரில் குடிநீர் வடிகால் வாரியம் நீர்த்தேக்க தொட்டி கட்டி கலைஞர் அவர்களை வைத்து திறந்து வைத்தது. இதில் வேடிக்கை என்ன என்றால் இந்தத் திட்டம் 1972ல் ரூ. 35.50 லட்சம் செலவில் ஆரம்பித்து ரூ. 12.46 லட்சம் செலவு செய்து இன்னும் எந்தப் பலனும் இல்லாமல், பூமிக்கடியில் பதித்த பைப்புகள் எல்லாம் பயனற்றுப் போய், மக்களுக்கு குடிநீர் கிடைக்காத அவல நிலைமை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் தண்ணீர் எங்கிருந்து கொண்டுவர திட்டமிட்டார்களோ அந்த இடத்தில் தொட்டி கட்டி பைப்பு புதைத்துக் கொண்டு வராமல், தண்ணீர் சப்ளை செய்ய வேண்டிய துறையூர் நகரில் நீர்த்தேக்கத் தொட்டி கட்டி நகருக்குள் பைப்பை புதைத்து அரசு தொகை ரூ. 12.46 லட்சம் வீண் விரையம் செய்து விட்டார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1–00]

எனவே உடனடியாக கொல்லிமலையிலிருந்து குடிநீர் கொண்டுவரும் திட்டத்தையோ அல்லது முசிரி காவேரியிலிருந்தோ அல்லது துறையூருக்கு 8 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள காணப்பாடி கிராமத்தில் தண்ணீர் தாராளமாக இருக்கிறது என்று நிபுணர்கள் கூறுவதால் ஏதாவது ஒரு இடத்திலிருந்து தண்ணீர் கொடுவந்து துறையூர் நகர குடிநீர்ப்பிரச்சினையை தீர்த்து வைக்க விரைவில் குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஏற்பாடு செய்ய வேண்டும்மென்று கேட்டுக் கொள்கின்றேன்.

அடுத்தபடியாக, கொல்லிமலைப் பகுதி வருடம் முழுவதும் தண்ணீர் வரக்கூடிய பகுதியாக இருக்கிறது. அந்தப் பகுதியில் ஒரு அணை அல்லது 'செக் டாம்' கட்டி மழைக்காலத்தில் அதிக அளவில் வருகின்ற தண்ணீர் வீணாகக் கடலில் போய் விழுவதைத் தடுத்து நிறுத்தி, அதை விவசாயிகளுக்கு சாகுபடி செய்ய பயன்படுத்திக் கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் விவசாயத்திற்கு மட்டுமல்லாமல் கிணறுகளிலும் தண்ணீர் அதிகமாகக் கிடைக்கும் வாய்ப்பு ஏற்படும். ஆகவே, இந்த கொல்லிமலை அணைத் திட்டத்தை பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் கொல்லிமலைப் பகுதியை ஒரு சுற்றுலா தலமாக அறிவித்து அதற்கான பணிகளை மேற் கொள்ள வேண்டும் என்றும், அங்கே பயணியர் விடுதிகள் கட்ட வேண்டுமென்றும் இதர வசதிகளையும் செய்ய வேண்டு மென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நாகநல்லூர் என்ற கிராமத்திலிருந்து அடுத்த ஊருக்கு செல்ல, வழியில் ஒரு பெரிய ஆறு இருக்கிறது. அதற்கு ஒரு தனி மகிமை உண்டு. பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை அங்கே சொற்பொழிவாற்றிவிட்டு திரும்பும்போது சுமார் 4½ மணி நேரம் காத்திருக்க வேண்டியதாயிற்று. ஏனென்றால் திடீரென்று மழை பொழிந்தது, அந்த ஆற்றிலே பெரு வெள்ளம் வந்து, இக்கரையிலிருந்து அக்கரைக்கு போகமுடியாமல் ஆகிவிட்டது. அந்தப் பாலம் கட்டப்படாததால் இந்தத் தேர்தலில் கூட அந்த கிராம மக்கள் யாருக்கும் வாக்களிக்க முடியாது என்று சொல்லி, வாக்களிக்கவில்லை. ஆகவே நம்முடைய அரசு உடனடியாக அங்கே ஒரு பாலத்தை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, துறையூர் ஒரு தாலுக்கா சென்டர்; அங்கே இருக்கிற மருத்துவ மனைக்கு தினசரி சுமார் 1000 பேர் வருகிறார்கள். அங்கே ஆண்களுக்கு 20 படுக்கைகளும், பெண்களுக்கு 10 படுக்கைகளும் கொண்ட வசதிதான் தற்போது இருக்கிறது. அதை 60 அல்லது 70 படுக்கைகள் கொண்டதாக விரிவுபடுத்தி, போதுமான டாக்டர்களையும் நியமிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்று வாடகைக் கட்டிடத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்கு நிரந்தரமான சொந்தக் கட்டிடம் கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1980 ஜூலை 8] [திரு. வெ. அரங்கராசன்]

எங்கள் பகுதியில் எந்தவிதமான தொழில் செய்வதற்கும் தற்போது வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. எனவே ஒரு ஐ. டி. ஐ அதாவது தொழில் கல்லூரி ஏற்படுத்த வேண்டும்.

துறையூரில் ஒரு தீயணைப்பு நிலையம் இருக்கிறது. அது கொட்டகைக் கட்டிடத்தில் இருக்கிறது. அதற்கு நிரந்தரமான கட்டிடம் கட்ட வேண்டும். இதைப் போன்ற பல்வேறு திட்டங் களை எங்கள் பகுதிக்கு தீட்டி, செயல்படுத்த வேண்டுமென்று கேட்டு, பேசுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்ததற்காக நன்றி தெரி வித்து, முடித்துக் கொள்கிறேன் வணக்கம்.

* திரு. செ. சிவசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, என்னை சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுத்து அனுப்பிய இளையான்குடி தொகுதி மக்களுக்கும், என்னுடைய வெற்றிக்கு பாடுபட்ட கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும் ஊழியர் களுக்கும் முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன். அடுத்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இந்த நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

எங்களுடைய பாட்டாளி வர்க்கத்தின் தலைவர் லெனின் புரட்சி முடிந்த அடுத்த நிமிடமே நாட்டு மக்களுக்கு மூன்று அறிவிப்புக்களை வெளியிட்டார். முதலாவது அறிவிப்பு, எங்க ளுடைய உயிர் மூச்சு உலக சமாதானம் (ஓர்ல்டு பீஸ்); அடுத்த அறிவிப்பு, உழுபவனுக்கே நிலம் சொந்தம்; மூன்றாவது அறிவிப்பு விவசாயிகளின் எல்லாக் கடன்களும் ரத்து. இந்த மூன்று அறிவிப்பு களையும் வெளியிட்டார்கள். அதற்கு அடுத்து நான்காவது அறிவிப்பாக எல்லாவற்றையும் செம்மையாக அமுல்நடத்துவதற் காக 'பீப்பிள்ஸ் கமிட்டி' —மக்கள் கமிட்டி அமைக்கப்பட்டு அதன் மூலமாக பல நல்ல காரியங்கள் நடைபெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் அறிவிக்கப்பட்டன. அதைப் போல அந்த அளவுக்கு இல்லாவிட்டாலும் இன்றைக்கு தமிழ்நாட்டில் வந்திருக்கிற கடன் நிவாரணச் சட்டத்தை முழுமையாக ஆதரிக்கி றோம். வரவேற்கிறோம்.

அதைப் போல எந்தக் காலத்திலும் இல்லாத அளவுக்கு விவசாயிகளுக்கு இன்றைக்கு 60 கோடி ரூபாய்க்கான கடன்களை இந்த அரசு தள்ளுபடி செய்திருக்கிறது என்றால் இந்த நாட்டிலே எந்த அரசும் கொண்டுவராத ஒரு முற்போக்கான திட்டமாக இருப்பதால் அதை நாங்கள் வரவேற்கிறோம்,

ஆனால் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு ரெவின்யூ அமைச்சரவர்கள் 200 கோடி ரூபாய் தள்ளுபடி செய்ய வேண்டு மென்று சொன்னார்கள். இப்போது 60 கோடி ரூபாய் தள்ளுபடி செய்திருந்தாலும் அது இந்த 200 கோடி ரூபாயோடு ஒப்பிடும் போது மிகவும் குறைவாக இருக்கிறது என்றாலும், பின்னால் 200 கோடி ரூபாய் தள்ளுபடி செய்து, இந்த நாட்டு ஏழை எளிய மக்கள் நல்ல முறையிலே வாழ்வதற்கான நடவடிக்கை களை நிச்சயமாக செய்வார்கள் என்ற நம்பிக்கையில் இந்த திட்டத்தை நாங்கள் வரவேற்கிறோம்.

அடுத்தபடியாக திட்டங்கள் பற்றி அறிவிக்கின்ற காலத்திலே அந்தத் திட்டங்களை எந்த அளவுக்கு தீவிரமாக நிறைவேற்ற வேண்டுமோ அந்த அளவுக்குத் திட்டங்களை வேகமாக நிறைவேற்றுவதற்கும் நீங்கள் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து 5 ஸ்டாண்டர்ட் ஏக்கர் நிலத்திற்குக் குறைவாக வைத்திருப்பவர்களுக்கு அத்தனைக் கடன்களையும் ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 5 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கும் 10 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கும் இடையிலான எண்ணிக்கையிலே நிலம் வைத்திருப்பவர்களுக்கு வட்டியை ரத்து செய்வதோடு குறுகிய காலக் கடன்களை நீண்டகாலக் கடன்களாக மாற்ற வேண்டும். 10 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு அதிகமாக வைத்திருப்பவர்களுக்கு கடன்களை நீண்டகாலக் கடன்களாக மாற்ற வேண்டும். உண்மையிலேயே பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்த அளவுக்கு நிவாரணம் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்குப் பரிசிலனை செய்து தகுந்த கணக்கெடுத்து நிவாரணம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பம்ப் செட் விவசாயிகளைப் பொறுத்த வரையில் ஓரளவுக்கு நிவாரணம் தந்திருந்தாலும் கூட, டிராக்டர்கள் வைத்து உழக்கூடிய அப்படிப்பட்ட பெரிய விவசாயிகளுக்கு சலுகைகள் வழங்குங்கள் என்று சொல்வதற்கு நான் தயாராக இல்லை. மேலும் எந்த ஏற்பாடாக இருந்தாலும் உடனடியாகச் செய்யுங்கள்.

அடுத்து கூட்டுறவுக் கடனாக இருந்தாலும், வேறெந்தக் கடனாக இருந்தாலும், அவற்றை வசூல் செய்யப் போகின்ற காலங்களிலே ஜப்தி நடவடிக்கைகள் எடுக்கக்கூடாது என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

ALONE TRIUMPHS

வேளாண்மை உற்பத்தி கடந்த ஆண்டு 83.92 லட்சம் டன்கள் ஆக இருந்தது. இப்போது 89.20 லட்சம் டன்கள் என்ற அளவில் அதிகமாக உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருப்பது வரவேற்கவேண்டிய அம்சம்.

நெல் கரும்பு, பருத்தி, மிளகாய் வத்தல் போன்றவற்றிற்கு கட்டுபடியாகும் விலையை விட்டு லாபகரமான விலையைக் கொண்டுவர வேண்டும் என்ற நிலையிலே பல நடவடிக்கைகள் எடுத்திருப்பதை நான் வரவேற்கிறேன்.

பயறுவகை உற்பத்தி, தென்னை உற்பத்தி, பழத் தோட்டங்கள் அபிவிருத்தி பல்கலைக் கழகங்கள் ஆராய்ச்சிப் பிரிவிற்கு 20 லட்சம் ஒதுக்கி சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன்.

எங்களைப் பொறுத்த வரையில் உற்பத்தி வரவுகளையும், சாதனங்களையும் அரசு தன் கையில் எடுத்துக் கொண்டு மக்களுக்கு விநியோகம் செய்யும் முறையைக் கொண்டுவந்தாலொழிய லஞ்சத்தையும், முறைகேடுகளையும், தடுத்து நிறுத்த முடியாது என்பதை மிகவும் பணிவன்போடு சொல்லிக் கொள்கிறேன். விநியோக முறைகளை அரசு தன் கையிலே எடுத்துக் கொள்வது என்பது முழுமையான அளவிலே இல்லாவிட்டாலும் படிப்படியாக எடுத்துக் கொண்டு அதன்மூலமாக நடத்தினால்தான் எல்லா மக்களுக்கும் எல்லா நன்மைகளும் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு ஏழைகள் அத்தனை பேருக்கும் இந்தியாவில் இருக்கக்கூடிய கூட்டுறவு ஸ்தாபனம்தான் ஒரே ஒரு வழிகாட்டியாக இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட கூட்டுறவு ஸ்தாபனங்களிலே ஏற்படக்கூடிய நஷ்டங்களையும், இழப்புகளையும் மத்திய அரசு கடமை உணர்வுடன் ஏற்றுக்கொண்டு ஈடு செய்ய வேண்டும், ஆகவே, அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பாம்பன் ரோடு பால வேலையைப்பற்றி காலையிலே மிகப் பெரிய வாதங்கள் நடைபெற்றன. அங்கே ஏற்பட்ட இயற்கையின் சீற்றத்தின் காரணமாக 22 இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நஷ்டத்தைத் தனக்குக் கொடுக்க வேண்டும் என்றும் அப்படிக் கொடுக்காவிட்டால் இந்த வேலையைத் தொடர்ந்து செய்ய மாட்டேன் என்றும் இன்றைக்கு அந்த கான்ட்ராக்டர் நடவடிக்கைகளை எடுத்துவருகிறார்கள். பரிசீலனை செய்த பிறகு நிச்சயமாக மத்திய அரசு இந்த தனிப்பட்ட நபருக்கு 22 இலட்சம் ரூபாய் கொடுக்கத்தான் போகிறது. அப்படித் தனிப்பட்ட நபருக்கு 22 இலட்சம் ரூபாய் கொடுக்கப்

படுகின்றது என்கிற நேரத்திலே இந்த நாட்டிலே ஏழை எளிய மக்கள், பாட்டாளி மக்கள் போன்றவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற கடன் சுமையைத் தள்ளுபடி செய்வதற்கு ஏன் மத்திய அரசு இந்த தமிழக அரசுக்கு அந்த நிதியினை ஈடுகட்டும் வகையிலே கொடுக்கக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

ஏழைகளினுடைய கடன் சுமையைக் குறைக்க வேண்டும், மக்களில் 80 சதவிகிதம் பேர்களாக இருக்கின்ற ஏழை எளிய மக்களுக்கும் பாட்டாளி மக்களுக்கும் போதிய நன்மைகளைச் செய்யாமல் அவர்களுடைய எண்ணங்களைப் புரிந்து கொண்டு அவர்களுடைய வாட்டங்களைப் போக்காமலேயே இருந்ததன் காரணமாகத்தான் 32 ஆண்டுகளைக் கணக்கெடுத்துப் பார்த்தால் முதலாளிகளின் கையாளாக இருந்த காரணத்தால் அவர்களுக்கு எந்தவிதமான நன்மையும் செய்யப்படாமல் தாழ்ந்த நிலையி லேயே இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே இன்றைக்கு வந்திருக்கக்கூடிய அரசு இந்த நிலையினைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பல முற்போக்கான திட்டங்களை ஏழை மக்களுக்காக கொண்டுவர வேண்டும். அதன்மூலமாகத்தான் மீண்டும் மீண்டும் மக்களுடைய நல்லெண்ணத்தைப் பெற முடியும், அவர்களுக்காக வாழமுடியும், மீண்டும் மீண்டும் வரமுடியும் என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

[பிற்பகல் 1–10]

இயற்கையின் சீற்றங்கள் வரக்கூடிய காலத்திலே 97 கோடி ரூபாய் பாதித்தது என்று அரசே அறிவித்திருந்தது. இந்த 97 கோடி ரூபாய் மத்திய அரசிற்கு பெரிதல்ல. அந்த 97 கோடி ரூபாயை யும் மத்திய அரசாங்கம் கொடுத்து ஈடு கட்ட வேண்டும் என்று கேட்கிறேன். இல்லாவிட்டால் அதற்காக ஒரு போராட்டத்தை நாமெல்லாம் நடத்த வேண்டும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல, தமிழகத்திலே மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த மாக பார்த்தோமானால் மாநில அரசாங்கங்களை எந்த அளவிற்கு மத்திய அரசாங்கம் சீரழித்துள்ளது என்பது தெரிகிறது. அதிலும் குறிப்பாக தமிழகத்தை மத்திய அரசாங்கம் எவ்வளவு சீரழித் திருக்கிறது என்பதை புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. கடந்த 1951–56-லே 10.8 லிருந்து 1974–78-க்கு வரும்போது 4.1 ஆக குறைத்து நிதி உதவி கொடுக்கக்கூடிய அளவிற்கு தமிழகம் புறக் கணிக்கப்பட்டிருக்கிறது என்று புள்ளி விவரம் காட்டுகிறது.

மணியடிக்கப்பட்டது

கம்யூனிஸ்ட் கட்சிக்கு 5 நிமிடங்கள் தானா ? நான் காலையில் 5வது இடத்தில் இருந்தேன். இப்போது 11 வது இடத்திற்கு வந்து பேசிக்கொண்டிருக்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

1980 ஜூலை 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 13 வது இடத்திலிருந்து 10 வது இடம் கொடுக்கப்பட்டது. என்பதுபற்றியெல்லாம் நீங்கள் கவலைப்பட வேண்டாம். தலைவர்களுக்கு கொடுக்க வேண்டிய இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் தலைவராகும் போது அதிக நேரம் பேசலாம், முதல் இடமும் கொடுக்கப்படும் அப்போது.

திரு செ. சிவசாமி : இந்த நிலைமை நீடிக்கக்கூடாது என்று கனிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டும் அல்ல; கடந்த 1969–1973 லே 17வது இடத்தைப் பெற்றிருந்த தமிழகம் 1974–78 ல் 19 வது இடத்திற்கு மத்திய அரசின் லிஸ்டிலே தள்ளப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அதற்கு யார் காரணம்? அப்படிப்பட்ட காரணத்தை உண்டாக்கக்கூடிய மத்திய அரசாங்கத்தை, அந்த நிலைமையை தமிழகத்திலே உருவாக்கியிருக்கிற மத்திய அரசாங்கத்தை * * என்று இந்தச் சபையிலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஏன் இந்த அவல நிலைமை? என்ன காரணத்திற்காக தமிழகம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்று

(கூச்சல் குழப்பம்.)

திரு பாபு ஜனார்த்தனன் : தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் அவர்கள் பேசுகிற சமயத்தில் மத்திய அரசாங்கத்தை ** ** ** ** என்று சொன்னார்? யாரை? அதைத் தெளிவாகச் சொன்னால் அவரோடு ஒத்துழைக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கம் எல்லாம் கேட்டு, மத்திய மாநில உறவுகளையெல்லாம் கெடுக்க வேண்டாம். பேசவேண்டிய விஷயங்களை மாத்திரம் பேசுங்கள்.

(கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு பாபு ஜனார்த்தனன் அவர்கள் லீடிங் கொஸ்ச்சின் எல்லாம் கேட்கக்கூடாது. கோர்ட்டிலேயே லீடிங் கொஸ்ச்சின் எல்லாம் அனுமதிப்பது இல்லை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

இல்லை. யாரை என்று விளக்கச் சொல்லி கேட்பது லீடிங் கொஸ்சின் தானே? திரு சிவசாமி அவர்கள் சப்ஜெக்டில் மட்டும் பேச வேண்டும்.

திரு செ. சிவசாமி : நான் மீண்டும் சொல்லிக் கொள்கிறேன். இந்த நிலைமையை தமிழகத்திற்கு ஏற்படுத்திய அரசாங்கம் எதுவாக இருந்தாலும் சரி, அவர்கள் தூக்கியெறியப்படுவார்கள் தூக்கியெறிய வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு சிவசாமி அவர்கள் தூக்கியெறியப்படவேண்டும் என்றுதான் சொன்னாரே தவிர, ** ** என்பது அல்ல.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்ன சொன்னார்கள் என்று அவர்களிடமே விளக்கம் கேட்பது நல்லது. தூக்கி எறியுங்கள் என்று சொல்வது தவறு அல்ல. '' த்ரோன் அவுட் '' என்று சொல்லலாம். * * * * * * * * என்று சொல்வது முறையான சொல் அல்ல. அது பாராளுமன்ற முறைக்கு ஏற்றதல்ல. தூக்கி எறிய வேண்டும் என்று சொல்லலாம். * * * என்று சொல்வது சரியாகாது. அவர்களே விளக்கினால் நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கமே வேண்டாம். அதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட வேண்டும் என்று உத்தரவிடுகிறேன்.

திரு. செ. சிவசாமி : அடுத்து, எங்களது இராமநாதபுரம் மாவட்டம் தலைநகரமே இல்லாத ஒரு மாவட்டம். எங்கள் மாவட்டத்திற்குள்ளே அதன் தலை நகரம் இல்லை. ஆகவே இந்த நிலையை மாற்றி இராமநாதபுரம் மாவட்டத்தின் தலை நகரை அம்மாவட்டத்திற்குள்ளேயே கூடிய விரைவில் அமைத்துத்தர இந்த அரசாங்கம் முன் வர வேண்டும். அதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

TRUTH ALONE TRIUMPHS

19‹0 ஜூலை 8]

* செல்வி வி. விசயலட்சுமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980–81 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது எனக்கு பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கும், இம்மாமன்றத்தில் பேச எனக்கு வாய்ப்பளித்த எனது வீரபாண்டி தொகுதி மக்களுக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த சட்டமன்றக் கூட்டத்தில் அடுத்த நிதிநிலை அறிக்கையை நான்தான் சமர்ப்பிப்பேன் என்று கூறிச் சென்றவர் இன்று இருக்கும் இடம் தெரியாத நிலையில், நமது புரட்சித் தலைவர் அவர்களின் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 1980–81 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையினை சமர்ப்பித்து ஏழை எளிய மக்களின் வயிற்றில் பால் வார்த்துள்ளார்கள். நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்று ஒரு மாத காலத்தில் ஏழை. நடுத்தர விவசாய மக்களுக்கு ரூ. 60 கோடி அளவிற்கு கடன்களை ரத்து செய்து நாங்கள் தேர்தல் நேரத்தில் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை உடனுக்குடன் நிறைவேற்றுவோம் என்பதற்கு இதுவே சான்றாக உள்ளது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்கனவே விவசாயக் கடன்கள் 40 கோடி ரூபாய் தள்ளுபடி செய்துள்ளது. தற்சமயம் நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் விவசாயக் கடன்கள் தள்ளுபடியாக அறுபது கோடி ரூபாய் அளவிற்கு தள்ளுபடி செய்திருக்கிறார்கள். இதானல் ஏழை எளிய விவசாய, நடுத்தர விவசாய மக்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ஆனால் இதனைப் பிடிக்காத நமது இரண்டாவது எதிர்க்கட்சியினர் யானைப் பசிக்கு சோளப் பொரி என்று கேலி பேசியுள்ளனர். கடந்த மே மாதம் 7 ஆம் தேதி மத்திய விவசாய இணை அமைச்சர் மாண்புமிகு திரு. ஆர். வி. சாமிநாதன் அவர்கள் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் விவசாயக் கடன் அனைத்தையும் ரத்து செய்வோம் என்று பத்திரிகை வாயிலாக அறிக்கை விட்டார். முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அனைத்து விவசாயக் கடன்களை ரத்து செய்ய மத்திய அரசின் உதவியை நாடிய போது நிராகரித்து விட்டனர் என்பது அனைவரும் அறிந்ததே. ஏறத்தாழ 100 கோடி ரூபாய் விவசாயக் கடனை அடியோடு அசலோடும் வட்டியோடும் ரத்து செய்து இருப்பது சோளப் பொரி என்றால் அகில இந்தியாவையும் ஒரே கொடியின் கீழ் ஆளத் துடிக்கும் ஒரு கட்சி அவர்கள் கொண்டு வந்த கவர்னர் ஆட்சியின் போது விவசாயக் கடன்களை ரத்து செய்யாதது ஏன்? வேண்டுமென்றே புரட்சித் தலைவரின் ஆட்சியில் நிதி அமைச்சர் சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கையைக் குறை கூறுகிறார்கள். இது போன்ற பட்ஜெட்டை நமது புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில் தான் பார்க்க முடியும் என தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்

நாட்டில் நூற்பாலைகள் 36 ஆலைகளை விரிவுபடுத்தும்போது 19,000 பேர்கள் கூடுதலாக வேலை வாய்ப்பு பெறும் போது கைத்தறித் தொழில் தெரிந்தவர்கள் மிக்க மகிழ்ச்சி அடைவார்கள். மேலும் கைத்தறித் துணிக்கு 452 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்திருப்பது கைத்தறித் துறையைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

[பிற்பகல் 1-20].

குடிநீர் இந்த அரசின் முக்கிய குறிக்கோள். பாதுகாக்கப்பட்ட குடிநீர் எல்லா தரப்பு மக்களுக்கும் அளிப்பது என்று முடிவெடுத்திருப்பதை வரவேற்கிறேன். இவ்வாண்டில் ஏறத்தாழ சுமார் 70 கோடி ரூபாய் குடிநீருக்கு ஒதுக்கியிருப்பது நமது புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள மக்களுக்கு வாரம் ஒரு கிலோ அரிசி இலவசமாக வழங்க முடிவு எடுத்திருப்பது ஏழை எளிய மக்கள் மீது இந்த அரசு எந்த அளவுக்கு மதிக்கிறது என்பதை நான் மிகவும் பாராட்டுகிறேன். இதுவரை எந்த அரசும் செய்யாத சாதனை இது. வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் இது வரை 23 இலட்சம் பேர்கள் பயன் பெற்றுள்ளனர். இந்தியாவிலேயே இத்திட்டம் தமிழகத்தில் புரட்சித் தலைவர் ஆட்சியில் தான் சிறப்பாக நடைபெறுகிறது என அனைவரும் போற்றி புகழ்ந்தனர். ஆனால், இடையில் ஏற்பட்ட கவர்னர் ஆட்சியில் இத் திட்டம் தொடர்ந்து நடைபெறுமா என்ற நிலை ஏற்பட்டு, ஏழை மக்கள் சந்தேகப் பட்டனர். அவ்வளவு மந்தமாக வேலைகள் நடைபெற்றன. மீண்டும் புரட்சித் தலைவர் ஆட்சி ஏற்பட்டுள்ளதால், இத் திட்டம் மீண்டும் தொடரும் என அறிவித்திருப்பது தொழிலாள வர்க்கம் மிக்க மகிழ்ச்சி அடையும் என்பதில் எள்ளவும் சந்தேகம் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணாவின் பெயரைச் சொல்லி நமது புரட்சித் தலைவர் ஆட்சிக்கு முன் 1969-லிருந்து 1976 ஆம் ஆண்டுவரை ஆட்சி நடத்தியவர்கள் அண்ணாவின் கொள்கையினையும், தந்தை பெரியாரின் கொள்கைகளையும் கைவிட்டு காற்றில் பறக்க விட்டனர். ஆனால், நமது புரட்சித் தலைவர் ஆட்சியில்தான் தந்தை பெரியார் கண்ட கனவும், அண்ணாவின் கொள்கைகளும் நடை முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இனிமேல், தந்தை பெரியார் பெயரைச் சொல்லியோ, அண்ணாவின் பெயரைச் சொல்லியோ மக்களை ஏமாற்ற முடியாது என்று நினைத்து தமிழக மக்கள் புரட்சித் தலைவர் ஒருவர்தான்

அண்ணாவின் கொள்கைகளை நடத்துவார் என தீர்மானித்து அவரை மீண்டும் தமிழகத்தின் முதல்வராக அமர்த்தியுள்ளனர். ஆகவே, இந்த நிதி நிலை அறிக்கையைப் பற்றி பத்திரிகை நிருபர்கள் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரைக் கேட்ட போது கூட, வாக்களித்தவர்கள் விரும்பினால் எனக்கும் சந்தோசம் என கூறியுள்ளார். அவரே இந்த நிதி நிலை மீது எந்தக் குற்றமும் கூறாமல் இருக்கும் போது, அவரது கட்சியினர், பொய்மான்கரடு என்றும், சோளப்பொரி என்றும் சொல்வது வேடிக்கையாக இருக்கிறது. ஆகவே, நாவலர் அவர்கள் சமர்ப்பித்துள்ள இந்த நிதி நிலை அறிக்கை ஏழை. எளிய, நடுத்தர, விவசாய மக்களுக்கும், நெசவாளர்களுக்கும், கூலித் தொழிலாளர்களுக்கும் மிகவும் நன்மை தரக்கூடியதாக அமைந்து உள்ளது என்பதனை தெரிவித்துக் கொண்டு, இது போன்ற ஒரு நிதிநிலை அறிக்கை பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மலரும் தன்மையுடைய குறிஞ்சி மலர் போல உள்ளது. இந்த அரசின் நிதிநிலை அறிக்கையானது சமுதாயப் பூங்காவில் பூத்துக் குலுங்கும் குறிஞ்சி மலராக பூத்து நிற்கிறது என குறிப்பிட்டு, இதுபோல ஒரு நிதிநிலை அறிக்கையை புரட்சித் தலைவரின் ஆட்சியில் தான் காண முடிகிறது என்பதனையும் கூறிக் கொள் கிறேன்.

மேலும், தேர்தல் நேரத்தில் எனது தொகுதியில் நடந்த வன்முறைகளைக் கூறியாக வேண்டும். நான் புத்தூர் என்னும் கிராமத்திற்கு வாக்கு கேட்கச் சென்ற போது, அங்குள்ள தி.மு.க.வினர் என்னை வாக்கு கேட்கக்கூட விட மறுத்தனர். அந்தக் கிராமத்தில் போலீஸ் உதவியுடன் நான் வாக்கு கேட்டு விட்டுச் சென்ற பிறகு (* * * * * * *). மேலும் எனது தொகுதியில் பல கிராமங்களில் கழகத் தோழர்களை அடித்தும், உதைத்தும், கொடி பேனர்களையெல்லாம் கிழித்து அட்டகாசம் செயதனர். என்னை எப்படியாவது தோற்கடிக்க வேண்டுமென்று படு பயங்கரமாக ரகளை செய்தனர். எனது தொகுதியைச் சேர்ந்த ஒருவர் இது எனக்கு மானப் பிரசினை, நான் நிறுத்தி வைத்திருக்கும் ஆள் வெற்றி பெற்றால் தமிழக போக்குவரத்து அமைச்சர் பதவி எனக்குத்தான், என்றெல்லாம் பிரச்சாரம் செய்தார். மேற்படி வன்முறை செயல்களுக்கெல்லாம் மீறி நான் புரட்சித் தலைவரின் ஆசியினால் வெற்றி பெற்று வந்துள்ளேன். எனது வெற்றியின் பெருமை புரட்சித் தலைவர் அவர்களையே சாரும். இன்றும் எனது தொகுதியைப் பொறுத்தவரை கழகத் தோழர்களுக்கு பாதுகாப்பு இல்லை. எங்கு பார்த்தாலும் தி. மு. க. வினர், கழகத் தோழர்களை அடித்தும், மிரட்டியும்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பெற்றது.

வருகின்றனர், போலீசில் சொன்னால் கூட நடவடிக்கை எடுக்க மறுக்கின்றனர். அவர்களுக்கு சாதகமானவர்களாகவே இருக்கின்றனர். ஆகவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் எனது தொகுதியில் உள்ள கழகத் தோழர்களையும், பொதுமக்களையும் காப்பாற்றக் கோருகிறேன்.

எனது தொகுதியில் பல கிராமங்களில் குடிதண்ணீர் இல்லாமலும், சரியான பாதை வசதி இல்லாமலும் மக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர்.

நான் வாக்கு கேட்கச் சென்ற போது இது பற்றி பொது மக்கள் என்னிடம் கூறியிருக்கின்றனர், ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடமும் அதிகாரிகளிடமும் சொல்லி இக்குறையினை நிவர்த்தி செய்ய வேண்டுகிறேன்.

எனது தொகுதியில் சேலத்திலிருந்து எளம்பள்ளி செல்லும் பாதையில் சிவதாபுரம் அருகில் ஒரு இரயில்வே கேட் உள்ளது. இது எப்பொழுது பார்த்தாலும் மூடியே கிடக்கிறது. இதனால் நாம் எவ்வளவு அவசரமாகச் சென்றாலும் திறப்பதில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்களே, இக் கேட்டில் அரைமணி நேரம் நிற்க வேண்டியிருந்தது. ஆகவே, அங்கு ஒரு மேம்பாலம் கட்ட மத்திய அரசுக்கு இம்மாமன்றத்தின் மூலமாக எடுத்துச் சொல்ல கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டு திரு முனுசாமி பேச அழைக்கப்பட்டார்.)

திரு அ. ரகுமான்கான் : கன்னிப் பேச்சில் குறுக்கிடக்கூடாது என்பதற்காகக் குறுக்கிடவில்லை. சபைக் குறிப்பிலும் பத்திரிகையிலும் தவறான கருத்து வந்துவிடக் கூடாது. என்பதற்காகச் சொல்லுகிறேன். * * * * * *
என்று பேசியிருக்கிறார்கள். அதுபற்றி கேஸ் பெண்டிங்காக இருப்பதால் சப்-ஜுடிஸ் ஆகிறது. ஆகவே, அது சபைக் குறிப்பில் இருக்கக்கூடாது.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் : வழக்கில் இருப்பதால் * * பற்றிக் குறிப்பிட்டதை மட்டும் சபைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்கள் திருமதி விசயலட்சுமிக்கு இன்னும் கொஞ்ச நேரம் அனுமதிக்க வேண்டும்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1980 ஜுலை 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி பொன்னம்மாள் சிபாரிசு பற்றி அடுத்த கூட்டத்தில் யோசிக்கலாம்.

*திரு மு. ப. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட மன்றத்திற்கு என்னைத் தொண்டாற்ற அனுப்பிய பாலக்கோடு தொகுதி மக்களுக்கு நன்றி கலந்த வணக்கத்தைத் கூறி என் உரையை ஆரம்பிக்கிறேன். இப்போது மன்றத்திலே வைக்கப்பட்டிருக்கும் நிதி நிலை அறிக்கையைப் பார்க்கும் போது வேளாண்மைக்கு முதல் பக்கத்திலேயே பாராட்டு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட வேளாண் மைக்குக் கொடுக்கப்பட்டு வந்த தரமான விதைகளுக்கும் பூச்சிக் கொல்லி மருந்துகளுக்கும் 25 சதவிகித மானியத்தை இரண்டாண்டுகளாகக் கொடுக்காமல் இந்த அரசு நிறுத்தி வைத் திருக்கிறது. இது விவசாயிகளுடைய முன்னேற்றத்தைப் பாதிக்க இந்த அரசு கையாண்டு வருகிற முறை என்று சொல்ல ஆசைப் படுகிறேன்.

நுகர் பொருள் வாணிபம் என்று சொல்லிக் கொண்டு 62 லட் சம் டன் உணவு உற்பத்தியை அரசு ஏற்றுக் கொண்டிருக்கும் போது இரண்டு லட்சம் டன் மாத்திரம் நுகர் பொருள் விற்பனை நிலையம் மூலமாக ஏற்றுக் கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது. மீதியுள்ள உணவுப் பொருள்களை தனியார் அதிக விலைக்கு விற்க வழி செய்திருப்பதை எடுத்துக் காட்டுகிறது.

இதுபோலவே கூட்டுறவு நிறுவனங்களிலிருந்து பல நல்ல சலுகைகள் வழங்க வேண்டுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. முன்பு உயர்மட்டக் குழு 1979 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு அந்த குழுவிலே நிவாரணத்திற்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட தொகை என்ன என்பதைப் பரிந்துரை செய்திருப்பதைப் பார்க்கும் போது அந்த தொகை வசூல் ஒத்திவைப்பினால் தண்ட வட்டியும், வசூல் செய்வதற்கு ஏற்பட்ட வண்டிச் சத்தம், அலுவலர்கள் செலவினங் கள் எல்லாம் சேர்ந்து உயர்ந்த தொகையாகக் கட்டி அது பல கோடியாக உயர்ந்திருக்கிறது. எனவே, 60 கோடி ரூபாய் நிவார ணம் என்று சொல்லப்பட்டிருப்பது சரியானதல்ல என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்துக் கொண்டு வருகிறோம் என்று சொல்லிக் கொண்டு வரும் அரசு பத்து சதவிகிதம் கூட இந்த ஆண்டு எடுத்துக் கொள்ள முன்வரவில்லை. குழாய்க் கிணறுகள் எடுத்தும் பல பகுதிகளில் குடி தண்ணீர் வசதி இல்லை யென்பதை அரசுக்கு எடுத்துச் சொல்லியும் கூட அதைச் சீர்படுத்தி செம்மைப்படுத்தி குடிதண்

ணீர் வசதி செய்து கொடுக்க முடியாத நிலைமைதான் இருந்து கொண்டு வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் அது கண்கூடாக தெரிகிறது. அதை எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 1–30]

அதைப்போலவே வேலைக்கு உணவுத் திட்டம் என்று சொல்லி 50,636 டன்கள் அரிசி பயன்படுத்தப்பட்டுள்ளது என்று இதிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் வருமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்களுடைய வறுமையை எல்லாம் போக்குவதற்கு இதிலே எந்தவிதமான திட்டமும் சொல்லப்படவில்லை. இதிலே கொடுக்கப்பட்டுள்ளது, 23 லட்சம் பேர்களுக்கு மேல் வேலை செய்து, மொத்தம் 142 இலட்சம் உழைப்பு நாட்கள் பணியாற்றி இருக்கிறார்கள் என்பது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு பேரவையின் அலுவல் மேலும் அரை மணி நேரத்திற்கு நீட்டிக்கப் பெறுகிறது. தொடர்ந்து இரண்டு மணி வரை அவைக் கூட்டம் நடைபெறும்.

திரு மு. ப. முனுசாமி : மொத்த மக்கள் தொகையில் தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்கும் கீழே 53 சதவிதம் பேர்கள் இருக்கிறார்கள், இந்த நிலையில் 23 லட்சம் பேர்களுக்கு மட்டும் இந்தத் திட்டத்தின் மூலம் வகை செய்திருப்பது போதாது, வறுமைக் கோட்டிற்கு கீழே உடையவர்களுடைய வறுமையைப் போக்குவோம் என்று சொல்லிவிட்டு அதைக் காப்பாற்றுவதற்கு இந்த அரசு தவறிவிட்டது. என்று குற்றஞ் சாட்ட விரும்புகிறேன். எதிர்க்கட்சித் தலைவரை வைத்து ஆராய்ந்து பார்த்து திட்டங்களை வகுத்திருந்தால் நல்ல முறையிலே அமைந்திருக்கும். அப்படியில்லாமல் ஏதோ செய்துவிட்டு இருக்கிற நிலைமைகளை எடுத்துச் சொல்கிறபோது, எதிர்க்கிறார்கள், எதிர்க்கிறார்கள் என்று சொல்லுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நல்ல பல பயனுள்ள திட்டங்கள் பற்றி இந்த நிதிநிலை அறிக்கையிலே இல்லாத காரணத்தினாலே நாங்கள் இதைக் கண்டிக்கின்ற நிலைமையிலே தான் இருக்கிறோம். வரவினங்களைப் பற்றியே காட்டிக்கொண்டிருக்கிற இந்த நிதி நிலை அறிக்கையைக் கண்டிக்காமல் என்ன செய்வது? அந்த முறையிலே நல்ல முறையிலே இதிலே செலவினங்களையும் காட்டியிருக்க வேண்டும். இந்த நாட்டிலே உள்ள வறுமையைப் போக்க வேண்டுமென்றால் இந்த நாட்டிலே 2½ கோடி மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறார்கள் ஆனால் 23 லட்சம் பேர்கள் பயனடைகின்ற திட்டம் மட்டுமே போடப்பட்டிருக்கிறது என்றால் யார்தான் இதை ஆதரிப்பார்கள்?

முதியவர்கள், கைம்பெண்கள், ஊனமுற்றோர்கள் அனைவருக்கும் 20 சதவீதம் பேர்களுக்குக் கூட இந்தப் பயன்கள் கிடைக்கவில்லை. அடுத்த ஆண்டிலாவது இந்த மாதிரி குறைகள் இல்லாத முறையிலே நிதியமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குமரசெட்டி ஏரி கட்டப்பட வேண்டுமென்று 2 ஆண்டுகளாக சொல்லப்பட்டு வந்தும்கூட இதுவரையில் கட்டி முடிக்காத நிலையில் இருக்கிறது. என்ன காரணம் என்றே தெரியவில்லை. அதைப்போலவே கெசரகுலி ஏரி, கெண்டேனஅல்லி ஏரி ஆகிய இரண்டு ஏரிகளைப் பொறுத்த வரையில் மதிப்பீடுகள் தயாரிக்கப் பட்டும் இன்னும் வேலை தொடங்கப்படாமல் இருக்கின்றது. இவைகளை செய்வதில் அரசாங்கம் அக்கறை காட்ட வேண்டும். தும்பல அள்ளி நீர்த்தேக்கத் திட்டத்தில் ஏற்கெனவே கால்வாய் எடுக்க சர்வே செய்த ஊராட்சிகள் பைசு அள்ளி, பூமாண்ட அள்ளி காளப்பன அள்ளி ஆகியவை சம்பந்தப்பட்ட விவசாயிகள் தங்களுடைய கோரிக்கையைத் தெரிவித்து இருக்கிறார்கள். அதைப் போலவே பஞ்சப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டத்திலிருந்து காட்டம்பட்டி, புலிக்கரை, பொடுத்தம்பட்டி, கொல்லியம்பட்டி ஆகிய ஊராட்சிகளின் கிராமங்களுக்கு கால்வாய்மூலம் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படித் தண்ணீர் கொடுத்தால் 5 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி கிடைக்கும், உணவு உற்பத்தியும் பெருகும். ஆகவே அவைகளையும் இந்த அரசு கவனிக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். (மணியடிக்கப்பெற்றது).

திரு, என். விஜயபாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே இன்றைய தினம் முதன் முதலாக இந்த மாமன்றத்திலே பேசுகின்ற வாய்ப்பை நல்கிய வரலாற்றுச் சிறப்பு மிக்க பூம்புரர் தொகுதிவாழ் மக்களுக்கும், அதற்கு அடித்தளமிட்ட என்னை ஆளாக்கிய புரட்சித் தலைவரவர்களுக்கும் என்னுடைய நன்றியறிதலையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

1980-81-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை மதிப்பீட்டின் மீது ஒரு சில கருத்துரைகளைக் கூறி முடித்து விடலாம் என்று கருதுகிறேன். மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் மனங் கனிந்து அளித்த 1980–81-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை, ஏழை மக்களுக்காகவும் வறுமையில் வாடுகின்ற மக்களுக்காகவும் அர்ப்பணித்த ஒரு சிறந்த வரவேற்கத் தக்க அறிக்கையாகும். குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்கள் மகிழ்ச்சியடையக் கூடிய வகையிலே இந்த நிதிநிலை அறிக்கையை அளித்திருப்பது பாராட்டுக்தலுக்குரிய ஒன்றாகும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பல்வேறு பட்ட நன்மைகளைச் செய்து வருகின்ற புரட்சித் தலைவருடைய அரசு சிறு விவசாயிகளுக்கு ஏறக்

குறைய 60 கோடி ரூபாய்க் கடன்களை ரத்து செய்ய முன் வந்திருப்பது விவசாயிகளின் வயிற்றில் பால் வார்த்ததைப் போன்று இருக்கிறது. நல்ல உள்ளம் படைத்த அத்தனை பேராலும் நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ள இந்த மகிழ்ச்சி கரமான செய்தி பாராட்டுவதற்குரிய ஒன்றாகும்.

இன்றைக்கு அலைமோதும் கடலோடு தங்கள் வாழ்வைப் பிணைத்துக்கொண்டிருக்கிற மீனவர்களுக்குக் குடிநீர் வசதி பெறும் வகையில் திட்டம் இருக்கின்றது. மீனவர்களுக்கு வீடு கட்டும் திட்டத்திற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டிருப்பதும் பாராட்டுதலுக்குரியதாகும். மீனவர்களுக்குப் பல்வேறுபட்ட காரியங்களைச் செய்து வருகின்ற இந்த அரசுக்கு நான் ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். என்னுடைய பூம்புகார் தொகுதியில் ஏறக்குறைய 15,000-க்கும் மேற்பட்ட மீனவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுடைய வாழ்வு பல்லாண்டுக்காலமாக முன்னேற்றப்படாமல் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்துவரும் திட்டங்களில் அந்த மீனவர்களின் நலனை மனத்திற்கொண்டு அவர்களின் நல்வாழ்விற்கான பல திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

பூம்புகார்த் தொகுதி என்றாலே புரியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். ஏனென்றால் கோவலன்—கண்ணகி வரலாறும், பூம்புகார் துறைமுகப் பட்டணமாகத் திகழ்ந்த வரலாறும் நாடறிந்த ஒன்றாகும். அதற்காக நான் இப்பொழுது, பூம்புகாரை ஒரு துறைமுகப்பட்டணமாக மாற்ற வெண்டுமென்று கேட்கவில்லை. ஒன்றாலும் அங்கே ஒரு மீன் பிடி துறைமுகம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதன்மூலம் அங்கே வாழும் மீனவர்களின் எதிர்காலமும் சிறப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேநேரத்தில் மீனவர்கள் சாலை வசதியற்ற நிலையிலேயும், புயலால் அடிக்கடி பாதிக்கப்படும், குடிசைகளில் வாழ்கிறார்கள். அவர்களுக்குச் சாலை வசதியும், வீட்டு வசதியும் செய்து தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

விசைப்படகுகள் வழங்கி மீனவர்களின் வாழ்வு முன்னேறுவதற்கு வழிவகை செய்து தர வேண்டும்.

1980 ஜூலை 8] [திரு. என். விஜயபாலன்]

பூம்புகாரை ஒரு தொழில் நகரமாக அமைத்து, சுற்றுப் புறத்திலிருக்கின்ற படித்தவர்களும், பாமரர்களும் வேலை வாய்ப்பைப் பெறுகின்ற சூழ்நிலையை உருவாக்கித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சோழர் காலத்தில் பூம்புகார் பெற்றிருந்த பொலிவினைப் புரட்சித் தலைவர் காலத்தில் பெற வேண்டுமென்று என்னுடைய தொகுதி மக்கள் உறுதியாக நம்பிக்கொண்டு இருக்கின்றார்கள் அந்த நம்பிக்கையை இந்த அரசு செயல்படுத்தும் என்று எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

வேலைக்கு உணவுத் திட்டத்திற்கு 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும், ஒரு இலட்சம் டன் அரிசி அளிக்க வேண்டு மென மத்திய அரசைக் கோரியும் இருக்கிறது. இது சில நாட்கள் வேலை, பல நாட்கள் பட்டினி கிடக்கின்ற பாட்டாளி களுக்கு வாழ்வளிக்கின்ற திட்டமாகும். உழைப்பவர்களே உயர்ந்தவர்கள் என்றும் சொல்லும் புரட்சித் தலைவரவர்கள் தாங்கள் சொல்வதைத் சொல்லோடு நிறுத்திக் கொள்ளாமல் ஏழை எளிய, உழைக்கின்ற வர்க்கத்தை முன்னேற்றுவதற்கான திட்டமாக இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

பட்டினிச் சாவு ஏற்படாமல் தடுக்கும் வகையில், அவர்கள் கிராம வளர்ச்சி அலுவலரிடம் சென்று தம் நிலைமையை எடுத்துக் கூறி 100 ரூபாய் உதவித் தொகை பெறலாம் என்று அறிவித் திருப்பது, மனிதனுக்கு மனிதன் காட்டக்கூடிய ஒரு மனிதாபி மானப் பிரச்னை என்றாலும், யாரை ஏமாற்றி எப்படிப் பிழைக்க லாம் என்று இருக்கின்ற இந்த உலகில் பசியால் வாடும் மக்களுக்கு தங்களால் ஆன ஒரு காரியமாக இந்தத் திட்டம் ஒரு சிறந்த திட்டமாக இருக்கிறது. இதை ஏழை எளிய மக்கள் நிச்சயமாக பாராட்டுவார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதைப்போல ஏழ்மை நிலையில் உள்ள கருவுற்ற மக ளிருக்கு, ஏழாம் மாதம் முதல் குழந்தை பிறந்த நான்கு மாதம் முடியும் வரை சத்துணவு வழங்கப்படும், மாதந் தோறும் அவர்கள் உடல்நலம் பரிசோதிக்கப்பட்டு தக்க அடிப்படை மருந்துகளும் வழங்கப்படும் என்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது. இவ்விரண்டு வசதிகளுக்காக 150 ரூபாய்க் குக் குறையாமல் செலவிடப்படும் என்று அறிவித்திருப்பது ஆதரவற்ற ஏழைகள் வாழ்வு சிறப்பாக அமைய, புரட்சித் தலைவர் அவர்களின் அரசு தாய்க்குலத்திற்கு எந்த அள விற்கு மரியாதை கொடுக்கக் கூடியதாக இருக்கிறது என்பதை

எடுத்துக் காட்டக் கூடிய திட்டமாகும். ஆகவே, இந்தத் திட்டங்களைப் பாராட்டி, வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1–40)

*திரு. பி. மொக்கையன்: மாண்புமிகு அவைத் தலைவா அவர்களே, அஞ்சாநெஞ்சன் நேதாஜியால் உருவாக்கப்பட்டு, தெய்வத் திருமகனால் வளர்க்கப்பட்ட பார்வேர்ட் பிளாக் கட்சியின் சார்பிலே, சாதாரண சாமானியத் தொண்டனாகிய எனக்கு இந்த நிதிநிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப் பளித்த தங்களுக்கு என் மனமார்ந்த நன்றியை மிகப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையானது இதுவரையிலும் எந்த அரசும் செய்யாத, செய்ய முடியாத அளவிற்கு, ஏழை மக்களின் துயர் துடைக்கும் அறிக்கை என இந்தக் கோடானு கோடி ஏழைகளில் ஒருவனாகிய நான் அந்த ஏழை மக்களின் சார்பிலே உளமாரப் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் தலைவர் திரு. முத்துராமலிங்கத் தேவர் திருமகன் 1952-ல் இதே மாமன்றத்திலே நிதிநிலை அறிக்கையில் பேசுகின்றபொழுது என் போன்ற ஆயிரக்கணக்கான தொண்டர்கள் சிறை சென்று ரத்தம் சிந்தி பெற்ற சுதந்திரத்தை எந்தத் தியாகமும் செய்யாத வர்கள் ஆட்சியில் உட்கார்ந்து கொண்டு ஏழை எளிய மக்களுக்கு எந்த நன்மையும் செய்யாத அறிக்கையை அளித்துள்ளார்கள் என்று பேசி உள்ளார். இந்த நிதிநிலை அறிக்கையானது அது போன்றது அல்ல, பல நல்லவை அடங்கிய, ஏழைகள் போற்று தற்குரிய அறிக்கை என்பதை நான் மிகப் பணிவன்புடன் தெரி வித்துக்கொள்கிறேன்.

